# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

## கைத்தறி மற்றும் துணிநூல்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022 - 2023

## மானியக் கோரிக்கை எண். 17


# ஆர். காந்தி

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2022

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2022-2023



| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | கைத்தறி துறை | 1 - 184 |
| 2 | துணிநூல் துறை | 185 - 295 |

# கைத்தறி துறை

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | கைத்தறி துறை | 17 |
| 3 | திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் | 25 |
| 4 | விருதுகள் மற்றும் கல்வி உதவித் தொகை | 79 |
| 5 | கைத்தறி வளர்ச்சி மற்றும் பிரபலப்படுத்தும் திட்டங்கள் | 96 |
| 6 | பயிற்சி கொள்கை | 115 |
| 7 | தகவல் தொழில்நுட்ப முனைப்புகள் | 125 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| 8 | துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் | | 131 |
| | 8.1 | தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ-ஆப்டெக்ஸ்), சென்னை | 131 |
| | 8.2 | தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம் | 152 |
| | 8.3 | தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு | 160 |
| | 8.4 | தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை | 166 |
| 9 | நீடித்த வளர்ச்சி இலக்குகள் | | 172 |
| 10 | கைத்தறி துறையின் 2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு | | 176 |
| 11 | தமிழ்நாடு கைத்தறி செறிவுப் பகுதிகள் | | 179 |

# துணிநூல் துறை

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1 | முன்னுரை | | 185 |
| 2 | துணிநூல் துறை | | 187 |
| 3 | உலகளாவிய துணித்தொழில் நிலவரம் | | 196 |
| 4 | தேசிய துணித்தொழில் நிலவரம் | | 199 |
| 5 | தமிழ்நாட்டில் துணிநூல் மதிப்புச் சங்கிலியின் பல்வேறு பிரிவுகள் | | 201 |
| | 5.1 | பருத்தி வேளாண் சாகுபடி | 202 |
| | 5.2 | பருத்தி விதை நீக்கும் பிரிவு | 207 |
| | 5.3 | நூற்புப் பிரிவு | 212 |
| | 5.4 | நெசவு மற்றும் பின்னலாடைகள் | 219 |
| | 5.5 | பதனிடும் பிரிவு | 224 |
| | 5.6 | ஆடைகள் மற்றும் பின்னலாடைகள் பிரிவு | 233 |
| | 5.7 | பாதுகாப்பு, வாகனம் மற்றும் மருத்துவ ஜவுளிகள் (தொழில்நுட்ப ஜவுளிகள்) | 240 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| 6 | துணிநூல் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | | 268 |
| | 6.1 | ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் திட்டம் | 268 |
| | 6.2 | சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் | 272 |
| | 6.3 | திருப்பூரில் உள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் | 272 |
| | 6.4 | ஒருங்கிணைந்த பதனிடுதல் மேம்பாட்டுத் திட்டம் | 277 |
| | 6.5 | பிரதமரின் மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலங்கள் மற்றும் ஆடை பூங்கா | 283 |
| | 6.6 | மாநில ஜவுளி ஆலோசனைக் குழு | 285 |
| 7 | தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை | | 286 |
| 8 | நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் | | 290 |
| 9 | துணிநூல் துறையின் 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு | | 294 |

# கைத்தறி


## 1. முன்னுரை

### கைத்தறி தொழில்

இந்தியாவின் வளமான, காலங்களைக் கடந்த கலாச்சார பாரம்பரியத்தினை கைத்தறி தொழில் பிரதிபலிக்கிறது. இத்தொழில் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. கைவினைச் சிறப்பை வெளிப்படுத்தும் நீண்ட பாரம்பரிய கலையாக நெசவுத் தொழில் விளங்கி வருகிறது. குறைந்த மூலதனச் செறிவு, அதிகளவிலான மனிதவள பயன்பாடு, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் தனித்துவம் வாய்ந்த இரகங்களின் சிறிய அளவிலான உற்பத்திக்கான நெகிழ்வுத்தன்மை ஆகியன இத்தொழிலின் சிறப்பம்சங்கள் ஆகும். இத்தொழில் ஒரு

தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு திறனை கொண்டு செல்வதன் மூலம் மற்றும் வாடிக்கையாளர்களின் மாறிவரும் தேவைக்கேற்பவும், சந்தைத் தேவைகளுக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்வதன் மூலமாகவும் நீடித்து வருகிறது.

நான்காவது அகில இந்திய கைத்தறி கணக்கெடுப்பு 2019-2020-ன்படி, கைத்தறிகளின் எண்ணிக்கையில், அசாம் மற்றும் மேற்கு வங்க மாநிலங்களுக்கு அடுத்தபடியாக, தமிழ்நாடு மூன்றாம் இடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் 2.44 இலட்சம் கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதுடன் நாட்டில் உள்ள மொத்த கைத்தறிகளின் எண்ணிக்கையில் 7.07 சதவீதமும், நெசவாளர்களின் எண்ணிக்கையில் 6.90 சதவீதமும் பங்களிக்கிறது.





விவசாயத்திற்கு அடுத்தபடியாக, கைத்தறி தொழிலானது ஒரு பொருளாதார நடவடிக்கையாக மாநிலத்தில் கிராமப்புற பகுதிகளில் அதிகளவில் வேலைவாய்ப்பு வழங்கி முக்கிய பங்கு வகித்து வருகிறது.

தமிழ்நாட்டின் கைத்தறித் தொழில் பல்லாயிரம் ஆண்டு தொன்மையும், உயரிய பாரம்பரிய சிறப்பும், சிறப்பான வேலைப்பாடுகள் கொண்ட கைவினைத் தொழிலாகும். மாநிலத்தின் கைத்தறி நெசவு ஆயிரம் ஆண்டுகளுக்கு

முற்பட்டதாகும். இந்திய அளவில் கைத்தறி தொழிலில் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக திகழ்வதுடன், உலகளவில் பிரசித்தி பெற்ற உயர் தரத்திலான கைத்தறி இரகங்களை நுணுக்கமான வேலைப்பாடுகள், வடிவமைப்புகள் மற்றும் பல்வேறு வண்ணக்கலவைகளுடன் உற்பத்தி செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் 35 மாவட்டங்களில் அந்தந்த பகுதிகளின் தனித்துவ வேலைப்பாடுகள் மற்றும் தோற்றத்தின் அடிப்படையில், பல்வேறு வகையான கைத்தறி இரகங்கள் உற்பத்தி செய்யும் கைத்தறி செறிவுப் பகுதிகளாக உள்ளன. தமிழ்நாட்டின் கைத்தறி நெசவாளர் குடும்பங்களில் 60 விழுக்காட்டினர் கூட்டுறவு அமைப்பிலும், எஞ்சிய 40 விழுக்காட்டினர் தனியார் நெசவாளர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் அமைப்புசாரா முறையிலும் என இரு வகைகளில் நெசவுத் தொழில் செய்து வருகின்றனர்.

# தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி செறிவுப் பகுதிகள்





**கைத்தறி**

தேசிய அளவில் கைத்தறி தொழிலில் வேலைவாய்ப்பு பெறுபவர்களின் எண்ணிக்கை 1970-ஆம் ஆண்டில் 124 இலட்சத்திலிருந்து, தற்போது 35 இலட்சமாக குறைந்துள்ளது. சற்றேறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு மேலாக கைத்தறி நெசவாளர்கள் வேறு தொழில்களுக்கு செல்வதாலும், மாநிலத்தின் கல்வி அறிவு வெகுவாக முன்னேறி உள்ளதால் அதிக வருவாய் ஈட்டும் தொழில்களுக்கு செல்வதாலும், தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர்களின் எண்ணிக்கை குறைந்து வரும் போக்கு காணப்படுகிறது.

விசைத்தறிகள், தானியங்கி தறிகள் மற்றும் அவற்றின் அதிகளவிலான உற்பத்தி திறனால் தமிழ்நாட்டின் கைத்தறி தொழில் பல்வேறு சவால்களை சந்தித்து வருகிறது.

கைத்தறி தொழிலை சார்ந்துள்ள நெசவாளர்களை தக்க வைத்துக்கொள்வதும், இத்தொழிலை நம்பியுள்ள இலட்சக்கணக்கான நெசவாளர்களுக்கு தொடர்ந்து வாழ்வாதாரம் ஏற்படுத்துவதுமே அரசின் அணுகுமுறை ஆகும். இதற்கு, சந்தையில் அதிகளவில் விற்பனையாகும் இரகங்களை உற்பத்தி செய்வதற்கான திறனை தொடர்ந்து மேம்படுத்துவது, உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில் தொழில்நுட்ப மேம்பாடு, சந்தையில் போட்டியிடும் வகையில் தரமான இரகங்களை உற்பத்தி செய்வது, இத்தொழிலின் அனைத்து நிலைகளிலும் இரக மாற்றம் மேற்கொள்வது மற்றும் சர்வதேச அளவில் பெருமளவு சந்தை தேவை உள்ள

இரகங்களை உற்பத்தி செய்வதற்கான தொடர் வடிவமைப்பு உள்ளீடுகள் போன்ற நடவடிக்கைகள் தேவையாக உள்ளன.

கைத்தறி தொழிலின் கலை மற்றும் கலாச்சாரத்தினை பாதுகாக்கவும், நெசவாளர்களை தக்க வைத்துக்கொள்ளவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன் பொருட்டு ஜவுளித்தொழிலின் மதிப்பு தொடரில் வலுவான உட்கட்டமைப்பு, ஜவுளித் தொடரின் அனைத்து நிலைகளிலும் பல்வேறு நடவடிக்கைகள், வடிவமைப்புகள் உருவாக்குவதற்கு கோ-ஆப்டெக்ஸ் மற்றும் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம், தேசிய வடிவமைப்பு நிறுவனம் மற்றும் பிற வடிவமைப்பாளர்களுடன் இணைந்து செயல்படுதல், மூலப்பொருள் உற்பத்திக்கு கூட்டுறவு நூற்பாலைகள், நெசவுக்கு தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு


சங்கங்கள், சந்தைப்படுத்துதல் மற்றும் விற்பனைக்கு கோ-ஆப்டெக்ஸ், லூம்வேர்ல்டு மற்றும் தொடக்க சங்கங்களின் விற்பனையகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஒன்றிய ஜவுளி அமைச்சகத்தின் கைத்தறி வளர்ச்சி ஆணையரின் கட்டுப்பாட்டில் கீழ் தமிழ்நாட்டில் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் சேலம் பகுதிகளில் செயல்பட்டு வரும் நெசவாளர் சேவை மைய அலுவலகங்களும் மாநிலத்தின் கைத்தறி தொழிலின் வளர்ச்சிக்கு தேவையான பல்வேறு சேவைகளை வழங்கி வருகிறது.

கைத்தறி தொழிலில் சிறந்த வடிவமைப்புகளை உருவாக்கும் பொருட்டும், நெசவாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் தங்களது வடிவமைப்புகள் மற்றும் இரகங்களை மேம்படுத்தும் பொருட்டும், தங்களுக்கு தேவையான வடிவமைப்புகளை பெற்றுக்கொள்ளும் வகையிலும், காஞ்சிபுரம் நெசவாளர்

சேவை மையத்தில் "கைத்தறி வடிவமைப்பு ஆதார மையம்" செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 31.03.2022 நிலவரப்படி 1,107 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கைத்தறி நெசவாளர்கள் பெருமளவில் வசித்து வரும் கிராமம் மற்றும் புறநகர் பகுதிகளில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. 2021-22-ஆம் ஆண்டில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ரூ.1021.61 கோடி மதிப்பிலான கைத்தறி துணிகள் உற்பத்தி செய்து, ரூ.1284.63 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளன.




**விசைத்தறி தொழில்**

ஜவுளித் தொழிலின் பிரிவுகளில், துணி உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குவதில் விசைத்தறி தொழில் ஒரு முக்கிய பிரிவாகும். ஆயத்த ஆடை பிரிவு மற்றும் வீட்டு உபயோக ஜவுளி இரகங்கள் பிரிவு ஆகியவை தங்களின் துணித்தேவைக்கு விசைத்தறி தொழிலையே வெகுவாக நம்பியுள்ளது. இத்தொழிலின் தொழில்நுட்ப நிலையானது சாதா தறியிலிருந்து உயர் தொழில்நுட்ப நாடாயில்லா விசைத்தறி வரை உள்ளது. விசைத்தறி தொழிலில்


மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக அதிகளவில் விசைத்தறிகள் உள்ள மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. விசைத்தறி தொழிலில் காடா மற்றும் பதனிடப்பட்ட துணி இரகங்கள் பெருவாரியாக உற்பத்தி செய்யப்படுகிறது. விசைத்தறி தொழிலில் துணி உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதும் வேகமாக அதிகரித்து வருகிறது. மேலும், நாட்டில் ஏற்றுமதி வருவாய் ஈட்டுவதிலும் இத்தொழில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. தாராளமயமாக்கப்பட்ட பொருளாதார சூழ்நிலைகளில், உரிமம் பெறப்படாத விசைத்தறி தொழில் சீரான முறையில் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது.




**விசைத்தறி கூடத்தில் விசைத்தறி தொழிலாளர்**

இந்தியாவில் மொத்தம் உள்ள 24.86 இலட்சம் விசைத்தறிகளில், நமது மாநிலத்தில் ஏறத்தாழ 5.63 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன. இதில், 68,119 விசைத்தறிகள், தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்பில் 223 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் இயங்கி வருகின்றன.

## தமிழ்நாட்டில் உள்ள விசைத்தறி செறிவுப் பகுதிகள்



தமிழ்நாட்டில் உள்ள விசைத்தறிகளின் எண்ணிக்கை




விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பள்ளி மாணாக்கர்களுக்கு தேவைப்படும் சீருடை துணிகள் மற்றும் வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கான துணிவகைகள் பெருமளவில் உற்பத்தி செய்து வருகின்றன. 2021-22-ஆம் ஆண்டில் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் ரூ.616.50 கோடி மதிப்பில் 17.85 கோடி மீட்டர் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

விசைத்தறி தொழில் தற்போது ‘‘குறைந்த உற்பத்தி திறன்’’ மற்றும் ‘‘இத்தொழில் ஈடுபட்டுள்ளவர்களின் குறைந்த பணித்திறன்’’ ஆகிய இரண்டு முக்கிய சவால்களை எதிர்கொண்டு வருகிறது.

எனவே, விசைத்தறி தொழிலின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அரசு பின்வரும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வருகிறது:

- உற்பத்தி திறன் மற்றும் திறன் மேம்பாட்டுக்கு தேவையான உட்கட்டமைப்புகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பது ;
- பல்வேறு வகையான திட்டங்கள் மற்றும் பங்களிப்புடன் இத்தொழிலின் வளர்ச்சியில் கவனம் செலுத்துவது ;
- தொழில்நுட்ப மேம்பாட்டுடன் கூடிய நவீன தறிகளை நிறுவுதல் மற்றும் அதிகளவில் உயர்தொழில் நுட்ப நெசவுப் பூங்கா அமைத்தல் ;

- தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையில் வகுக்கப்பட்டுள்ள ஊக்கத்தொகைகளை விசைத்தறி தொழிலுக்கு வழங்குதல்.

மேற்காணும் நடவடிக்கைகள், இத்தொழிலில் உற்பத்தி திறனை அதிகரிப்பதோடு அதிகமான வேலை வாய்ப்பினை உருவாக்குவதையும் உறுதி செய்யும்.

## 2. கைத்தறி துறை

கைத்தறி, விசைத்தறி மற்றும் துணிநூல் பிரிவுகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை முதன்மை நோக்கமாக கொண்டு, 1956-ஆம் ஆண்டில் கூட்டுறவு துறையிலிருந்து கைத்தறி மற்றும் துணிநூல் துறை தனியாக பிரிக்கப்பட்டது.

தற்போது, துணிநூல் பிரிவில் தனி கவனம் செலுத்த ஏதுவாக, 2021 ஆம் ஆண்டில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை இரண்டாக பிரிக்கப்பட்டு துணிநூல் துறை என்ற தனி

துறை உருவாக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.10.2021 அன்று இப்புதிய துறை தொடங்கி வைக்கப்பட்டு, துணிநூல் ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் தனித்துறையாக செயல்பட்டு வருகிறது.




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 23.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில் முன்னாள் கைத்தறி மற்றும் துணிநூல் துறையினை பிரித்து புதிதாக உருவாக்கப்பட்ட துணிநூல் துறையினையும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் புதிய ஆடை இரகங்களையும் தொடங்கி வைத்தார்கள்.**

கைத்தறி மற்றும் விசைத்தறி பிரிவுகளின் ஒருமித்த வளர்ச்சி மற்றும் இத்தொழிலை சார்ந்துள்ள நெசவாளர்கள், தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவரின் நல்வாழ்வினையும் மேம்படுத்தும் முதன்மை நோக்கத்தினை கைத்தறி ஆணையர் கவனித்து வருகிறார்.

மாநிலத்தில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், இத்தொழிலுக்குத் தொடர்புடைய இதர கூட்டுறவு அமைப்புகளுக்கும் கைத்தறி ஆணையர் “செயற்பதிவாளராக" செயல்படுகிறார். இதற்காக தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் விதிகள் 1988-இன் கீழ் இவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**கைத்தறி துறையின் நோக்கங்கள்** :

கைத்தறி துறையின் நோக்கங்கள் பின்வருமாறு :


- கைத்தறி துணிகளின் உற்பத்தி மற்றும் தரத்தினை மேம்படுத்துதல்,
- கைத்தறி நெசவாளர்களின் உடல் வேலைப் பளுவினை குறைத்தல்,
- நெசவுக்கு முந்தைய பணிகள் மற்றும் நெசவுக்கு பிந்தைய பணிகளில் தேவையான தொழில்நுட்ப மேம்பாடுகளை புகுத்துதல்,
- சந்தையில் போட்டியிடுவதற்கு ஏதுவாக புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சி (மற்றும்) உருவாக்குதல் மூலம் போட்டித் தன்மையை ஏற்படுத்துதல்,

- நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான சிறந்த தொழில் சூழலை உறுதி செய்தல்,
- நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு சிறந்த கூலி வழங்குதல்,
- சந்தைப்படுத்த ஏதுவான இரகங்ளை உற்பத்தி செய்வதற்கான உற்பத்தி (மற்றும்) வடிவமைப்பில் புதுமைகளை புகுத்துதல்,
- தொழில்நுட்ப தளத்தினை பயன்படுத்தி பரந்த சந்தையினை அணுகுதல்,
- நெசவாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்துள்ளவர்களுக்கு வாழ்க்கை சுழற்சி அணுகுமுறையிலான சமூகப் பாதுகாப்பு வழங்குதல்.

துறை அனைத்துப் பிரிவுகளுக்கும் தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதையும், நியாயமான விலையில் துணி உற்பத்தியினை அதிகரிக்கச் செய்வதையும், உற்பத்தி செய்யப்பட்ட துணிவகைகளின் விற்பனையினை மேற்கொள்வதற்குத் தேவையான சூழ்நிலையினை உருவாக்குவதையும் உறுதி செய்கிறது.

துறையின் நோக்கங்களான நெசவாளர்களின் சமூக, பொருளாதார, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடன், அவர்களின் நலனுக்கென உருவாக்கப்பட்ட பல்வேறு நலத்திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும், இத்துறையின் 20 சரக கைத்தறி துணை இயக்குநர்கள்/உதவி இயக்குநர்கள் மூலமாக செயல்படுத்துவதையும் கைத்தறி துறை மேற்கொண்டு வருகிறது.

கைத்தறி துறையின் நிர்வாக அமைப்பினை விளக்கும் நிர்வாக வரைபடம் பின்வருமாறு :



இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பல்வேறு நிறுவனங்களின் விபரம் பின்வருமாறு:-

- 1,107 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்.
- 223 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்.
- தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), சென்னை.
- தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்.
- தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு.
- தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை.

## 3 திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள்

### 3.1 வேட்டி சேலை வழங்கும் திட்டம்

வேட்டி சேலை வழங்கும் திட்டம், தமிழக அரசினால் 1983-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மிக சீரிய திட்டங்களில் ஒன்றாகும். பொங்கல் பண்டிகையின்போது கிராமப்புற மற்றும் நகர்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு வேட்டி சேலைகள் வழங்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்திற்கு தேவையான மொத்த சேலைகள் மற்றும் வேட்டிகள் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இத்திட்டம் 2,664 கைத்தறி நெசவாளர்கள், 11,124 பெடல்தறி நெசவாளர்கள் மற்றும் 41,983 விசைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதை உறுதி செய்வதுடன், தமிழகத்திலுள்ள கிராமப்புற

மற்றும் நகர்புறங்களில் வசிக்கும் 3.59 கோடி மக்களின் துணி தேவையினையும் பூர்த்தி செய்கிறது.



**வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்**

**சேலைகள் மற்றும் வேட்டிகள்**

அரசு இத்திட்டத்தினை பொங்கல் 2022-க்கு செயல்படுத்தும் பொருட்டு 2021-2022-ஆம் ஆண்டில் ரூ.493.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வழங்கியது. பொங்கல் பண்டிகை 2022-யினை முன்னிட்டு வேட்டி சேலைகளை பயனாளிகளுக்கு வழங்கும் பொருட்டு, 179.59 இலட்சம் சேலைகள் மற்றும் 179.36 இலட்சம் வேட்டிகள் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருவாய்த் துறையிடம் வழங்கப்பட்டது.

| **வ. எண்** | **இரகம்** | **எண்ணிக்கை** (இலட்சத்தில்) | | **மதிப்பு** (ரூபாய் கோடியில்) | |
|---|---|---|---|---|---|
| | | **சேலைகள்** | **வேட்டிகள்** | **சேலைகள்** | **வேட்டிகள்** |
| 1 | கைத்தறி | 3.02 | 4.63 | 8.31 | 9.43 |
| 2 | பெடல்தறி | 47.97 | 17.98 | 105.38 | 27.84 |
| 3 | விசைத்தறி | 128.60 | 156.75 | 259.97 | 177.44 |
| | **மொத்தம்** | **179.59** | **179.36** | **373.66** | **214.71** |




**கைத்தறி மற்றும் பெடல்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்குதல்**

வேட்டி சேலை வழங்கும் திட்டத்தில் சேலை மற்றும் வேட்டி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர் வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு, இத்திட்டத்தின்கீழ் கைத்தறி மற்றும் பெடல் தறி நெசவாளர்களுக்கு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் முடிய முன் உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

**நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி**

வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி வேட்டி சேலைகளுக்கு நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி 01.11.2021 முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | இரகம் | ஒரு உருப்படிக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி (ரூ) | ஒரு உருப்படிக்கு தற்போது உயர்த்தி வழங்கப்படும் நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி (ரூ) |
|---|---|---|---|
| 1 | கைத்தறி சேலை | 20.50 | **26.67** |
| 2 | பெடல்தறி சேலை | 20.50 | **26.67** |
| 3 | கைத்தறி வேட்டி | 10.30 | **12.36** |
| 4 | பெடல் தறி வேட்டி | 10.30 | **12.36** |

வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை செயல்படுத்த 2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.493.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.2 பள்ளி மாணாக்கர்களுக்கு சீருடை வழங்கும் திட்டம்**


அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு வருடமும் சீருடை வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம், சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை கல்வி பயிலும் பள்ளி மாணாக்கர்கள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் நான்கு இணைச் சீருடைகள் பள்ளி மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.



**சீருடையில் பள்ளி மாணாக்கர்கள்**

2021-2022 ஆம் கல்வியாண்டில் சமூக நலத்துறை மூலம் சீருடைகளை தைத்து பள்ளிக் கல்வித் துறையின் மூலம் மாணாக்கர்களுக்கு விநியோகம் செய்ய ஏதுவாக 489.69 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் ரூ.339.02 கோடி மதிப்பில் கீழ்க்கண்டவாறு உற்பத்தி செய்து சமூக நலத்துறைக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | தறியின் வகை | சீருடைத் துணி அளவு (இலட்சம் மீட்டர்) | உற்பத்தி மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1 | கைத்தறி | 5.82 | 5.70 |
| 2 | பெடல்தறி | 104.09 | 66.90 |
| 3 | விசைத்தறி | 379.78 | 266.42 |
| **மொத்தம்** | | **489.69** | **339.02** |






இத்திட்டத்தில், 39,51,155 மாணாக்கர்கள் (19,73,765 மாணவர்கள் + 19,77,390 மாணவிகள்) பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தினை 2022-2023 ஆம் கல்வியாண்டில் தொடர்ந்து செயல்படுத்திட அரசு நிர்வாக அனுமதி வழங்கி முதல் தவணையாக ரூ.70.86 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, ஆகிய துறைகளுக்கு தேவையான சீருடைத் துணிகளையும், கைத்தறி துறையே வழங்கி வருகிறது.

2022-2023 ஆம் கல்வியாண்டிற்கு உத்தேச சீருடை துணி தேவை அளவு கடந்த ஆண்டின் இறுதி தேவைப்பட்டியலின்படி பின்வருமாறு உள்ளது:

| **துறையின் பெயர்** | **மொத்த சீருடை துணி தேவை (இலட்சம் மீட்டரில்)** | **மாணாக் கர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| சமூக நலத்துறை (1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை) | 489.69 | 39,51,155 |
| பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை (4-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை பயிலும் விடுதியில் உள்ள மாணவ / மாணவியர்கள்) | 3.55 | 19,750 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை (4-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை பயிலும் விடுதியில் உள்ள மாணவ / மாணவியர்கள்) | 3.51 | 18,811 |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (9-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்கள்) | 15.09 | 76,021 |
| சிறுபான்மை யினர் நலத்துறை (4-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்கள்) | 0.047 | 203 |
| **மொத்தம்** | **511.887** | **40,65,940** |

**நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி**

சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ், உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் பெடல்தறி கேஸ்மெண்ட் மற்றும் டிரில் துணி இரகங்களுக்கு வழங்கப்படும் நெசவுக்கு முந்தைய பணிகளுக்கான கூலி 09.11.2021 முதல் பின்வருமாறு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **இரகங்கள்** | **ஏற்கனவே வழங்கப்பட்ட நெசவுக்கு முந்தைய கூலி (ரூ) (மீட்டர் ஒன்றுக்கு)** | **09.11.2021 முதல் உயர்த்தி வழங்கப்படும் நெசவுக்கு முந்தைய கூலி (ரூ) (மீட்டர் ஒன்றுக்கு)** |
|---|---|---|---|
| 1 | கைத்தறி கேஸ்மெண்ட் | 4.32 | 4.89 |
| 2 | பெடல்தறி கேஸ்மெண்ட் | 4.32 | 4.89 |
| 3 | கைத்தறி டிரில் | 3.81 | 4.69 |

### 3.3 தள்ளுபடி மானியத் திட்டம்

கைத்தறி துணி விற்பனையை ஊக்குவிப்பதற்காகவும், விசைத்தறி மற்றும் ஆலைகளால் சந்தையில் கைத்தறி தொழில் எதிர்கொள்ளும் கடுமையான போட்டியை சமாளிக்கவும் தமிழக அரசால் ஆண்டுதோறும் தள்ளுபடி மானிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தால் (கோ-ஆப்டெக்ஸ்) விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளின் சந்தைப்படுத்துதலை மேம்படுத்தவும் அவற்றின் ஜவுளி இருப்பினைக் குறைக்கவும் உதவுகிறது.

தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் விற்பனை செய்யப்படும் கைத்தறி துணிகளின் சில்லறை மற்றும் மொத்த விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20% தள்ளுபடி மானியம்

அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த தள்ளுபடியானது பருத்தி இரகங்களுக்கு ஒரு உருப்படிக்கு ரூ.100/- அல்லது 20 விழுக்காடு இதில் எது குறைவோ அத்தொகை, அதே போன்று பட்டு துணிகளுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.200/- அல்லது 20 விழுக்காடு இதில் எது குறைவோ, அத்தொகை தள்ளுபடி மானியமாக வழங்கப்படுகிறது.

இது தவிர, பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு விற்பனையில் வழக்கமாக வழங்கப்படும் 20 விழுக்காடு தள்ளுபடியுடன் கூடுதலாக 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடியும் சேர்த்து, 30 விழுக்காடு தள்ளுபடி செப்டம்பர் 15-ஆம் தேதி முதல் ஜனவரி 31-ஆம் தேதி வரை 139 நாட்களுக்கு வழங்கிட ஒவ்வொரு ஆண்டும் அரசால் அனுமதி அளிக்கப்படுகிறது. இச்சிறப்புத் தள்ளுபடி மானியத் திட்டத்தின் கீழ் பருத்தி துணி வகைகளுக்கு உருப்படி ஒன்றுக்கு 30 விழுக்காடு அல்லது

ரூ.150/- மற்றும் பட்டு துணி வகைகளுக்கு உருப்படி ஒன்றுக்கு 30 விழுக்காடு அல்லது ரூ.300/- இதில் எது குறைவோ அத்தொகை தள்ளுபடி மானியமாக வழங்கப்படுகிறது.

2021-2022 ஆம் நிதி ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் தள்ளுபடி மானியத் திட்டத்திற்காக மாநில அரசு ரூ.150.00 கோடியை வழங்கியது.

2021-22–ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்பின்படி, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஆகியவற்றிற்கு நிலுவையிலுள்ள மொத்த தள்ளுபடி மானியத் தொகை ரூ.160.11 கோடியினை விடுவிக்க கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்து அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, 2021-22 ஆம் ஆண்டில் 857 தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ-ஆப்டெக்ஸ்) ஆகியவற்றுக்கு மொத்தம் ரூ.310.11 கோடி அனுமதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.150.00 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.4 கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்குதல்

கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டம் 2006-07 முதல் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு ஒருமுறை 200 அலகுகள் விலையில்லா மின்சாரம் அரசால் வழங்கப்பட்டு

வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 2021-22 ஆம் ஆண்டில் 75,995 கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கு 2021-22 ஆம் ஆண்டில் ரூ.6.26 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.6.57 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.5 விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மற்றும் மானியத்துடன் மின்சாரம் வழங்குதல்**

விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டம் 2006-07 முதல் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு

மாதங்களுக்கு ஒருமுறை 750 அலகுகள் வரை விலையில்லா மின்சாரம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 2021-22 ஆம் ஆண்டில் 1,40,637 விசைத்தறி நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**விசைத்தறி நெசவாளர்களுக்கான மின்கட்டண விகிதம்**

(மதிப்பு ரூபாயில்)

| அலகு | ஒரு அலகிற்கான மின் கட்டணம் | ஒரு அலகிற்கு அரசு வழங்கும் மானியம் | ஒரு அலகிற்கு நெசவாளர்கள் செலுத்தும் மின் கட்டணம் |
|---|---|---|---|
| 1-500 | 5.20 | 5.20 | இலவசம் |
| 501-750 | 5.75 | 5.75 | இலவசம் |
| 751-1000 | 5.75 | 3.45 | 2.30 |
| 1001-1500 | 5.75 | 2.30 | 3.45 |
| 1500 அலகுகளுக்கு மேல் | 5.75 | 1.15 | 4.60 |

இத்திட்டத்திற்கு 2021-22 ஆம் ஆண்டில் ரூ.370.67 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.389.20 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.6 வட்டி மானியத் திட்டம்**

தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், தங்களுக்குத் தேவையான நடைமுறை மூலதனக் கடன்களை தகுதிக்குட்பட்டு, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் நபார்டு வங்கியின் மறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் காசுக் கடனாகப் பெற்று வருகின்றன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், காசுக்கடனுக்குச் செலுத்த வேண்டிய வட்டிச் சுமையினைக் குறைக்கும் நோக்கத்திலும், கைத்தறி

நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கவும், வட்டி மானியத் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் காசுக்கடன் வசதிக்காக, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளால் வசூலிக்கப்படும் வட்டி விகிதத்தில் 6 விழுக்காடு வட்டித் தொகை மானியமாக அரசால் திரும்ப வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, 2021-22 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் வட்டி மானியத் தொகை ரூ.21.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் ரூ.14.02 கோடி தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.21.60 கோடி அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.7 கைத்தறி ஆதரவுத் திட்டம்

கைத்தறிப் பிரிவில் புதுமையினை புகுத்தி இரகமாற்றம் மேற்கொள்ள நிதி உதவி வழங்கும் பொருட்டு, கைத்தறி ஆதரவுத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

ஆண்டொன்றுக்கு அரசு ரூ.40.00 கோடி வீதம் 2018-19, 2019-20 மற்றும் 2020-21 ஆம் ஆண்டுகளில் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| வ. எண் | இனம் | ஆண்டுவாரியாக ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | **2018-19** | **2019-20** | **2020-21** |
| 1 | தொழில்நுட்ப மேம்பாடு | 823.68 | 744.03 | 922.83 |
| 2 | வடிவமைப்பு மேம்பாடு | 213.06 | 405.87 | 209.47 |
| 3 | உற்பத்தி இரகமாற்றம் | 312.08 | 244.23 | 94.33 |
| 4 | வணிகக் குறியீடு மேம்படுத்தல் மற்றும் நிலைநிறுத்தல் | 499.00 | 852.40 | 363.60 |
| 5 | சந்தை விரிவாக்கம் | 1494.92 | 735.28 | 1435.95 |
| 6 | நடைமுறை மூலதன உதவி | 569.58 | 764.86 | 684.40 |

| வ. எண் | இனம் | ஆண்டுவாரியாக ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | **2018-19** | **2019-20** | **2020-21** |
| 7 | ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி | 64.40 | 4.51 | 290.00 |
| 8 | மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் மற்றும் பிற இனங்கள் | -- | 446.00 | 683.79 |
| | **மொத்தம்** | **3976.72** | **4197.18** | **4684.37** |

இதன்படி, இத்திட்டத்தினை எதிர்வரும் ஆண்டுகளிலும் தொடர்ச்சியாக செயல்படுத்திடும் வகையில், 2022-23 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

## 3.8 கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம்

கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்குள் வாழும் கைத்தறி நெசவாளர்களுக்கு பிரதான் மந்திரி ஆவாஸ்

யோஜனா "அனைவருக்கும் வீடு' என்ற திட்டத்தின்கீழ், ஆண்டொன்றிற்கு (கிராமப்புறத்தில் 500 வீடுகள், நகர்ப்புறத்தில் 500 வீடுகள்) 1000 வீடுகள் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறையின் மூலம் கிராமப்புறத்திலும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் நகர்ப்புறத்திலும் கட்டி வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தினை அடுத்த ஐந்தாண்டுகளுக்கு செயல்படுத்திடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறத்தில் 365 சதுர அடி மொத்த பரப்பளவில் நெசவுக்கான இடவசதியுடன் நெசவாளர்களுக்கு கட்டப்படும் ஒவ்வொரு வீட்டிற்குமான

திட்டத் தொகை ரூ.4.00 இலட்சம் எனக் கொண்டு, **பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின்** கீழ் வழங்கப்படும் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு நிதியுடன், ஆண்டு ஒன்றிற்கு கூடுதலாக ரூபாய் 21 கோடி செலவில் இத்திட்டத்தினை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.9. சமூக பாதுகாப்புத் திட்டங்கள்

#### அ) தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

தமிழ்நாடு அரசால் 1975 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்கள் தாம் ஈட்டும் கூலியில்

ஒரு ரூபாய்க்கு எட்டு பைசா வீதம் செலுத்தி வருகின்றனர். அதற்கு நிகராக, மாநில அரசு தனது பங்காக, நெசவாளர்கள் ஈட்டும் கூலியில், ஒரு ரூபாய்க்கு 8 பைசா வீதம் வழங்குகிறது. நெசவாளர்களால் செலுத்தப்படும் சந்தா மற்றும் அதற்கு ஈடாக மாநில அரசால் செலுத்தப்படும் சந்தா ஆகிய இரண்டு தொகைகளும், அதற்கான அரசுக் கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டக் கணக்கிலுள்ள இருப்பு தொகைக்கு, மாநில அரசு 6.50 விழுக்காடு வட்டி வழங்குகிறது. இத்திட்டத்தின் வைப்புக் கணக்கில் 2020-21ஆம் ஆண்டில் இருப்பில் இருந்த தொகைக்கு, 6.50 விழுக்காடு வட்டித் தொகையாக ரூ.23.94 கோடியினை தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மார்ச் 2022 வரையில், 51,867 நெசவாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். நெசவாளர்கள் தாம் ஈட்டிய கூலியில் ஒரு ரூபாய்க்கு 8 பைசா வீதம் செலுத்திய தொகைக்கு நிகராக, மாநில அரசு ரூ.10.32 கோடியினை தனது பங்காக 2021-22 ஆம் நிதி ஆண்டில் ஒப்பளிப்பு செய்துள்ளது.





இத்திட்டத்தின்கீழ், 2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் அரசின் பங்கு தொகையாக ரூ.12.00

கோடியும், 6.5 விழுக்காடு வட்டித் தொகைக்கென ரூ.25.00 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆ) தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்**

தமிழ்நாடு அரசு கூட்டுறவு அமைப்பில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கென தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதிய திட்டத்தை 1997 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக உள்ள நெசவாளர்கள், 60 வயது எய்தும் போது இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுகின்றனர். கைத்தறி நெசவாளர்களுக்கு மாதந்தோறும் முதியோர் ஓய்வூதியமாக ரூ.1,000/- வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், தற்போது 27,285 கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.




2021-22 ஆம் ஆண்டில் 27,285 கைத்தறி நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் வழங்க ரூ.33.09 கோடி அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

கைத்தறி நெசவாளர்களுக்கான முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் திட்டத்திற்கென 2022-23 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.27.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இ) தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்**

இயற்கை எய்திய கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்கள் பயன்பெறும் பொருட்டு, தமிழக அரசு தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தினை 01.01.1992 முதல் செயல்படுத்தி வருகிறது.

குடும்ப ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள கைத்தறி நெசவாளர்கள் 60 வயதினை எய்துவதற்குள் இறக்க நேரிட்டால், நெசவாளரின் வாரிசுதாரர்/ நியமனதாரருக்கு, 10 ஆண்டுகள் வரையிலோ அல்லது மேற்படி நெசவாளர் உயிருடன் இருந்திருந்தால் 60 வயது எய்தக் கூடிய காலம் வரையிலோ, இதில் நெசவாளரின் குடும்பத்திற்கு எது அதிக பயனளிக்குமோ அவ்வகையில் நெசவாளரின் நியமனதாரருக்கு மாதந்தோறும் ரூ.1,000/- குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டில் 1,251 கைத்தறி நெசவாளர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க ரூ.1.61 கோடி அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.




## 3.10 கைத்தறி நெசவாளர் ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

கைத்தறி நெசவாளர்களுக்கு ஆயுள் காப்பீடு வழங்கும் காப்பீட்டுத் திட்டம் ஒன்றிய அரசால் மாநில அரசின் பங்களிப்புடன் 31.05.2020 வரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம், தற்போது 2021-2022 ஆம் ஆண்டு முதல் தேசிய

கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ். மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் புதிய வழிகாட்டுதல்களின்படி, கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக, 18 முதல் 50 வயது வரையுள்ளவர்களுக்கு பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டமும், 18 முதல் 70 வயது வரையுள்ளவர்களுக்கு பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டமும், மற்றும் 51 முதல் 59 வயது வரையுள்ளவர்களுக்கு மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டமும் செயல்படுத்தப்படும்.

இத்திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

**பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா**

18 வயது முதல் 50 வயது வரை உள்ள கூட்டுறவு அமைப்பு சார்ந்த கைத்தறி நெசவாளர்கள், கூட்டுறவு அமைப்புசாரா நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிபவர்கள்,

பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாக சேர்க்கப்படுவர்.

**காப்பீட்டுக் கட்டண விவரம்**

| பங்களிப்பு | வருடாந்திர காப்பீட்டு கட்டணம் (ரூபாயில்) |
|---|---|
| ஒன்றிய அரசின் பங்கு | 150/- |
| மாநில அரசின் பங்கு/நெசவாளர் பங்கு | 180/- |
| **மொத்தம்** | **330/-** |

**திட்டப் பயன்கள்:**

இத்திட்டத்தின்கீழ் உள்ள உறுப்பினர்கள், ஏதேனும் ஒரு காரணத்தினால் இறக்க நேரிட்டால், அவர்களின் குடும்பத்திற்கு ரூ.2,00,000/- வழங்கப்படுகிறது.

**பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா**

18 வயது முதல் 70 வயது வரை உள்ள கூட்டுறவு அமைப்பு சார்ந்த கைத்தறி நெசவாளர்கள், கூட்டுறவு

அமைப்புசாரா நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிபவர்கள், பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாக சேர்க்கப்படுவர்.

**காப்பீட்டுக் கட்டண விவரம்**

| பங்களிப்பு | வருடாந்திர காப்பீட்டு கட்டணம் (ரூபாயில்) |
|---|---|
| ஒன்றிய அரசின் பங்கு | 12/- |
| மாநில அரசின் பங்கு / நெசவாளர் பங்கு | - |
| **மொத்தம்** | **12/-** |

**திட்டப் பயன்கள்:**

| **பயன்கள்** | |
|---|---|
| விபத்து மரணம் | ரூ.2,00,000/- |
| விபத்தினால் ஏற்படும் நிரந்தர முழு ஊனம் | ரூ.2,00,000/- |
| விபத்தினால் ஏற்படும் நிரந்தர பகுதி ஊனம் | ரூ.1,00,000/- |

**மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா**

51 வயது முதல் 59 வயது வரை உள்ள கூட்டுறவு அமைப்பு சார்ந்த கைத்தறி நெசவாளர்கள், கூட்டுறவு அமைப்பு சாரா நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிபவர்கள் (31.05.2017–க்கு முன்னதாக திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளவர்கள் மட்டும்). இத்திட்டத்தின்கீழ் தற்போது புதிய பயனாளிகள் சேர்க்கப்படுவதில்லை.

இத்திட்டத்திற்கான காப்பீட்டுக் கட்டணம் மற்றும் திட்டப் பயன்களின் விவரம் பின்வருமாறு:

| பங்களிப்பு | காப்பீட்டு கட்டணம் (ரூபாயில்) |
|---|---|
| ஒன்றிய அரசின் பங்கு | 290/- |
| மாநில அரசின் பங்கு / நெசவாளர் பங்கு | 180/- |
| மொத்தம் | 470/- |

**திட்டப் பயன்கள்:**

| பயன்கள் | |
|---|---|
| இயற்கை மரணம் | ரூ.60,000/- |
| விபத்து மரணம் | ரூ.1,50,000/- |
| விபத்தினால் ஏற்படும் நிரந்தர முழு ஊனம் | ரூ.1,50,000/- |
| விபத்தினால் ஏற்படும் நிரந்தர பகுதி ஊனம் | ரூ.75,000/- |

2021-22 ஆம் காப்பீட்டு ஆண்டிற்கு 63,602 பயனாளிகள் பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டத்தின் கீழும், 25,460 பயனாளிகள் பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டத்தின் கீழும் மற்றும் 29,109 பயனாளிகள் மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழும் சேர்க்கப்படவுள்ளனர்.




## 3.11 கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம்

தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டுள்ள "முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்" தற்போது பிரதம மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா (AB-PMJAY) திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த ஒருங்கிணைந்த மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் ஒரு குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு

ரூ.5.00 இலட்சம் வரை மருத்துவ சிகிச்சைகள் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளர்களை இந்த ஒருங்கிணைந்த மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் சேர்க்க உரிய நடவடிக்கைகள் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறே, தமிழ்நாடு அரசின் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் 66,539 நெசவாளர் குடும்பங்களை சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின்கீழ் 31.03.2022 வரையில் 57,105 கைத்தறி நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**3.12 நெசவாளர் முத்ரா திட்டம்**

கைத்தறி துறைக்கு சலுகைகளுடன் கூடிய கடன்கள் வழங்கும் பொருட்டு தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டத்தின்

ஒரு அங்கமாக ஒன்றிய அரசால் “நெசவாளர் முத்ரா திட்டம்” 2016-2017-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக அனைத்து நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிவோர் நெசவு மற்றும் அதனை சார்ந்த தொழில்களை மேற்கொள்ள தேவையான நடைமுறை மூலதனத்திற்கும், கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கும். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக குறைந்தபட்சம் ஒரு பருத்தி இரக தறிக்கு ரூ.50,000/- வீதமும் மற்றும் ஒரு பட்டு இரக தறிக்கு ரூ.1,00,000/- வீதமும் முத்ரா கடன் தொகையானது வருடத்திற்கு 6 விழுக்காடு வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

அக்டோபர் 2021 திங்களில் ஒன்றிய அரசினால் திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

1. கைத்தறி நெசவாளர் / நெசவுத் தொழில்முனைவோர்க்கு வழங்கப்படும் கடன் தொகையில் 20 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.25,000/- விளிம்புத் தொகை மானியமாக வழங்கப்படும்.

2. குறைந்தபட்சம் 100 நெசவாளர்கள் / தொழிலாளர்கள் பணிபுரியும் கைத்தறி அமைப்புகள் / நிறுவனங்களுக்கு அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் வரையில் கடன் தொகையும், விளிம்புத் தொகையாக ரூ.2.00 இலட்சமும், வழங்கப்படும்.

வங்கிகளால் விதிக்கப்படும் வட்டி விகிதத்திற்கும், பயனாளிகள் செலுத்தும் 6 விழுக்காடு வட்டிக்கும் உள்ள வித்தியாசத் தொகையில், 7 விழுக்காட்டிற்கு மிகாமல்

சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு மூன்றாண்டுகளுக்கு வட்டி மானியம் ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது.




**மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்தில் நெசவாளர் முத்ரா கடன் உதவி வழங்கினார்.**


2021-22 ஆம் ஆண்டிற்கு 15,000 கைத்தறி நெசவாளர்களுக்கு முத்ரா கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, 13,392 முத்ரா கடன் பயனாளிகளுக்கு

ரூ.65.70 கோடி கடன்கள் வங்கிகளால் ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது.

நெசவாளர் முத்ரா திட்டத்தின் கீழ் கடன் தொகை விடுவிக்கப்பட்ட விவரம்




நெசவாளர் முத்ரா திட்டத்தின் கீழ் கடன்தொகை பெற்றவர்களின் எண்ணிக்கை



## 3.13 தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டம்


### 3.13.1 குழும வளர்ச்சித் திட்டம்

2021-22 முதல் 2025-2026 வரையிலான காலத்திற்கு தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தை (NHDP) செயல்படுத்துவதற்கான திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களை ஒன்றிய அரசு உருவாக்கியுள்ளது. புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தின் (NHDP) கீழ், கூட்டுறவு அமைப்பு மற்றும் கூட்டுறவு அமைப்புசாரா கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக குழும வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, ஒரு குழும வளர்ச்சித் திட்டம் அமைக்க ஒன்றிய அரசின் அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட நிதியாக ரூ.200.00 இலட்சம் கீழ்க்குறிப்பிட்டுள்ள 4 இனங்களுக்கு வழங்கப்படுகிறது.


| **வ. எண்** | **இனம்** | **நிதியுதவி (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | "ஹத்கர்கா சம்வர்தன் சஹாயதா" (HSS) அதாவது, தறிகள் / உபகரணங்கள், மின் விளக்குகள், தனித்தறிகூடம் அமைத்தல், பொது தறிக்கூடம் அமைத்தல், பொது தறிக்கூடத்திற்கு சோலார் மின் விளக்குகள் பொருத்துதல் | 150.00 |
| 2 | வடிவமைப்பாளர் நியமித்தல் | 15.00 |
| 3 | திட்ட மேலாண்மை செலவு | 15.00 |
| 4 | இதர இனங்கள் | 20.00 |
| **மொத்தம்** | | **200.00** |

| வ. எண் | இனம் | நிதியுதவி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | **இதர இனங்களின் விவரம்** | |
| i) | அடிப்படை ஆய்வு, கூர்ந்தாய்வு மேற்கொள்ளுதல், கூட்டமைப்பு உருவாக்குதல், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல் | 2.00 |
| ii) | இரக மேம்பாடு | 5.00 |
| iii) | கண்காட்சிகளில் பங்கேற்பது / வாங்குவோர் விற்போர் சந்திப்புகள் / விளம்பரங்கள் போன்றவை | 5.00 |
| iv) | மற்ற மாநிலங்களின் கைத்தறி செறிவுப்பகுதிகளுக்கு சென்று வருதல் | 1.50 |
| v) | குழும செயல்பாடுகளின் ஆவணப்படுத்துதல் | 0.50 |
| vi) | செயல்படுத்தும் முகமைக்கு ஊக்கத்தொகை, ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தறி குழும இனங்கள் ரூ.1.50 கோடி அளவிற்கு சரியான நேரத்தில் செயல்படுத்தப்பட்டால்.(3 ஆண்டுகளுக்குள்) | 1.00 |
| vii) | வேறு இதர இனங்கள் | 5.00 |




தமிழ்நாடு அரசு 52 வட்டார அளவிலான கைத்தறி குழுமங்கள் ரூ.8259.54 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகிறது. ஒன்றிய அரசால் இதுவரை ரூ.6032.14 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளதில், ரூ.5311.23 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 37,483 கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## தமிழ்நாட்டில் உள்ள ஆறு புதிய வட்டார நிலை கைத்தறி குழுமங்கள்



ஒன்றிய அரசு 2021-22 ஆம் ஆண்டிற்கு ரூ.645.15 இலட்சம் மதிப்பீட்டில் 6 புதிய வட்டார நிலை கைத்தறி குழுமங்கள் (BLCs) அமைக்க ஒப்புதல் வழங்கியுள்ளது, இதில் ஒன்றிய அரசின் பங்கு ரூ.597.11 இலட்சம் மற்றும் பயனாளிகளின் பங்கு ரூ.48.04 இலட்சம் ஆகும். இதில் முதல் தவணையாக ரூ.202.18 இலட்சம் விடுவிக்கப்பட்ட விவரம் பின்வருமாறு:

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண். | [illegible] | [illegible] | [illegible] | மொத்த திட்ட தொகை | | | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | [illegible] | பயனாளிகள் | மொத்தம் | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 | [illegible] | [illegible] | 300 | 74.15 | 9.20 | 83.35 | 33.25 | 13.00 | 20.25 |
| 2 | [illegible] | [illegible] | 350 | 101.150 | 12.20 | 113.35 | 46.75 | 13.00 | 33.75 |
| 3 | [illegible] | [illegible] | 332 | 88.346 | 11.644 | 99.99 | 42.123 | 7.50 | 34.623 |
| 4 | [illegible] | [illegible] | 366 | 84.773 | 12.067 | 96.82 | 40.809 | 7.50 | 33.309 |
| 5 | [illegible] | [illegible] | 201 | 126.812 | 1.748 | 128.56 | 20.848 | 13.00 | 7.848 |
| 6 | [illegible] | [illegible] | 359 | 121.880 | 1.200 | 123.08 | 18.400 | 13.00 | 5.400 |
| | | மொத்தம் | 1882 | 597.11 | 48.03 | 645.19 | 202.78 | 67.00 | 135.18 |

இத்திட்டத்தினை செயல்படுத்த 2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மாநில அரசின் பங்காக ரூ.8.01 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.13.2 விற்பனை ஊக்குவிப்பு திட்டம்

இந்திய அரசின் தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தில் (NHDP) விற்பனை ஊக்குவிப்பு திட்டம் ஒரு அங்கமாகும். தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தை (NHDP) செயல்படுத்துவதற்காக ஒன்றிய அரசால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, கைத்தறி துணிகளை சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்க கைத்தறி நிறுவனங்களுக்கு விற்பனை ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுகிறது.

ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின்

கடந்த 3 ஆண்டுகளின் சராசரி விற்பனையில் 10% விற்பனை ஊக்குவிப்புத் தொகை பெறத் தகுதியுடையவை, இது ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

தகுதியான கைத்தறி நிறுவனங்கள் மற்றும் நிதி உதவிகள் விவரம் பின்வருமாறு:

| **தகுதியுடைய கைத்தறி நிறுவனங்கள்** | **அதிகபட்ச ஊக்குவிப்புத் தொகை** | **நிதி உதவி** | **ஒன்றிய மற்றும் மாநில அரசு பங்கு** |
|---|---|---|---|
| மாநில அளவிலான கைத்தறி நிறுவனம், மாநில அளவிலான கூட்டுறவு சங்கம் மற்றும் தேசிய அளவிலான கூட்டுறவு சங்கம் | ரூ.100 இலட்சம் (ஒன்றிய அரசு பங்கு) | மூன்று ஆண்டுகளின் சராசரி விற்பனையில் 10 சதவிகிதம் | 50:50 (தேசிய அளவிலான கைத்தறி நிறுவனம் / சங்கங்களுக்கு 100 சதவிகிதம் ஒன்றிய அரசால் வழங்கப்படும்.) |
| தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் | ரூ.15.00 இலட்சம் (ஒன்றிய அரசு பங்கு) | | |

2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.1.50 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.13.3 கைத்தறித் துணிகளை சந்தைப்படுத்துவதற்கான நிதியுதவி**

ஒன்றிய அரசின் தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய அளவிலான கைத்தறி கண்காட்சிகள், மாநில அளவிலான கைத்தறி கண்காட்சிகள், மாவட்ட அளவிலான கண்காட்சிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இக்கண்காட்சிகள் நடத்துவதற்கு வழங்கப்படும் நிதியுதவி விபரம் பின்வருமாறு.

| வ. எண் | கண்காட்சியின் விபரம் | வழங்கப்படும் நிதியுதவி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தேசிய அளவிலான கைத்தறி கண்காட்சி | 45.00 |
| 2. | மாநில அளவிலான கைத்தறி கண்காட்சி | 12.00 |
| 3. | மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சி | 6.00 |

மேற்படி தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 2021-22 ஆம் ஆண்டில் ஆறு மாநில அளவிலான கைத்தறி கண்காட்சிகள் மற்றும் ஒரு தேசிய அளவிலான கைத்தறி கண்காட்சி நடத்த ரூ.117.00 இலட்சம் ஒன்றிய அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ஈரோடு, திருச்சி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், சேலம், கும்பகோணம் ஆகிய நகரங்களில் மாநில அளவிலான கைத்தறி கண்காட்சிகள் நடத்தப்பட்டது. இதன் மூலம் கைத்தறி நெசவாளர்களின் உற்பத்திகள் பெருமளவில் விற்பனை செய்யப்பட்டன.

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**எழும்பூர் கோ-ஆப்டெக்ஸ் மைதானத்தில் 08.04.2022 அன்று நடைபெற்ற தேசிய கைத்தறி கண்காட்சி 2022 தொடக்க விழா**





**3.14 பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டு ஜவுளி பூங்கா**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கைத்தறி நிறுவனங்களை உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் உருவாக்கி பட்டு கைத்தறி இரகங்களின் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டுப் பூங்கா 2010-ஆம் ஆண்டு கீழ்க்கதிர்ப்பூர் கிராமத்தில் 75 ஏக்கர் பரப்பளவில் துவங்கப்பட்டுள்ளது.

இப்பூங்காவின் மூலம் சுமார் 18,000 நபர்களுக்கு நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் கைத்தறி நெசவு, வடிவமைப்பு, சாயப்பணி மற்றும் இதர கைத்தறி நிறுவனங்களின் மூலம் வேலைவாய்ப்பு கிடைக்கும். இப்பட்டு பூங்காவின் உத்தேச விற்றுமுதல் ரூ.275.00 கோடி மற்றும் முன்மொழியப்பட்டுள்ள முதலீடு ரூ.120.00 கோடி ஆகும்.

6 பட்டு நெசவு கூடங்களின் கட்டுமானப்பணிகள் நவம்பர் 2021-ல் நிறைவடைந்துள்ளன.

6 புதிய பட்டு நெசவு கூடங்களின் கட்டுமானப்பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

எஞ்சிய நெசவு கூடங்களின் கட்டுமானப்பணிகள் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் அக்டோபர் 2022 உடன் முடிவடையும் என எதிர்பாக்கப்படுகிறது.



**காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டுப்பூங்காவினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.காந்தி அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், அவர்கள் 11.09.2021 அன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்**



**காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டுப்பூங்காவினை அரசு முதன்மை செயலர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, கைத்தறி ஆணையர் மற்றும் கைத்தறி கூடுதல் இயக்குநர் 11.01.2022 அன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்**

## 4 விருதுகள் மற்றும் கல்வி உதவித் தொகை

### 4.1 சிறந்த ஏற்றுமதியாளர்கள் விருது

கைத்தறி துணிகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், அயல்நாட்டு சந்தையில் கைத்தறி துணி விற்பனையினை மேம்படுத்தவும் தமிழ்நாடு அரசு சிறந்த கைத்தறி துணி

ஏற்றுமதியாளர்களுக்கு விருது வழங்கும் திட்டத்தினை 1975-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்க ஏதுவாக ஆண்டொன்றுக்கு ரூ.1.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.10.2021 அன்று 2020-2021-ஆம் ஆண்டில் கைத்தறி இரகங்கள் ஏற்றுமதியில் பெருவாரியாக பங்கு வகித்த மூன்று சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2022-2023-ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் 23.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில், 2020-21 ஆம் ஆண்டிற்கான சிறந்த ஏற்றுமதியாளர் விருது (முதல் பரிசு) M/s அம்பாடி எண்டர்பிரைஸ் லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.**

## 4.2 திறன்மிகு நெசவாளர்கள் விருது

பருத்தி மற்றும் பட்டு சேலை இரகங்கள், வேட்டி இரகங்கள், புதிய மற்றும் நவீன வடிவமைப்புகளை கொண்ட ஏற்றுமதி கைத்தறி இரகங்கள் என 20 இரகங்களை உற்பத்தி செய்யும் கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கும்

நோக்கத்தில் **திறன்மிகு நெசவாளர் விருது** வழங்கப்பட்டு வருகிறது.

திறன்மிகு நெசவாளர் விருதிற்கான விண்ணப்பங்கள் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் கோரப்படுகிறது. சங்கங்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் முதற்கட்டமாக சரக அளவிலான குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட கோரிக்கைகள் மட்டும் கைத்தறி ஆணையர் அவர்களின் தலைமையில் மத்திய பட்டு வாரியம், நெசவாளர் சேவை மையம், கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி கழகம் மற்றும் தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனத்தின் பிரதிநிதிகள் கொண்ட மாநில அளவிலான குழுவின் பரிசீலனைக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள இரகங்களின் காட்சி தோற்றம், வண்ணக்கலவை, வடிவமைப்பு தனித்துவம், நெசவில் கூடுதல் வேலைப்பாடு மற்றும் இரகத்தின் சிறப்பு அம்சங்களின் அடிப்படையில் திறன்மிகு நெசவாளர் விருது பெறுவதற்கான இரகங்கள் மாநில அளவிலான குழுவினரால் தெரிவு செய்யப்படுகிறது.

திறன்மிகு நெசவாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுத் தொகை என 60 விருதுகள் பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ.10,000/- |
| இரண்டாம் பரிசு | ரூ.6,000/- |
| மூன்றாம் பரிசு | ரூ.4,000/- |

இத்திட்டத்திற்கான செலவினம் ரூ.4.00 இலட்சம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டம், 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**4.3 மாநில அளவிலான சிறந்த நெசவாளர்கள் மற்றும் சிறந்த வடிவமைப்பாளர்கள் விருது**

புதுமையான மற்றும் கண்கவர் வடிவமைப்புகளை புகுத்துதல் மற்றும் தற்போதைய சந்தையில் அதிக தேவையுள்ள பட்டு மற்றும் பருத்தி கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்து, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும் கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்க அரசு "**சிறந்த நெசவாளர் விருது**" வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

இதேப் போன்று, பருத்தி மற்றும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் நவீன மற்றும் சந்தைப்படுத்த ஏதுவான சிறந்த வடிவமைப்புகளை உருவாக்கும் வடிவமைப்பாளர்களுக்கு "**சிறந்த வடிவமைப்பாளர் விருது"** வழங்கப்படுகிறது.

"**சிறந்த நெசவாளர் விருதிற்கான"** விண்ணப்பங்கள் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் கோரப்படுகிறது. சங்கங்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் முதற்கட்டமாக சரக அளவிலான குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட கோரிக்கைகள் மட்டும் கைத்தறி ஆணையர் அவர்களின் தலைமையில் மத்திய பட்டு வாரியம், நெசவாளர் சேவை மையம், கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி கழகம் மற்றும் தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனத்தின் பிரதிநிதிகள்

கொண்ட மாநில அளவிலான குழுவின் பரிசீலனைக்கு பரிந்துரைக்கப்படுகிறது.

விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள இரகங்களின் காட்சி தோற்றம், வண்ணக்கலவை, வடிவமைப்பு தனித்துவம், நெசவில் கூடுதல் வேலைப்பாடு மற்றும் இரகத்தின் சிறப்பு அம்சங்கள் ஆகிய 5 காரணிகளுக்கும் மாநில அளவிலான குழுவினரால் தலா 10 மதிப்பெண் வீதம் மதிப்பெண் வழங்கப்படுகிறது. அதிக மதிப்பெண் பெறும் இரகங்கள் சிறந்த நெசவாளர் விருது பெறுவதற்கு தெரிவு செய்யப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.10.2021 அன்று 2020-2021-ஆம் ஆண்டின் பருத்தி மற்றும் பட்டு இரகங்களுக்கான சிறந்த நெசவாளர் விருதின் முதல் பரிசு, இரண்டாம் பரிசு மற்றும் மூன்றாம் பரிசுக்கான சான்றிதழ்கள் மற்றும் ரூ.4.50 இலட்சம் மதிப்பிலான காசோலைகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும், 2020-2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த வடிவமைப்பாளர் விருது மூன்று வடிவமைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டுக்கு வழங்கப்பட்டுள்ள சிறந்த நெசவாளர் விருது மற்றும் சிறந்த வடிவமைப்பாளர் விருதுகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | விவரம் | முதல் பரிசு (ரூ.) | இரண்டாம் பரிசு (ரூ.) | மூன்றாம் பரிசு (ரூ.) | மொத்த பரிசுத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1. | பட்டு இரகத்திற்கான சிறந்த நெசவாளர் விருது | 1,00,000 | 75,000 | 50,000 | 2,25,000 |
| 2. | பருத்தி இரகத்திற்கான சிறந்த நெசவாளர் விருது | 1,00,000 | 75,000 | 50,000 | 2,25,000 |
| 3. | சிறந்த வடிவமைப் பாளர் விருது | 25,000 | 10,000 | 5,000 | 40,000 |
| | **மொத்தம்** | **2,25,000** | **1,60,000** | **1,05,000** | **4,90,000** |


மேற்கண்ட இப்பரிசுத் தொகை 2021-2022 ஆம் ஆண்டு முதல் பின்வருமாறு உயர்த்தி வழங்க அரசாணை எண்.110, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, நாள் 21.10.2021-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | விவரம் | முதல் பரிசு (ரூ.) | இரண்டாம் பரிசு (ரூ.) | மூன்றாம் பரிசு (ரூ.) | மொத்த பரிசுத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1. | பட்டு இரகத்திற்கான சிறந்த நெசவாளர் விருது | 5,00,000 | 3,00,000 | 2,00,000 | 10,00,000 |
| 2. | பருத்தி இரகத்திற்கான சிறந்த நெசவாளர் விருது | 5,00,000 | 3,00,000 | 2,00,000 | 10,00,000 |
| 3. | சிறந்த வடிவமைப் பாளர் விருது | 25,000 | 10,000 | 5,000 | 40,000 |
| | **மொத்தம்** | **10,25,000** | **6,10,000** | **4,05,000** | **20,40,000** |

இத்திட்டம், 2022-2023 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் 23.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில் 2020-2021 ஆம் ஆண்டிற்கான சிறந்த நெசவாளர் விருது (பருத்தி இரகம்- முதல் பரிசு) பரமக்குடி ஆர்.எச்.45, முருகன் பருத்தி மற்றும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் திருமதி. இ.ஆர்.நாகலம்மாள் (உறுப்பினர் எண் 391) என்பவருக்கு வழங்கப்பட்டு, ரூ.1,00,000 பரிசு தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது**



**4.4 டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்குதல்**

நெசவாளர்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை 1986-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருடமும் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் முதல் ஐந்து இடங்களைப் பெறும் ஐந்து மாணவர்கள் மற்றும் ஐந்து மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் பெறப்பட்ட மதிப்பெண்கள் அடிப்படையில் முதல் ஐந்து நிலை பெறும் ஐந்து மாணவர்கள் மற்றும் ஐந்து மாணவியர்களுக்கு 40 பாடப்பிரிவுகளில் தங்கள் மேல்படிப்பை முடிக்கும் காலம் வரையில் ஆண்டொன்றுக்கு ரூ.1,000/- முதல் ரூ.7,500/- வரை

கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் 400 மாணாக்கர்கள் (200 மாணவர்கள் மற்றும் 200 மாணவியர்கள்) கல்வி உதவித் தொகை பெறுகின்றனர்.

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

**4.5 தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்**

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளை ஊக்குவிக்கும் பொருட்டு பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் 2008 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கல்வி உதவித்தொகை விவரங்கள் பின்வருமாறு,

| தர வரிசை | கல்வி உதவித் தொகை (ரூபாயில்) | |
|---|---|---|
| | பத்தாம் வகுப்பு | பன்னிரெண்டாம் வகுப்பு |
| 1 | 5,000 | 10,000 |
| 2 | 3,000 | 7,500 |
| 3 | 2,000 | 5,000 |

### 4.6 இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகத்தில் பயிலும் மாணாக்கர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்

கைத்தறி நெசவாளர்களின் வாரிசுகளை ஊக்குவிக்கும் விதமாக, சேலத்தில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகத்தில் மூன்று ஆண்டு பட்டயப் படிப்பான கைத்தறி மற்றும் துணிநூல் தொழில்நுட்ப கல்வி பயில, மாணாக்கர்கள் தேர்வு செய்யப்படும் போது அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு, அவர்களுக்கான கல்வி உதவி தொகை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. 2021-2022 ஆம் ஆண்டு முதல் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவி தொகை ஒன்றிய அரசால் உயர்த்தப்பட்டு, தமிழ்நாடு அரசு மற்றும் ஒன்றிய அரசால் பின்வரும் விகிதத்தில் உயர்த்தப்பட்ட கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

| ஆண்டு | 2021-2022 ஆம் ஆண்டு முதல் மாணாக்கர்-களுக்கு ஒரு மாதத்திற்கு வழங்கப்படும் உயர்த்தப்பட்ட கல்வி உதவித்தொகை | உயர்த்தப்-பட்ட கல்வி உதவித் தொகையில் 50 சதவீத ஒன்றிய அரசின் பங்கு | உயர்த்தப்பட்ட கல்வி உதவித் தொகையில் 50 சதவீத மாநில அரசின் பங்கு |
|---|---|---|---|
| முதலாம் ஆண்டு | 2,500 | 1,250 | 1,250 |
| இரண்டாம் ஆண்டு | 2,500 | 1,250 | 1,250 |
| மூன்றாம் ஆண்டு | 2,500 | 1,250 | 1,250 |

மேற்படி கல்வி உதவித் தொகையுடன் புத்தகங்கள் வாங்குவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் எதிர்பாராச் செலவினமாக ஆண்டொன்றுக்கு கூடுதலாக ரூ.1,000/- வழங்கப்படுகிறது. இது தவிர, இரண்டாம் ஆண்டு மாணாக்கர்களுக்கு கல்விச் சுற்றுலாப் படியாக ஆண்டொன்றுக்கு ரூ.1,000/-மும், மூன்றாம் ஆண்டு பயிலும்

மாணாக்கர்களுக்கு திட்டப் பணிகளுக்கான உதவித் தொகை ரூ.500/-மும் வழங்கப்பட்டு வருகிறது. இக்கல்வி உதவித் தொகை தமிழக அரசால் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு கல்வி நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

கர்நாடக மாநிலத்திலுள்ள கடாக், ஆந்திரப் பிரதேச மாநிலத்திலுள்ள வெங்கடகிரி மற்றும் கேரள மாநிலத்திலுள்ள கண்ணூர் ஆகிய இடங்களிலுள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகத்தில் தமிழக அரசு இட ஒதுக்கீட்டில் பயின்று வரும் மாணவ/மாணவியருக்கும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், 2021-2022 ஆம் ஆண்டில் 87 மாணாக்கர்கள் பயன்பெற்றுள்ளனர்.

## 5. கைத்தறி வளர்ச்சி மற்றும் பிரபலப்படுத்தும் திட்டங்கள்

### 5.1 கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985

கைத்தறி தொழிலை விசைத்தறி ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றி கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், நாட்டின் கைத்தறி தொழிலுக்கே உரித்தான மகத்தான பாரம்பரியம் மிக்க கலாச்சாரத்தை காக்கவும், இந்திய அரசால் கைத்தறி (உற்பத்தி இரக ஒதுக்கீடு) சட்டம், 1985 இயற்றப்பட்டு, சட்டத்தினை முறையாக அமுல்படுத்தும் பொருட்டு அந்தந்த மாநிலங்களில் உள்ள கைத்தறி துறையின் ஆணையர்/இயக்குநர் மூலம் அமலாக்க அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளது.

சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி, சென்னை, கைத்தறி ஆணையரகத்தில், துணை இயக்குநர் (அமலாக்கம்) அலுவலகத்தினை தலைமையிடமாகக் கொண்டு பிரத்யேகமான அமலாக்க பிரிவும் சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் 5 உதவி அமலாக்க அலுவலர் அலுவலகங்களும் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

1985-ஆம் ஆண்டில் ஒன்றிய அரசால் இச்சட்டம் அறிமுகப்படுத்தப்படும்போது, கைத்தறிகளில் உற்பத்தி செய்வதற்கென 22 இரகங்கள் முதற்கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. பின்னர், ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளின்படி 26.07.1996-ல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு தற்போது கீழ்க்கண்ட 11 இரகங்கள் மட்டும்


பிரத்யேகமாக கைத்தறிகளில் உற்பத்தி செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (1) | சேலை | (2) | வேட்டி |
| (3) | துண்டு / கம்சா மற்றும் அங்கவஸ்திரம் | (4) | லுங்கி |
| (5) | ஜடார் மேகலா / பாநெக் | (6) | ஜமக்காளம் / டர்ரி (அ) டர்ரட் |
| (7) | டிரஸ் மெட்டீரியல் | (8) | பேரெக் பிளாங்கெட், கம்பல் (அ) கம்பளி |
| (9) | ஷால், லாய், மப்ளர், பங்கி முதலியன | (10) | உல்லன் ட்வீடு |
| (11) | கேஸ், பெட்ஷீட், பெட் கவர், கவுண்டர்பேன், பர்னிசிங் (டேப்பஸ்டிரி மற்றும் அப்ஹோல்ஸ்டிரி உட்பட) | | |

கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985ல் கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இரகங்கள், சட்டமீறல்களில் ஈடுபடுவோர் மீது மேற்கொள்ளப்படும் சட்டபூர்வ நடவடிக்கைகள் மற்றும் அதற்கான தண்டனைகள் குறித்து விசைத்தறி முதலாளிகள், விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாதந்தோறும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இக்கூட்டங்கள் மற்றும் ஆய்வுகளின் போது இச்சட்டம் குறித்த பிரசுரங்கள் வழங்கப்பட்டும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. மேலும், விசைத்தறிகள் மிகுந்துள்ள பகுதிகளில், தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சட்டத்தினை மீறுபவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டும், குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்கு பதிவு செய்யப்பட்டு வருகிறது.

## 2021-2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள அமலாக்க நடவடிக்கைகள்

| வ.எண். | மண்டலத்தின் பெயர் | 2021-22 ஆம் ஆண்டுக்கு விசைத்தறிகள் ஆய்வு மேற்கொள்ள நிர்ணயிக்கப்பட்ட குறியீடு | விசைத்தறிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டவை | 2021-22 ஆம் ஆண்டில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | தண்டனை வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (கடந்த ஆண்டு நிலுவையிலுள்ள வழக்குகளும் சேர்த்து) | விழிப்புணர்வு கூட்டங்களின் எண்ணிக்கை | கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஈரோடு | 7060 | 7663 | 13 | 5 | 33 | 588 |
| 2 | மதுரை | 3760 | 4052 | 12 | 12 | 41 | 847 |
| 3 | சேலம் | 5650 | 6048 | 10 | 4 | 34 | 612 |
| 4 | திருச்செங்கோடு | 7060 | 8423 | 14 | 10 | 33 | 659 |
| 5 | திருப்பூர் | 6590 | 7743 | 9 | 4 | 29 | 585 |
| 6 | சென்னை | 357 | 1041 | 0 | 0 | 10 | 205 |
| | **மொத்தம்** | **30477** | **34970** | **58** | **35** | **180** | **3496** |




**கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985-ன் கீழ் கடந்த 3 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட விசைத்தறி ஆய்வு, முதல் தகவல் அறிக்கை பதிவுகள் மற்றும் தண்டனை வழங்கப்பட்ட வழக்குகள் பற்றிய விபரங்கள்**

| வ. எண் | விவரம் | 2019-20 | 2020-21 | 2021-22 |
|---|---|---|---|---|
| 1 | விசைத்தறி ஆய்வுக்கான குறியீடு | 77760 | 30477 | 30477 |
| 2 | ஆய்வு செய்யப்பட்ட விசைத்தறிகளின் எண்ணிக்கை | 79692 | 36182 | 34970 |
| 3 | பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளின் எண்ணிக்கை | 82 | 11 | 58 |
| 4 | தண்டனை வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 67 | 34 | 35 |
| 5 | நடத்தப்பட்ட விழிப்புணர்வு கூட்டங்களின் எண்ணிக்கை | 131 | 118 | 180 |
| 6 | விழிப்புணர்வு கூட்டங்களில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை | 3552 | 2883 | 3496 |

## 5.2 கைத்தறி உற்பத்தி இரகங்களை புவிசார் குறியீடு சட்டம் 1999-இன் கீழ் பதிவு செய்தல்

1999-ஆம் ஆண்டு புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உற்பத்தி செய்யப்படும் தனித்தன்மை வாய்ந்த பொருட்களை பதிவு செய்து புவிசார் குறியீடு பெறப்படுகிறது. இதன் மூலம், தனித்தன்மை வாய்ந்த பொருட்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பினை வழங்குவதோடு, புவிசார் குறியீடு பெறாத இனங்களை புவிசார் குறியீடு பெற்ற இனங்களாக எண்ணி தவறுதலாக, நுகர்வோர்கள் வாங்குவதில் இருந்து பாதுகாக்கிறது. புவிசார் குறியீட்டு பதிவு பெற்ற பொருட்களின் விற்பனை மேம்படுவதுடன், உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தில் ஓர் அங்கமான அறிவுசார் சொத்துரிமை வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்திட ஊக்குவிக்கிறது.

புவிசார் குறியீடு சட்டம் 1999-இன் கீழ், கைத்தறி துறையால் 1) காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், 2) பவானி ஜமக்காளம், 3) மதுரை சுங்குடி சேலைகள், 4) சேலம் வெண்பட்டு வேட்டி, 5) ஆரணி பட்டுச் சேலைகள், 6) கோவை கோரா காட்டன் சேலைகள், 7) திருபுவனம் பட்டு சேலைகள் மற்றும் 8) கண்டாங்கி சேலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



**புவிசார் குறியீடு எண். 09/2004, ஈரோடு பவானி ஜமக்காளம்**



புவிசார் குறியீடு எண் 06/2004, காஞ்சிபுரம் பட்டுச் சேலை



புவிசார் குறியீடு எண் 57/2007, கோவை கோரா காட்டன்



**புவிசார் குறியீடு எண் 16/2005, மதுரை சுங்கடிச் சேலை**



**புவிசார் குறியீடு எண் 422/2019 பரமக்குடி கண்டாங்கிச் சேலை**



புவிசார் குறியீடு எண் 56/2007: சேலம் வெண் பட்டு வேட்டி



புவிசார் குறியீடு எண் 58/2007 : ஆரணி பட்டுச் சேலை



**புவிசார் குறியீடு எண் 342/2019: திருபுவனம் பட்டுச் சேலை, கும்பகோணம்**

மேலும், இச்சட்டத்தின் கீழ் நெகமம் சேலைகள், வீரவநல்லூர் செடிபுட்டா சேலைகள் மற்றும் உறையூர் பருத்தி சேலைகள் பதிவு செய்யவும், தனித்துவம் வாய்ந்த இதர கைத்தறி இரகங்களை பதிவு செய்யவும் துறையால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 5.3 கைத்தறி முத்திரைத் திட்டம்



**கைத்தறி முத்திரையுடன்**
**பரமக்குடி பருத்தி சேலை**

கைத்தறி உற்பத்திக்கென பிரத்யேக அடையாளம் உருவாக்குவதோடு, அதன் உள்நாடு மற்றும் சர்வதேச சந்தைகளை மேம்படுத்த "கைத்தறி முத்திரைத் திட்டம்" ஒன்றிய அரசால் 28.06.2006 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் வாடிக்கையாளர்களுக்கு அசல் கைத்தறி பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்கான கைத்தறி வணிகச்சின்னத்தினை வழங்குகிறது. இச்சின்னம், கைத்தறி

பொருட்களுக்கான சந்தை தொடர்பினை பலப்படுத்த உதவுகிறது.

தமிழ்நாட்டில், தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), தனி நபர்கள், தனியார் நெசவாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள், கைத்தறி முத்திரை திட்டத்தின் கீழ் பதிவு செய்து கைத்தறி முத்திரை வில்லையினை பயன்படுத்தி வருகின்றனர்.

2021-2022-ஆம் ஆண்டு முடிய, 8,697 நிறுவனங்கள்/தனி நபர்கள் கைத்தறி முத்திரை திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு 5 கோடி கைத்தறி முத்திரை வில்லைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

## 5.4 பட்டு முத்திரை



**பட்டு முத்திரையுடன்**
**காஞ்சி பட்டு சேலை**

உள்ளூர் சந்தையிலும், சர்வதேச சந்தையிலும், பட்டு ரகங்களின் விற்பனையினை அதிகரிக்கும் பொருட்டு, மத்திய அரசு 17.04.2004 முதல் பட்டு முத்திரை திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. சுத்தமான இயற்கை பட்டு வகைகளான மல்பெரி, டஸ்ஸர், எரி அல்லது முகா பட்டினை கொண்டு தரத்தினை உறுதி செய்து உற்பத்தி செய்யப்படும் பட்டு இரகங்களில் இப்பட்டு முத்திரை வில்லை

ஒட்டப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளர்கள் மட்டுமே இப்பட்டு முத்திரை வில்லைகளை உபயோகிக்கலாம்.

இந்த பட்டு முத்திரை திட்டம், மத்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் மத்திய பட்டு வாரியத்தின் நிதி பங்களிப்புடன் கர்நாடக சங்கங்களின் பதிவு சட்டம் 1960-இன் கீழ் பதிவு செய்யப்பட்ட இந்திய சில்க் மார்க் நிறுவனம் (SMOI) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எந்தவொரு தனியார் அமைப்பு / நிறுவனம், ஒன்றிய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள், தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தலைமை கூட்டுறவுச் சங்கங்கள் இந்திய சில்க் மார்க் நிறுவனத்தில் உறுப்பினராகலாம். இந்த நிறுவனத்தின் உறுப்பினர்களாக பதிவு செய்து கொண்ட நிறுவனங்கள் மட்டுமே பட்டு முத்திரை வில்லைகளை பயன்படுத்த அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

இது வரை, தமிழ்நாட்டில் 84 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளர்களாக பதிவு செய்துள்ளனர். மேலும் 13.65 இலட்சம் பட்டு முத்திரைகள் தமிழ்நாட்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.



**தமிழ்நாடு அரசின் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் கர்நாடக கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மற்றும் பெங்களூரு மத்திய பட்டு வாரிய அலுவலர்களுடன் 29.03.2022 அன்று மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்**

## 5.5 இந்தியா கைத்தறி வணிகச் சின்னம்

INDIA HANDLOOM

COMFORT | STYLE | FASHION

கைத்தறி தொழிலை மேம்படுத்தவும், சமூக சுற்றுச்சூழல் தன்மைகளுக்கு இணக்கமாக மூலப்பொருட்கள், பதனிடுதல், நிர்வாகம், நெசவு, வடிவமைப்பு மற்றும் இதர தர அளவுகள் அனைத்திலும் கைத்தறி இரகங்களின் தரத்தினை உறுதி செய்து வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பெறும் நோக்குடன் 2015-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7-ஆம் நாள் அன்று நடைபெற்ற முதல் தேசிய கைத்தறி தின

விழாவின் போது "இந்தியா கைத்தறி வணிகச் சின்னம்" இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

வாடிக்கையாளர்களின் நம்பகத்தன்மையை பெற ஏதுவாக புதிய வடிவமைப்புகளில் குறைபாடற்ற, நம்பகத்தன்மைமிக்க, தரமான, சுற்றுச்சூழல் பாதிக்காத, நேர்த்திமிகு கைத்தறி இரக உற்பத்தியை உறுதி செய்வதே இவ்வணிகச் சின்னத்தை வெளியிட்டதன் முக்கிய நோக்கமாகும்.

காஞ்சிபுரத்திலுள்ள நெசவாளர் சேவை மையம் தமிழகத்தில் உள்ள கைத்தறி இரகங்களை இந்தியா கைத்தறி வணிகச் சின்னத்தின் கீழ் பதிவு செய்ய விண்ணப்பங்களை பெறுகிறது. இதுவரை இந்தியா கைத்தறி வணிகச் சின்னத்தின் கீழ் 102 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 42 தனி நபர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

## 6. பயிற்சி கொள்கை

### 6.1 துறை அலுவலர் / பணியாளர்களுக்கான பயிற்சி

கைத்தறி மற்றும் விசைத்தறி தொழில் சார்ந்துள்ள கைத்தறி நெசவாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள், நெசவாளர் கூட்டுறவு சங்கப் பணியாளர்கள், கோ-ஆப்டெக்ஸ் விற்பனையாளர்கள் மற்றும் துறை பணியாளர்களுக்கு கைத்தறி துறையால் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசால் பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நிதி உதவிகளை ஒருங்கிணைத்து இத்தொழிலில் நாளுக்கு நாள் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து அறிந்து கொள்ளவும், பயின்று கொள்ளவும் தொடர் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

2022-23-ஆம் ஆண்டில் சென்னை நடேசன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் மற்றும் மதுரை கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் ஆகிய பயிற்சி நிலையங்கள் மூலம் பின்வரும் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது.

கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம், மதுரைக்கு பரிந்துரைக்கப்பட்ட பயிற்சி திட்டம் 2022-23

| வ. எண். | பயிற்சியின் பெயர் | காலம் | எண்ணிக்கை | இலக்கு குழு | பயிற்சிக்காக பரிந்துரைக்கப்படும் மாதம் |
|---|---|---|---|---|---|
| 1. | மின் ஆளுமை பயிற்சி | 3 நாட்கள் | 5 | கைத்தறி துறை அலுவலர்கள் | ஏப்ரல் 2022 |
| 2. | நீதிமன்ற வாக்குமூலம் மற்றும் நீதிமன்ற நடைமுறைகள் (வழக்கு மேலாண்மை) பயிற்சி | 3 நாட்கள் | 5 | கைத்தறி துறை அலுவலர்கள் | ஜூலை 2022 |
| 3. | வழக்கு நடைமுறைகள் பயிற்சி | 3 நாட்கள் | 5 | கைத்தறி துறை அலுவலர்கள் | அக்டோபர் 2022 |
| 4. | மன அழுத்த மேலாண்மை மற்றும் தளர்வு நுட்பங்கள் பயிற்சி | 3 நாட்கள் | 5 | கைத்தறி துறை அலுவலர்கள் | ஜனவரி 2023 |
| 5. | விற்பனைத் திறன் பயிற்சி | 3 நாட்கள் | 5 | நெசவாளர் கூட்டுறவு சங்க பணியாளர்கள் | பிப்ரவரி 2023 |

**சென்னை நடேசன் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட பயிற்சி திட்டம் 2022-23**

| வ. எண். | பயிற்சியின் பெயர் | காலம் | எண்ணிக்கை | இலக்கு குழு | பயிற்சிக்காக பரிந்துரைக்கப்படும் மாதம் |
|---|---|---|---|---|---|
| 1. | சரக்கு மற்றும் சேவை வரி | 3 நாட்கள் | 10 | கைத்தறி துறை அலுவலர்கள் | ஏப்ரல் 2022 |
| 2. | தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 | 3 நாட்கள் | 10 | கைத்தறி துறை அலுவலர்கள் | மே 2022 |
| 3. | சட்ட அம்சங்கள் | 3 நாட்கள் | 10 | கைத்தறி துறை அலுவலர்கள் | ஜீன் 2022 |
| 4. | ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் உள் விசாரணை | 3 நாட்கள் | 10 | கைத்தறி துறை அலுவலர்கள் | ஜீலை 2022 |
| 5. | ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் | 3 நாட்கள் | 10 | கைத்தறி துறை அலுவலர்கள் | செப்டம்பர் 2022 |

| வ. எண். | பயிற்சியின் பெயர் | காலம் | எண்ணிக்கை | இலக்கு குழு | பயிற்சிக்காக பரிந்துரைக்கப்படும் மாதம் |
|---|---|---|---|---|---|
| 6. | அலுவலக குறிப்பு மற்றும் வரைவு | 3 நாட்கள் | 10 | கைத்தறி துறை அலுவலர்கள் | அக்டோபர் 2022 |
| 7. | மின் வணிகம் (Gem) | 3 நாட்கள் | 10 | கைத்தறி துறை அலுவலர்கள் | அக்டோபர் 2022 |
| 8. | எம்எஸ்-எக்ஸெல் | 3 நாட்கள் | 10 | கைத்தறி துறை அலுவலர்கள் | டிசம்பர் 2022 |
| 9. | நேரடி பயன் பரிமாற்றம் மற்றும் ஒருங் கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு திட்டம் | 3 நாட்கள் | 10 | கைத்தறி துறை அலுவலர்கள் | ஜனவரி 2023 |
| 10. | மின் ஏலம், மின் ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின் கொள்முதல் | 3 நாட்கள் | 10 | கைத்தறி துறை அலுவலர்கள் | பிப்ரவரி 2023 |

மேற்கண்ட பயிற்சி திட்டங்களால் இத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அலுவல் ரீதியான பணித்திறன் மேம்படுவதோடு, அலுவலர்கள் தற்போதைய காலகட்டத்திற்கான அறிவுசார் வளர்ச்சியினை பெறுவதற்கும் உறுதுணையாக அமைகிறது.

**6.2 வடிவமைப்பு திறன் பயிற்சி**

பருத்தி மற்றும் பட்டு இரக நெசவில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் வடிவமைப்பு திறனை மேம்படுத்தும் வகையில், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் 06.09.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டவாறு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 300 உறுப்பினர்களுக்கு 06.01.2022 முதல் 10.03.2022 முடிய 10 அணிகளில் வடிவமைப்பு திறன் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

மேலும், மின் வணிகத்திற்கான சூழலை ஏற்படுத்தும் வகையில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 300 உறுப்பினர்களுக்கு மின் வணிகப் பயிற்சி வழங்கப்படுகிறது. இதுவரை 5 அணிகளில் தலா 30 நபர்கள் வீதம் மொத்தம் 150 உறுப்பினர்களுக்கு 24.03.2022 முதல் 02.04.2022 வரை மதுரையில் உள்ள கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தின் மூலம் மின் வணிகப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 150 நபர்களுக்கு சென்னை, நடேசன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தின் மூலம் 6 அணிகளில் தலா 25 நபர்கள் வீதம் 29.03.2022 முதல் 20.05.2022 வரை மின் வணிகப் பயிற்சி நடைபெற்று வருகிறது.



**சென்னை, நடேசன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற மின் வணிகப்பயிற்சி**



**மதுரை, கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற மின் வணிகப்பயிற்சி**

**6.3. விற்பனை பணியாளர்களின் திறன் மேம்பாட்டு பயிற்சி**

நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் பணிபுரியும் 350 விற்பனை பணியாளர்களுக்கு ரூ.35.00 இலட்சம் செலவில் விற்பனை மேம்பாட்டு பயிற்சி கோயம்புத்தூரில் உள்ள சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச ஜவுளி மற்றும் மேலாண்மை கல்லூரியின் மூலம் 16.06.2021 முதல் 19.02.2022 முடிய வழங்கப்பட்டுள்ளது.

**6.4 சமர்த் திட்டம்**

ஒன்றிய ஜவுளி அமைச்சகத்தால் ஜவுளித் தொழிலில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் பொருட்டு சமர்த் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழக அரசினால் கைத்தறி துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் 4 பயிற்சி நிலையங்களில் கைத்தறி நெசவு தொடர்பாக ரூ.196.14

இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 1400 பயனாளிகளுக்கு பயிற்சி அளித்திட ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பயிற்சி வழங்குவதற்கு முதற்கட்டமாக ரூ.58.84 இலட்சம் ஒன்றிய அரசால் விடுவிக்கப்பட்டு அதில் ரூ.39.22 இலட்சம் ஆரம்பக்கட்ட பயிற்சி செலவினங்களை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயிற்சி துவங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



**காஞ்சிபுரம் பயிற்சி நிலையத்தில்**
**சமர்த் திறன் மேம்பாட்டு பயிற்சி**

**இத்திட்டத்தின்கீழ், பயிற்சி மையங்களில் பயிற்சி வழங்கப்படும் விவரங்கள் பின்வருமாறு**

| வ. எண் | பயிற்சி மையத்தின் பெயர் | பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 350 |
| 2. | ஈரோடு | 350 |
| 3. | கும்பகோணம் | 350 |
| 4. | பரமக்குடி | 350 |
| **மொத்தம்** | | **1400** |

**பயிற்சி திட்டத்தின் சுருக்க விவரம்**

| | |
|---|---|
| ஒரு குழுவில் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை | 21 நபர்கள் (தோராயமாக) |
| ஒரு குழுவின் பயிற்சி காலம் | 45 நாட்கள் |
| மொத்த பயிற்சி காலம் | 300 மணி நேரம் |
| ஒரு நபருக்கான பயிற்சித் கட்டணம் | ரூ.12,120/- மற்றும் மதிப்பீட்டு கட்டணம் ரூ.800/- |

**7. தகவல் தொழில்நுட்ப முனைப்புகள்**

தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள தற்போதைய முன்னேற்றத்தின் பலன்களை கைத்தறி தொழிலுக்கும் பயன்படுத்தும் வகையில் கைத்தறி துறையால் பின்வரும் தகவல் தொழில்நுட்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**7.1 இ-சேவை வழங்குதல்**

தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் இ-சேவை மையங்கள் மற்றும் பொது சேவை இணையதளம் வாயிலாக கைத்தறி துறையால் நெசவாளர்களுக்கு வழங்கப்படும் பின்வரும் சேவைகளும் இ-சேவைகளாக வழங்கப்படுகிறது.

1. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம்

2. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதிய திட்டம்

3. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதிய திட்டம்

4. மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டம்

5. டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை மூலம் கல்வி உதவித்தொகை வழங்குதல்

கைத்தறி நெசவாளர்கள் மேற்காணும் திட்டப் பயன்களை இணையதளம் வாயிலாகவும், இ-சேவை மையங்கள் மூலமாகவும் பெற்று பயனடையலாம்.

**7.2 நெசவாளர் குறை தீர்க்கும் மையம்**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்

2021-2022-ஆம் ஆண்டிற்கான துறையின் மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டவாறு, கைத்தறி ஆணையரகத்தில் நெசவாளர் குறை தீர்க்கும் மையம் தனியே அமைக்கப்பட்டு 23.03.2022 முதல் செயல்பட்டு வருகிறது.

தேசிய தகவல் தொழில்நுட்பவியல் மையத்தின் (NIC) மூலம் நெசவாளர் குறை தீர்க்கும் மையத்திற்கென பிரத்யேகமாக மனுக்கள் செயலாக்க இணையதளம் உருவாக்கப்பட்டு https://gdp.tn.gov.in/dhl என்ற இணையதள முகவரியில் பயன்பாட்டில் உள்ளது. கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்கள் மேற்படி இணையதளம் வாயிலாக தங்களது கோரிக்கைகளை தங்கள் இருப்பிடத்திலிருந்தே எந்த நேரத்திலும் பதிவு செய்து கொள்ளலாம். நெசவாளர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு உடனுக்குடன் தீர்வு காணப்படுகிறது.

**7.3 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல்**

தமிழ்நாட்டில் உள்ள 1,107 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாட்டினை மேம்படுத்தும் வகையில் இச்சங்கங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்படுகிறது. இதன்படி, அனைத்து சங்கங்களுக்கும் கணினி மற்றும் அச்சுப் பொறிகள் வழங்கப்பட்டுள்ளது.

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கென தேசிய தகவல் தொழில்நுட்பவியல் மையத்தின் (NIC) மூலம் விரைவில் பிரத்யேக மென்பொருள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படும்.

**7.4 மின்-வணிக இணையதளம்**

கைத்தறி இரகங்களின் விற்பனையினை அதிகரிக்கவும், வாடிக்கையாளர்கள் தங்களுக்கு தேவையான

கைத்தறி இரகங்களை தங்கள் இருப்பிடத்திலிருந்தே வாங்கிக்கொள்ளும் பொருட்டும் https://loomworld.in என்ற பிரத்யேக மின்-வணிக இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தின் மூலம் பட்டுச் சேலைகள், பருத்திச் சேலைகள், பாரம்பரிய சேலைகள், கோரா காட்டன் சேலைகள், ஆண்கள் ஆடைகள், வீட்டு உபயோக ஜவுளி இரகங்கள் உள்ளிட்ட பிரசித்திப் பெற்ற கைத்தறி இரகங்கள் விற்பனை செய்யப்படுகிறது.

**7.5 தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க கைத்தறி இரகங்களை மின்னனுமயமாக்குதல்.**

காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், பவானி ஜமுக்காளம், சேலம் வெண்பட்டு வேட்டிகள், ஆரணி பட்டுச் சேலைகள், திருபுவனம் பட்டுச் சேலைகள், ஈரோடு வீட்டு உபயோக ஜவுளிகள் உள்ளிட்ட கைத்தறி இரகங்கள் தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற இரகங்களாகும்.

மாநிலத்தின் பிரசித்தி பெற்ற கைத்தறி இரகங்களை பாதுகாக்கும் பொருட்டும், அவற்றின் சிறப்பம்சங்களை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்லவும், தமிழ்நாட்டின் கைத்தறி இரகங்களை மின்னனுமயமாக்கி ஆவணப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**7.6. கைத்தறி துறைக்கென தனி வலைதளம் உருவாக்குதல்**

கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலுக்கென அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்கள் தொடர்பான விவரங்களை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் வகையிலும், இத்துறை தொடர்புடைய அனைத்து நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், நெசவாளர்கள் மற்றும் இதர பங்குதாரர்களும் துறை தொடர்பாக தங்களுக்கு தேவைப்படும் விவரங்களை அவ்வப்போது அறிந்துகொள்ளும் வகையிலும், கைத்தறி துறைக்கென

பிரத்யேக வலைதளம் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த வலைதளமானது விரைவில் அறிமுகப்படுத்தப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது.

## 8 துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

### 8.1 தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட், சென்னை (கோ-ஆப்டெக்ஸ்)

தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் நலம் பேணும் "கோ-ஆப்டெக்ஸ்" என அனைவராலும் அறியப்பட்டுள்ள தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் 1935 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனம் முதன்மையான மாநில கூட்டுறவு சங்க அமைப்பாக நாடு முழுவதும் வியாபித்து தனித்துவத்துடன் கைத்தறித் துறைக்கு தன்னிகரற்ற பங்களிப்பை அளித்து வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் முத்திரையில் இருக்கும் பல நிறங்களைக் கொண்ட வண்ணத்துப் பூச்சி கைத்தறி ஆடைகளின் தரம் மற்றும் நியாயமான வர்த்தகத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டின் நெசவு பாரம்பரியத்தினை பறைசாற்றும் விதமாக திறமையான நெசவாளர்களை அடித்தளமாகக் கொண்டு ஒப்பிட முடியாத அழகியலுடன் நெய்யப்படும் கைத்தறி துணிகளால் இது சாத்தியமாகி உள்ளது. இன்று கோ-ஆப்டெக்ஸ் நீண்ட பாரம்பரியம் கொண்ட கைத்தறி துணிகளை பிரதிநிதித்துவப்படுத்துவதோடு நெசவாளர்களுக்கு நீடித்த வேலைவாய்ப்பு வழங்கும் சமூக நோக்கத்தோடும் செயல்பட்டு வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் தன்னுடன் இணைக்கப்பட்டுள்ள 1057 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களாலும், 197 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களாலும், உற்பத்தி

செய்யப்படுகின்ற துணிகளை நாடு முழுவதும் பரவலாக உள்ள தனது விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்து கைத்தறி சங்கங்களின் விற்பனை அபிவிருத்திக்கு பேருதவி புரிகிறது. இதனால் கூட்டுறவு நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டு நெசவாளர்களின் குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்தும் உயர்ந்த நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கீழ்க்காணும் உயர் நோக்கங்களை செயல்படுத்தி வருகிறது.

1. கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.

2. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சந்தை ஆதரவிற்கு உறுதுணையாக இருந்து, கைத்தறி இரகங்களை பிரபலப்படுத்துதல்.

3. வாடிக்கையாளர்களின் மாறிவரும் இரசனைக்கேற்ப பாரம்பரியம் மற்றும் புதுமையுடன் கூடிய இரகங்களை உருவாக்குதல்.

4. பல்வேறு வகையிலான புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துதல்.

நாடு முழுவதும் செயல்படும் தனது 154 விற்பனை நிலையங்கள் மூலமாக பல்வேறு கைத்தறி இரகங்களை கோ-ஆப்டெக்ஸ் விற்பனை செய்து வருகிறது.

தனது செயல்பாட்டின் ஒரு பகுதியாக அரசு செயல்படுத்தும் திட்டங்களில் தன்னை இணைத்துக் கொண்டு அரசு திட்டங்களை செயல்படுத்தி வரும் முகமை நிறுவனமாகவும் விளங்குகிறது.

**கோ-ஆப்டெக்ஸ் செயல்படுத்தி வரும் அரசின் திட்டங்கள்:**

1. முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர்க்கு வருவாய்த்துறையின் மூலம் வேட்டி சேலை வழங்கும் திட்டம். இத்திட்டத்திற்கு முகமை நிறுவனமாக கோ- ஆப்டெக்ஸ் செயல்படுகிறது.
2. வேட்டி சேலை வழங்கும் திட்டம்
3. விலையில்லா சீருடை வழங்கும் திட்டம்


**விற்பனை விவரங்கள் மற்றும் செயல்பாடுகள்:**

**1. 2021-2022 ல் சில்லரை விற்பனை**

2021-22 ஆம் ஆண்டு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ரூ.171.90 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது. ஆண்டு முழுவதும் தொடர் கொள்முதல் செய்ததன் மூலமாகவும், 14 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தியமையாலும், புதிய வடிவமைப்புகளுடன் கூடிய கைத்தறி துணிகளை

அறிமுகப்படுத்தியதாலும் ( NIFT / NID வடிவமைப்பாளர்களை கொண்டு) சிறப்பு இரகங்களான சட்டைகள், வேட்டிகள், கைலிகள், ஆர்கானிக் இரகங்கள் மற்றும் ஏற்றுமதி இரகங்களுக்கான பிரத்யேக விற்பனை நிலையங்கள் தொடங்கியது, 11 மண்டலத்தில் உள்ள பணியாளர்களுக்கு வேலைப்பயிற்சி மற்றும் ஊக்குவித்தல் பயிற்சியின் மூலமாகவும் இந்த விற்பனையை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் எய்தியுள்ளது.


கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமானது பெருமளவு இளம் வயது வாடிக்கையாளர்களுக்கு முகநூல் மற்றும் சமூக வலைதளங்களை பயன்படுத்தி விளம்பரம் செய்ததன் மூலமாக அவர்கள் முதன்முறையாக கைத்தறி துணிகளை வாங்கி பயன்படுத்த தொடங்கியுள்ளனர்.




**மின் வணிகம் விற்பனை:**

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது வலைதளத்தின் மூலம் மின் வணிக விற்பனையை அறிமுகப்படுத்தி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதிக அளவில் விற்பனையைப் பெருக்கி வருகின்றது. மின் வணிகம் துவங்கப்பட்ட 2014-15 ஆம் ஆண்டு முதல் மின் வணிக விற்பனை ஏற்றமிக்க வகையில் நடைபெற்று வருகிறது.

மின் வணிக விற்பனையின் மூலம் ரூ.135.47 இலட்சத்திற்கு 2021-2022 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.




**2021-2022-ல் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள்:**

2021-22 ஆம் ஆண்டில் 14 கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் நவீனமயாக்கப்பட்டுள்ளது. பெங்களூரு மண்டலத்தில் ராஜாஜி நகர், பசவன்குடி மற்றும் விஜயநகரம் விற்பனை நிலையங்கள், சென்னை மண்டலத்தில் தலைமைச்

செயலகம் மற்றும் பட்டர்ஃபிளை, அஷ்டலஷ்மி, அண்ணா நகர், மைலாப்பூர் மற்றும் தாம்பரம் விற்பனை நிலையங்கள், தஞ்சாவூர் மண்டலத்தில் பொதிகை, திருச்சி மற்றும் புதுக்கோட்டை விற்பனை நிலையங்கள். கடலூர் மண்டலத்தில் பாண்டிச்சேரி விற்பனை நிலையம், மதுரை மண்டலத்தில் அங்கயற்கண்ணி விற்பனை நிலையம், வேலூர் மண்டலத்தில் திருவண்ணாமலை விற்பனை நிலையம் ஆகியவை ரூ.238.00 இலட்சம் மதிப்பில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 5 சிறப்பு இரக வாரியான விற்பனை நிலையங்களை கோ-ஆப்டெக்ஸ் வணிக வளாகம், சென்னையில் தொடங்கியுள்ளது. இந்த விற்பனை நிலையங்கள் ரூ.98 இலட்சம் மதிப்பில் கோ-ஆப்டெக்ஸ் சட்டைகள், கோ-ஆப்டெக்ஸ் வேட்டிகள், கோ-ஆப்டெக்ஸ் கைலிகள், கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதி இரகங்கள் மற்றும்

கோ-ஆப்டெக்ஸ் ஆர்கானிக் இரகங்கள் என்ற பெயரில் கைத்தறி ஆதரவு திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.




**கோ-ஆப்டெக்ஸ் பசவன்குடி விற்பனை நிலையம், பெங்களூரு**



**கோ-ஆப்டெக்ஸ் ராஜாஜி நகர் விற்பனை நிலையம், பெங்களூரு**



**கோ-ஆப்டெக்ஸ், விஜயநகர் விற்பனை நிலையம், பெங்களூரு**



**கோ-ஆப்டெக்ஸ் தலைமைச் செயலகம் விற்பனை நிலையம், சென்னை**



**கோ-ஆப்டெக்ஸ் பட்டர்ஃபிளை விற்பனை நிலையம், சென்னை**




**கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதி ரகங்கள் விற்பனை நிலையம், சென்னை**




**கோ-ஆப்டெக்ஸ் வேட்டிகள், கைலிகள் மற்றும் ஆர்கானிக் இரகங்கள் விற்பனை நிலையம், சென்னை**




**கோ-ஆப்டெக்ஸ் பிரத்யேகமான பருத்தி மற்றும் லினன் சட்டை விற்பனை நிலையம், சென்னை**

**வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் செயல்படுத்திவரும் விற்பனை முன்னேற்ற திட்டங்கள்:**

**கோ-ஆப்டெக்ஸ் மாதாந்திர சேமிப்புத் திட்டம்**

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பிரபலமான மாதாந்திர சேமிப்புத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர்கள், குறைந்தபட்சம்

ரூ.300/- முதல் மாதத் தவணையாக செலுத்தலாம். வாடிக்கையாளர்கள் 10 தவணைகள் செலுத்திய பிறகு 11வது மற்றும் 12வது தவணை தொகை கோ-ஆப்டெக்ஸால் ஊக்கத் தொகையாக செலுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் ரூ.12.77 கோடி மதிப்பிற்கு 2021-22 ஆம் ஆண்டில் விற்பனை நடைபெற்றுள்ளது.

**பட்டுத் திருவிழா**

பட்டுச் சேலைகள் விற்பனையை அதிகரிப்பதன் மூலம் கோ-ஆப்டெக்ஸின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு கோ-ஆப்டெக்ஸ் "பட்டுத் திருவிழா" சென்னை தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை மற்றும் சேலம் தங்கம் பட்டு மாளிகை விற்பனை நிலையங்களில் மார்ச் 2022-ல் நடைபெற்றது. இதன் மூலம் ரூ.2.10 கோடி மதிப்பிலான துணிகள் விற்பனை செய்யப்பட்டன.







**கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல்:**

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமானது, கைத்தறி இரகங்களை ஏற்றுமதி செய்யும் பொருட்டு 1975 ஆம் ஆண்டு "கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல்" எனும் தனிப்பிரிவை உருவாக்கி. சென்னிமலை பகுதி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி இரகங்களை, ஜெர்மனி, பெல்ஜியம், ஸ்பெயின், இத்தாலி. பிரான்சு, சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து மற்றும் இதர நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. கைத்தறி வீட்டு உபயோக இரகங்களான போர்வைகள், மேஜை விரிப்புகள், சமையலறை துணி வகைகள், நாகரீக பைகள் முதலியவற்றிற்கு ரூ.104.00 இலட்சம் மதிப்பிற்கு ஏற்றுமதி

செய்ய 2021-22 ஆம் ஆண்டில் பணி ஆணைகள் பெறப்பட்டுள்ளது.

**கண்காட்சிகளில் பங்கேற்பு:**

கைத்தறி பொருட்களை சர்வதேச சந்தைகளில் பிரபலப்படுத்துவதற்காக 2021-2022 ஆம் ஆண்டில் கீழ்காணும் நேரடி மற்றும் மெய்நிகர் கண்காட்சிகளில் கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல் பங்கேற்றது.

**மெய்நிகர் கண்காட்சிகளில் பங்கேற்ற பட்டியல்**

| **வ. எண்** | **நிகழ்ச்சிகள் விபரம்** | **கலந்து கொண்ட காலம்** |
|---|---|---|
| 1. | இந்திய கைத்தறி இரகங்கள் மற்றும் வீட்டு உபயோக இரகங்களுக்கான கண்காட்சி – ஜப்பான் | 08.02.2022 முதல் 10.02.2022 வரை |
| 2. | இந்திய கைத்தறி இரகங்கள் மற்றும் வீட்டு உபயோக இரகங்களுக்கான கண்காட்சி – ஜெர்மனி மற்றும் பெல்ஜியம் | 14.02.2022 முதல் 16.02.2022 வரை |

| வ. எண் | நிகழ்ச்சிகள் விபரம் | கலந்து கொண்ட காலம் |
|---|---|---|
| 3. | இந்திய கைத்தறி இரகங்கள் மற்றும் வீட்டு உபயோக இரகங்களுக்கான கண்காட்சி – சுவீடன் மற்றும் டென்மார்க் | 02.03.2022 முதல் 04.03.2022 வரை |
| 4. | இந்திய கைத்தறி இரகங்கள் மற்றும் வீட்டு உபயோக இரகங்களுக்கான கண்காட்சி – அமெரிக்கா | 08.03.2022 முதல் 10.03.2022 வரை |
| 5. | இந்திய கைத்தறி இரகங்கள் மற்றும் வீட்டு உபயோக இரகங்களுக்கான கண்காட்சி - இங்கிலாந்து | 15.03.2022 முதல் 17.03.2022 வரை |

**நேரிடையாக கண்காட்சிகளில் பங்கேற்பு**

| வ. எண் | நிகழ்ச்சி | கலந்து கொண்ட காலம் |
|---|---|---|
| 1. | சர்வதேச கண்காட்சி – துபாய் 2020 | 25.03.2022 முதல் 31.03.2022 வரை |

**தூய ஜரிகை பட்டுசேலைகளில் உள்ள ஜரிகையின் தரம் உறுதிபடுத்துவதற்காக "ஜரிகை உத்திரவாத அட்டை" கோ-ஆப்டெக்ஸில் அறிமுகம்.**

நம் நாட்டிலேயே முதன் முறையாக "ஜரிகை உத்தரவாத அட்டை" யை அறிமுகப்படுத்தி, காஞ்சிபுரம் சுத்த ஜரிகை பட்டு சேலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள ஜரிகையில் உள்ள தங்கம் மற்றும் வெள்ளியின் அளவு சதவீதமானது, அரசு நிர்ணயித்துள்ள தர அளவீடுகளின் படி உள்ளது என்பதை வாடிக்கையாளர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் ஜரிகை உத்திரவாத அட்டையானது கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் இணைக்கப்பட்டு வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் காஞ்சிபுரம் சுத்த பட்டு சேலைகளில் உள்ள ஜரிகையின் தரம் பரிசோதிக்கப்பட்டு, ஜரிகை உத்தரவாத அட்டை இணைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தற்சமயம் இந்த ஜரிகை உத்தரவாத அட்டை மக்களிடையே பிரபலமாகி வருகிறது.





**"ஜரிகை உத்திரவாத அட்டை"**

**"தமிழ் தறி" தொகுப்பு:**

வாடிக்கையாளர்களை பெருமளவில் கவரும் பொருட்டு, “தமிழ்தறி” எனும் தொகுப்பின் கீழ் பட்டு பாவாடை மற்றும் சட்டை, இயற்கை பருத்தியிலான குழந்தைகளுக்கான ஆடைகள், புதியதாக வடிவமைக்கப்பட்ட பட்டு மற்றும் பருத்தி சேலைகள் ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

"ஜரிகை உத்திரவாத அட்டை" மற்றும் "தமிழ்தறி" தொகுப்பு இரகங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 23.10.2021 அன்று அறிமுகம் செய்யப்பட்டது.





**பட்டு பாவாடை சட்டை, இயற்கை பருத்தியிலான குழந்தைகளுக்கான ஆடைகள்**

**அரசு திட்டங்களின் செயல்பாடுகள்:**

**வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டம் பொங்கல் – 2022**

பொங்கல் 2022 வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டத்தில கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஒரு முகமை நிறுவனமாக செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் 80.20 இலட்சம் எண்ணிக்கையிலான சேலைகள் 79.47

இலட்சம் எண்ணிக்கையிலான வேட்டிகள் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டன.

**விலையில்லா பள்ளிச் சீருடைத் துணி விநியோகம்**

பள்ளி சிறார்களுக்கு, இலவச சீருடைத் துணி வழங்கும் திட்டத்தின் கீழ் முகமை நிறுவனங்களில் ஒன்றாக கோ-ஆப்டெக்ஸ் செயல்பட்டு வருகிறது. டிரில் இரகங்கள் 25.16 இலட்சம் மீட்டர், கேஸ்மென்ட் துணி ரகம் 93.50 இலட்சம் மீட்டர் மற்றும் சட்டை துணி 0.99 இலட்சம் மீட்டர் சமூக நலத் துறைக்கு 2021-2022 ஆண்டில் விநியோகம் செய்யப்பட்டன.

**முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வேட்டி சேலைகள் வழங்கும் திட்டம்**

முதியோர் ஓய்வூதிய திட்ட பயனாளிகளுக்கு இலவசவேட்டி சேலை வழங்கும் திட்டம் தீபாவளி 2021 மற்றும் பொங்கல் 2022-ன் பணிகளுக்கான முகமை நிறுவனமாக கோ-

ஆப்டெக்ஸ் செயல்பட்டு வருகிறது. தீபாவளி 2021-க்கு 23.70 இலட்சம் சேலைகளும், 9.25 இலட்சம் வேட்டிகளும் பொங்கல் 2022-க்கு 23.50 இலட்சம் சேலைகளும், 9.03 இலட்சம் வேட்டிகளும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

**2022-23 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்:**

**விற்பனை இலக்கு**

புதிய வடிவமைப்புகளை உருவாக்குதல், புதிய இரகங்களை அறிமுகம் செய்தல். விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதல் மற்றும் விளம்பரங்கள் ஆகிய நடவடிக்கைகள் மூலம் 2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.300 கோடி விற்பனை இலக்கை அடைய கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

**புதிய முயற்சிகள்**

கோ-ஆப்டெக்ஸ் அதிகப்படியான வாடிக்கையாளரை குறிப்பாக இளம் வயதினரை கவர்ந்து விற்பனையை விரிவுபடுத்தும் நோக்கில் தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறி சேலைகள், துப்பட்டாக்கள் மற்றும் பிற துணி இரகங்களையும் மற்றும் காதி மற்றும் கைவினைப் பொருட்களையும் விற்பனைப்படுத்த பெருநகரங்களில் தனித்துவமான விற்பனை நிலையங்கள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**8.2 தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்**

தமிழ்நாடு சரிகை ஆலை, பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவைப்படும் சரிகையினை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் 1971-ம் ஆண்டு தொடங்கப்பட்டு 1974-ஆம் ஆண்டு முதல் வணிக ரீதியிலான உற்பத்தியை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம்


ISO:9001:2015 தரச்சான்று பெற்ற மாநில அரசு சார்ந்த ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவைப்படும் 60 சதவீத சரிகையினை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது. இந்நிறுவனம், காஞ்சிபுரத்தில் நிறுவியுள்ள "எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்" (X-Ray Fluorescence Analyser) மூலம் சரிகை மாதிரிகள் மற்றும் சரிகையை கொண்டு தயாரிக்கப்பட்ட துணிகள் போன்றவற்றிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் (Non–Destructive Testing Method) அவற்றில் உள்ள சரிகையின் தரத்தை ஆய்வு செய்யும் பணியையும் மேற்கொள்கிறது.

தமிழ்நாடு சரிகை ஆலையில் தற்போது 6 பணியாளர்கள் மற்றும் 49 தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். தமிழ்நாடு சரிகை ஆலையின் தொழிலாளர்களுக்கு

நடைமுறையிலிருந்த ஊதிய ஒப்பந்தம் 23.11.2018 அன்றுடன் முடிவடைந்தது.

அரசாணை (நிலை) எண்.24 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (இ1) துறை, நாள்.17.02.2020-ன்படி தமிழ்நாடு சரிகை நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.1750/- வீதம் 24.11.2018 முதல் ஊதிய உயர்வினை வழங்க அரசாணை பிறப்பித்துள்ளது. தமிழ்நாடு சரிகை ஆலையில் உள்ள மூன்று தொழிலாளர் சங்கங்களுடன் ஊதிய உயர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு தொழிலாளர்களுக்கான நிலுவை ஊதியம் முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 5 ஆண்டுகளுக்கு பிறகு தங்களுக்கு வழங்கப்பட்ட ரூ.1750/- ஊதிய உயர்வு மிகவும் குறைவு என தொழிலாளர்கள் கோரிக்கை எழுப்பியதால் அவர்களது கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.



**தங்க இழை தட்டையாக்கும் இயந்திரம்**




**செங்குத்தான தங்க முலாம் பூசும் இயந்திரம்**

இந்நிறுவனம் சரிகை உற்பத்திக்குத் தேவைப்படும் மூலப்பொருளான வெள்ளிப் பட்டிழையினையும், தங்கத்தையும் கொள்முதல் செய்து சரிகை உற்பத்தி செய்து வருகிறது. தமிழ்நாடு சரிகை ஆலை நிறுவனத்தில் அரசு பங்கு முதலீடு ரூ.34.40 இலட்சம் ஆகும். இந்நிறுவனம் ஈட்டிய இலாபத்தில் இதுநாள் வரையில் ரூ.180.37 இலட்சத்தினை ஈவுத்தொகையாக அரசுக்கு செலுத்தியுள்ளது.

**தமிழ்நாடு சரிகை ஆலையின் கடந்த 5 ஆண்டுகளின் செயல்பாடுகள்:**

| வருடம் | உற்பத்தி | உற்பத்தி மதிப்பு | விற்பனை | விற்பனை மதிப்பு | இலாபம் (வரிக்கு முன்) |
|---|---|---|---|---|---|
| | மார்க்குகளில் | ரூ. இலட்சத்தில் | மார்க்குகளில் | ரூ. இலட்சத்தில் | |
| 2017-18 | 30,501 | 3259.66 | 29,863 | 3,140 | 21.02 |
| 2018-19 | 31,415 | 3315.38 | 30,466 | 3,355 | 115.91 |
| 2019-20 | 30,461 | 3521.12 | 32,097 | 3,951 | 200.30 |
| 2020-21 | 20,950 | 3179.07 | 19,213 | 3,097 | 100.20 |
| 2021-22 | 22,386 | 3492.88 | 24,340 | 4,049 | 233.00 (உத்தேசமாக) |




சரிகையின் நிறம் மற்றும் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு, சூரத்திலிருந்து இரசாயனம் கொள்முதல் செய்யப்பட்டு தங்க முலாம் பூச்சு பிரிவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் CECRI காரைக்குடி பரிந்துரையின்படி கீழ்க்கண்ட மேம்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- தங்க முலாம் பூச்சு பிரிவில் பிளாட்டினம் கம்பிகளுக்கு பதில் துளையிடப்பட்ட துருப்பிடிக்காத இரும்பு தகடுகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

- கச்சாப் பொருட்களான வெள்ளிப்பட்டிழை தரத்தை மேம்படுத்தும் விதமான நீள அளவினை கணக்கிடும் கருவி பொருத்தப்பட்டு தர அளவீடுகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

- 240 கதிர்கள் கொண்ட அதிவேக நூற்பு இயந்திரம் கொள்முதல் செய்து நிறுவப்பட்டு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ஆலையில் மேலும் இரண்டு பழைய தங்க முலாம் பூசும் இயந்திரங்களுக்குப் பதிலாக, இரண்டு புதிய செங்குத்து வகையிலான தங்க முலாம் பூசும் இயந்திரம் நிறுவுவதன் மூலம் ஆலையில் உற்பத்தி செய்யப்படும் சரிகையின் தரம், நிறம், பளபளப்பினை கூட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

- சென்னை அண்ணா பல்கலைகழகத்திலுள்ள ஜவுளித் துறை மூலம் ஆலையில் உற்பத்தி செய்யப்படும் சரிகையின்

தரம், நிறம், பளபளப்பினை கூட்ட திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

**2022-23 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

- தமிழ்நாடு சரிகை நிறுவனம் மாதம் 4,000 சரிகை மார்க்குகள் உற்பத்தி செய்து, பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் சரிகை தேவையினையும் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

- தற்போது சூரத்திலிருந்து கொள்முதல் செய்யும் இரசாயனங்களை ஆலையிலேயே தயாரிப்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- ஆலை மற்றும் அலுவலக கட்டிடங்களை புதிப்பித்து ஆலையின் உள்கட்டமைப்பினை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 8.3 தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிட், ஈரோடு

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை 06.07.1973-ல் பதிவு செய்யப்பட்டு 05.09.1973 முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாலை துணி வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல், அச்சிடல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாலை மாதம் ஒன்றிற்கு 23.00 இலட்சம் மீட்டர் துணிகளை பதனிடும் திறன் பெற்றுள்ளது. தமிழக அரசு வழங்கும் சீருடைத் துணிகளை, இலவச சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் பதனிடும் பணிகளை செய்து வருகிறது. மேலும் கேரள அரசின் சீருடைத் திட்ட துணிகளையும் மற்றும் கோ-ஆப்டெக்ஸ், தேசிய பஞ்சாலைக் கழகம், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயமுத்தூர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கேரளா மாநில கைத்தறி

நெசவாளர் கூட்டுறவு சங்கம், கேரளா கைத்தறி வளர்ச்சிக் கழகம், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆகிய நிறுவனங்களின் துணிகளை பதனிடும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தற்போதைய ஆலையின் பதனிடும் திறன் நாள் ஒன்றுக்கு 90,000 மீட்டர் மற்றும் மாதம் ஒன்றுக்கு 23 இலட்சம் மீட்டர் என்ற அளவில் உள்ளது.

**சாயக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்**

பூஜ்ய கழிவு நீர் என்ற நிலையினை அடைய, ஆலையில் கழிவு நீர் மேலாண்மையுடன் கூடிய எதிர் சவ்வூடு பரவல் முறையினை பயன்படுத்தி தரமான துணிகள் பதனீடு செய்வதுடன், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதலின்படி சூரிய


ஆவியாக்கல் முறையினை தவிர்த்து, தற்போது போர்ஸ்டு சர்குலேசன் எவாப்பரேட்டர் (FCE) மற்றும் அஜிடேட்டட் தின் பிலிம் டிரையர் (ATFD) ஆகிய இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இந்த ஆலையின் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்குடன், கோன் சாயமிடும் பிரிவு ரூ.4 கோடி மதிப்பீட்டில் ஆரம்பிக்க, தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகம் மற்றும் தமிழ்நாடு அரசால் 2019-ஆம் ஆண்டில் முதற்கட்டமாக ரூ.165 இலட்சம் விடுவிக்கப்பட்டு, கோன் நூல் சாயமிடும் இயந்திரங்கள் நிறுவுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், கோன் நூல் சாயமிடும் இயந்திரங்கள் நிறுவும் பணியினை வெற்றிகரமாக முடிக்கும் பொருட்டு, 2021-2022 ஆம் ஆண்டில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகம் மற்றும்

தமிழ்நாடு அரசால் இத்திட்டத்தின் எஞ்சிய தொகை ரூ.195.00 இலட்சம் தமிழ்நாடு கூட்டுறவு பதனிடும் ஆலைக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாலை, 2021-22 ஆம் ஆண்டில் 129.43 இலட்சம் மீட்டர் துணிகளை பதனிட்டு ரூ.24.79 கோடி அளவிற்கு வணிகம் மேற்கொண்டு ரூ.4.15 கோடி உத்தேச நிகர இலாபம் ஈட்டியுள்ளது.



**2022-23 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

இவ்வாலையானது 2022-23 ஆம் ஆண்டில் தமிழக அரசின் இலவச சீருடை திட்டத்தின்கீழ் 153 இலட்சம் மீட்டர்கள் மற்றும் இதர நிறுவனங்களின் துணிகள் 3.00 இலட்சம் மீட்டர்கள் என மொத்தம் 156 இலட்சம் மீட்டர் துணிகளை பதனிட செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆலை உத்தேசமாக ரூ.4.40 கோடி நிகர இலாபம் ஈட்ட வாய்ப்புள்ளது.



**ஸ்டென்டர் இயந்திரம்**



**மெர்சரைஸிங் இயந்திரம் (துணி மெருகேற்றுதல்)**



**ஜிகர் இயந்திரம் (பருத்தி துணி சாயமிடுதல்)**



**தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் உள்ள A.T.F.D இயந்திரம்**

## 8.4 தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் 1964 ஆம் ஆண்டு ஒரு அரசு பொதுத்துறை நிறுவனமாக, செயல்படத் துவங்கியது. இந்த நிறுவனம் கூட்டுறவு சாராத நெசவாளர்களின் தொழிலுக்கான முதலீட்டிற்கு நியாயமான வட்டி விகிதத்தில் கடன் வழங்குவதற்காகவும், உள்ளூர் பணமளிப்பவர்களின்

பிடியிலிருந்து விடுவிப்பதற்காகவும் துவங்கப்பட்டதாகும். இந்த உயர்ந்த நோக்கத்தை செயல்படுத்த இந்நிறுவனம் அரசு மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து பங்குத்தொகை மற்றும் கடன் ஆகியவை மூலம் நிதி ஆதாரங்களை பின்வருமாறு திரட்டியுள்ளது:-

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| அ) பங்கு மூலதனம் | | |
| (i) | அரசு | 267.00 |
| (ii) | உறுப்பினர்கள் | 162.24 |
| மொத்த பங்கு மூலதனம் | | 429.24 |
| ஆ) நிலுவையிலுள்ள மாநில அரசின் கடன் | | 494.15 |
| மொத்தம் (அ + ஆ) | | 923.39 |

இக்கழகத்தில் மொத்தம் 11,841 உறுப்பினர்கள் உள்ளனர். மற்ற பிரிவினருக்கு கடன் தள்ளுபடி அளிக்கப்பட்டுள்ளதால், இக்கழகத்தில் கடன் பெற்ற உறுப்பினர்கள் கடன் தொகையை மீளச் செலுத்த தயக்கமாக இருப்பதால் கழகத்தின் நடைமுறை மூலதனம் பாதிக்கப்பட்டுள்ளது. கழகத்தின் உறுப்பினர்கள் பெற்ற கடனை மீளச் செலுத்தாததால் கழகத்தின் முதன்மை நோக்கமான கூட்டுறவு சாராத நெசவாளர்களுக்கு கடன் வழங்குதல் என்ற நோக்கம் பாதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பல்வேறு அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதால் இக்கழகம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகத்தினை பின்வரும் அரசு திட்டங்களை செயல்படுத்தும் / முகமை நிறுவனமாக அரசு நியமித்துள்ளது:-

| வ. எண் | திட்டங்களின் பெயர்கள் |
|---|---|
| 1 | திருச்சி மெகா கைத்தறி குழுமம் |
| 2 | விருதுநகர் மெகா கைத்தறி குழுமம் |
| 3 | கைத்தறித் துணிகளை லூம்வேர்ல்டு இணையதளம் மூலம் வணிகப்பெயரில் விற்பனை மேற்கொள்ளுதல் |
| 4 | தேசிய / மாநில அளவிலான கைத்தறி கண்காட்சி நடத்துதல் |
| 5 | விற்பனை ஊக்குவிப்புத் திட்டம் |
| 6 | கைத்தறி ஆதரவுத் திட்டம் |
| 7 | சேலை மற்றும் வேட்டி வழங்கும் திட்டத்தின் முகமை நிறுவனங்களில் ஒன்றாக |
| 8 | விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் முகமை நிறுவனங்களில் ஒன்றாக |

2021-22-ஆம் ஆண்டில் உறுப்பினர்களின் கடனில் அசல் ரூ.5.56 இலட்சம் மற்றும் வட்டி ரூ.17.78 இலட்சம் வசூல் மேற்கொள்ளப்பட்டது.

இக்கழகத்தின் 2021-2022 ஆம் ஆண்டிற்கான தற்காலிக நிகர இலாபம் ரூ.10.00 இலட்சம் என எதிர்பார்க்கப்படுகிறது.

லூம்வேர்ல்டு அமைப்பினை பிரபலப்படுத்தவும் வாடிக்கையாளர்களுக்கு மின்வணிக இணையதள கொள்முதல் வசதியினை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் "லூம்வேர்ல்டு" வணிக பெயரிலான மின்வர்த்தக இணையதளம் www.loomworld.in அறிமுகப்படுத்தப்பட்டது.




**லூம்வேர்ல்டு மின்வர்த்தக இணையதளம்**

**2022-23 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்**

- பல்வேறு அரசு திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனம் / முகமை நிறுவனமாக தொடர்ந்து செயல்படுதல்.
- வேட்டி சேலை வழங்கும் திட்டம் பொங்கல்-2023-னினை செயல்படுத்தும் முகமை நிறுவனமாக தொடர்ந்து செயல்படுவதன் மூலம் கையாளுதல் கட்டணமாக சுமார் ரூ.96.00 இலட்சம் பெற எதிர்நோக்கப்படுகிறது.
- சீருடை வழங்கும் திட்டம் கல்வியாண்டு 2022-23-ன் முகமை நிறுவனமாக தொடர்ந்து செயல்படுவதன் மூலம் கையாளுதல் கட்டணமாக ரூ.90.00 இலட்சம் பெற எதிர்நோக்கப்படுகிறது .
- உறுப்பினர்களின் கடனில் அசல் ரூ.75 இலட்சம் மற்றும் வட்டி ரூ.100 இலட்சம் வசூல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## 9. நீடித்த வளர்ச்சி இலக்குகள்

மாநிலத்தில், கைத்தறியின் அனைத்து பிரிவுகளிலும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடைவதற்கான கொள்கைகளை கைத்தறி துறை வகுக்கிறது. அவை நீடித்த வளர்ச்சி இலக்குகளுடன் இசைவானதாக உள்ளது.

வடிவமைப்புகளை உருவாக்குதல், உட்கட்டமைப்பு மேம்பாடு, கைத்தறிகளில் தொழில்நுட்பத்தை புகுத்துதல் மற்றும் கைத்தறி துணிகளை சந்தைப்படுத்துதலை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் நெசவு உபதொழில் புரிபவர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பை வழங்கி சிறந்த ஊதியம் கிடைப்பதற்கு துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழ்நாட்டில் நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக அரசால் உயர் நிலை குழு மற்றும் செயற்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

பிற துறைகளுடன் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைக்கென பின்வரும் நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்திட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :

| **இலக்கு எண்** | **உள்ளடக்கிய இலக்குகள்** |
|---|---|
| 7 | அனைவருக்கும் கட்டுப்படியாகக்கூடிய நம்பகமான, நிலையான மற்றும் நவீன எரிசக்திக்கான அணுகுமுறையினை உறுதிசெய்தல். |
| 8 | நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி, முழுமையான உற்பத்தி திறன்மிக்க வேலைவாய்ப்பு மற்றும் அனைவருக்கும் நியாயமான வேலை ஆகியவற்றை ஊக்குவித்தல். |
| 9 | உறுதியான உட்கட்டமைப்பை உருவாக்குதல், உள்ளடக்கிய மற்றும் நிலையான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதிய முயற்சிகளை வளர்த்தல். |
| 11 | நகரங்கள் மற்றும் மனித குடியிருப்புகளை உள்ளடக்கிய, பாதுகாப்பான, மீள்தன்மை மற்றும் நிலையானதாக உருவாக்குதல். |

நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதில் முக்கியமானதாக அடையாளம் காணப்பட்ட திட்டங்களை கண்காணிப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்கும், துறையின் பணிகளுக்கு உதவுவதற்கும், பலப்படுத்துவதற்கும் "ஒருங்கிணைப்பு அலுவலர்" ஒருவரை துறை நியமனம் செய்துள்ளது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது :

இலக்கு எண் 9-ன்கீழ், ஈரோட்டில் அமைந்துள்ள தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல் மற்றும் அச்சிடல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாலை மாதம் ஒன்றிற்கு 23 இலட்சம் மீட்டர் துணிகளை பதனிடும் திறன் பெற்றுள்ளது. ஆலையின் உற்பத்தி மற்றும் வியாபாரத்திறனை மேலும் அதிகரிக்கும் பொருட்டு, ரூ.4.00 கோடி மதிப்பில் தொடர் சலவை இயந்திரம் (Continuous Bleaching Range) நிறுவப்படும்.

நெசவாளர்களுக்கு அடுத்த 5 ஆண்டுகளில் மொத்தம் ரூ.200 கோடி மதிப்பில் 5000 பசுமை வீடுகள் கட்டப்படும் என அரசு அறிவித்துள்ளது. இதன்படி, இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் ரூ.40.00 கோடி செலவில் கிராமப்புறங்களில் 500 வீடுகளும், நகர்ப்புறங்களில் 500 வீடுகளும் கட்டப்படும். 2021-22 ஆம் ஆண்டில், கைத்தறி நெசவாளர்களுக்கான பசுமை வீடுகள் கட்டுவதற்கான அரசு மான்யம் நகர்ப்புறங்களுக்கு ரூ.2.10 இலட்சத்தில் இருந்து ரூ.4.00 இலட்சமாகவும், கிராமப்புறங்களுக்கு ரூ.1.70 இலட்சத்தில் இருந்து ரூ.4.00 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களுக்கு, தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து துறையின் மூலமாகவும், நகர்ப்புறங்களுக்கு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாகவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## 10. கைத்தறி துறையின் 2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு

2022-23 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கைத்தறி துறைக்கு பின்வரும் விவரப்படி ரூ.1141.17 கோடி மாநில அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2022-23 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வேட்டி சேலை வழங்கும் திட்டம் | 49364.00 |
| 2 | கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் | 657.30 |
| 3 | விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் | 38920.35 |
| 4 | வட்டி மானியத் திட்டம் | 2160.00 |
| 5 | தள்ளுபடி மானியத் திட்டம் | 15000.00 |
| 6 | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு காப்பீட்டுக் கட்டணம் செலுத்துதல் | 0.01 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2022-23 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 7 | கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் - பங்குத்தொகைகள் | 1200.00 |
| 8 | முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம் | 2700.00 |
| 9 | மாநில அளவிலான சிறந்த நெசவாளர்கள் விருது | 20.40 |
| 10 | சிறந்த ஏற்றுமதியாளர்கள் விருது | 1.00 |
| 11 | புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை 2019-ன்கீழ் விசைத்தறியை மேம்படுத்துதல் | 100.01 |
| 12 | ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குழும வளர்ச்சித் திட்டம் | 8.01 |
| 13 | ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விற்பனை ஊக்குவிப்புத் தொகை | 150.01 |
| 14 | ஈரோட்டில் உள்ள விசைத்தறி சேவை மையத்திற்கு வாடகை மானியம் | 6.72 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2022-23 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 15 | விசைத்தறி பதிவு நிதிக்கு மாற்றுதல் | 45.06 |
| 16 | சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | 3415.71 |
| 17 | அமலாக்கப் பிரிவின் சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | 367.94 |
| 18 | இதர இனங்கள் | 0.07 |
| | **மொத்தம்** | **114116.59** |

# 11. தமிழ்நாடு கைத்தறி செறிவுப் பகுதிகள்

| வ. எண். | இரகங்கள் | சரகத்தின் பெயர் | உற்பத்தி மேற்கொள்ளப்படும் பகுதி |
|---|---|---|---|
| | | **பட்டு ரகங்கள்** | |
| 1 | **பட்டு சேலைகள்** | காஞ்சிபுரம் | பிள்ளையார் பாளையம் அய்யம்பேட்டை, செவிலிமேடு, ஓரிக்கை |
| | | கும்பகோணம் | திருபுவனம், கும்பகோணம், தாராசுரம், தஞ்சாவூர் |
| | | சேலம் | அம்மாப்பேட்டை, கொண்டலாம்பட்டி, வனவாசி |
| | | திருவண்ணாமலை | ஆரணி கொருக்காத்தூர், ஒண்ணுபுரம் |
| | | கோயம்புத்தூர் | சிறுமுகை, ஒண்டிபுதூர் |
| | | கடலூர் | மோட்சகுளம், புவனகிரி |
| | | திருச்செங்கோடு | இராசிபுரம் |
| 2. | **பட்டு வேட்டி மற்றும் பட்டு அங்கவஸ்திரம்** | சேலம் | சேலம் அம்மாப்பேட்டை |
| 3. | **பட்டு சட்டைகள்** | சேலம் | சேலம் அம்மாப்பேட்டை |

| வ. எண். | இரகங்கள் | சரகத்தின் பெயர் | உற்பத்தி மேற்கொள்ளப்படும் பகுதி |
|---|---|---|---|
| **பருத்தி ரகங்கள்** | | | |
| 1 | **பருத்தி சேலைகள்** | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், பொள்ளாச்சி, சிறுமுகை, வதம்பச்சேரி |
| | | பரமக்குடி | பரமக்குடி, எமனேஸ்வரம், காரைக்குடி |
| | | கும்பகோணம் | ஜெயங்கொண்டம், அய்யம்பேட்டை |
| | | சேலம் | அம்மாப்பேட்டை, வனவாசி, தாரமங்கலம் |
| | | திருச்செங்கோடு | ஆர்.புதுப்பாளையம், இராசிபுரம் |
| | | விருதுநகர் | அருப்புக்கோட்டை |
| | | திண்டுக்கல் | பழனி, சின்னாளபட்டி |
| | | மதுரை | மதுரை, நிலையூர் |
| | | திருச்சி | உறையூர் |
| | | கடலூர் | ஸ்ரீமுஷ்ணம், மாமங்கலம் |
| 2 | **பருத்தி வேட்டிகள்** | சேலம் | அம்மாப்பேட்டை, ஆட்டையாம்பட்டி |
| | | நாகர்கோவில் | வடசேரி, குளச்சல், பள்ளியாடி |
| | | திருச்செங்கோடு | மல்லசமுத்திரம், வெண்ணந்தூர் |
| | | திருச்சி | உறையூர், மணல்மேடு |

| வ. எண். | இரகங்கள் | சரகங்கள் | உற்பத்தி மேற்கொள்ளப்படும் பகுதி |
|---|---|---|---|
| 3 | லுங்கி | வேலூர் | குடியாத்தம் |
| | | கடலூர் | குறிஞ்சிப்பாடி |
| | | காஞ்சிபுரம் | பிள்ளையார்பாளையம், ஒலிமுகமதுபேட்டை, திருக்கழுக்குன்றம், அய்யம்பேட்டை, ஒரக்காட்டுபேட்டை |
| | | மதுரை | T. குன்னத்தூர் |
| | | விருதுநகர் | அருப்புக்கோட்டை |
| | | திருநெல்வேலி | கல்லிடைக்குறிச்சி, சங்கரன்கோவில் |
| 4 | பெட்ஷீட் மற்றும் படுக்கை விரிப்புகள் | ஈரோடு | ஈரோடு, சென்னிமலை, காஞ்சிக்கோவில், நசியனூர் |
| | | கரூர் | வெங்கமேடு, மண்மங்கலம் |
| | | சேலம் | அயோத்தியாப்பட்டினம், கருங்கல்பட்டி, தாதகாப்பட்டி |
| | | திருநெல்வேலி | கல்லிடைக்குறிச்சி |

| வ. எண். | இரகங்கள் | சரகங்கள் | உற்பத்தி மேற்கொள்ளப்படும் பகுதி |
|---|---|---|---|
| 5 | **துண்டு** | ஈரோடு | ஈரோடு, சென்னிமலை, காஞ்சிக்கோவில் |
| | | சேலம் | தருமபுரி, பாப்பாரப்பட்டி தாரமங்கலம் |
| | | திருச்செங்கோடு | எடப்பாடி |
| | | திருநெல்வேலி | கல்லிடைக்குறிச்சி, தென்காசி |
| 6 | **வீட்டு அலங்கார துணிகள் மற்றும் மேசை விரிப்புகள்** | ஈரோடு | ஈரோடு, சென்னிமலை |
| | | கரூர் | கரூர், வெங்கமேடு |
| 7 | **தரை விரிப்புகள்** | ஈரோடு | பவானி |
| | | திருச்செங்கோடு | எடப்பாடி |
| 8 | **கொசு வலை** | சேலம் | பாப்பாரப்பட்டி |
| | | கடலூர் | நடுவீரப்பட்டு |
| 9 | **கோரா சேலைகள்** | கோயம்புத்தூர் | சிறுமுகை |
| | | ஈரோடு | கோபிச்செட்டிப் பாளையம், தொட்டம்பாளையம் |
| | | திருப்பூர் | கணபதிபாளையம் |
| | | திண்டுக்கல் | பழனி, சின்னாளபட்டி |

| வ. எண். | இரகங்கள் | சரகங்கள் | உற்பத்தி மேற்கொள்ளப்படும் பகுதி |
|---|---|---|---|
| 10 | **செயற்கை பட்டு சேலைகள்** | பரமக்குடி | பரமக்குடி, எமனேஸ்வரம் |
| | | திண்டுக்கல் | பழனி, சின்னாளபட்டி. |
| | | மதுரை | மதுரை |
| | | திருநெல்வேலி | வீரவநல்லூர், பாளையங்கோட்டை |
| 11 | **வேட்டி சேலை வழங்கும் திட்டம் - சேலைகள்** | விருதுநகர் | ஸ்ரீவில்லிபுத்தூர், சுந்தரபாண்டியம், ராஜபாளையம், அருப்புக்கோட்டை |
| | | திருவள்ளூர் | அம்மையார்குப்பம், வங்கனூர், பொதட்டூர்பேட்டை, பள்ளிப்பட்டு. |
| | | வேலூர் | சோளிங்கபுரம், திருமால்பூர், குருவராஜப்பேட்டை, மின்னல் |
| | | திருவண்ணாமலை | வந்தவாசி |
| | | திருநெல்வேலி | சாயர்புரம், சங்கரன்கோவில், புளியங்குடி |
| | | மதுரை | ஆண்டிப்பட்டி |
| | | காஞ்சிபுரம் | எலப்பாக்கம் |

| வ. எண். | இரகங்கள் | சரகங்கள் | உற்பத்தி மேற்கொள்ளப்படும் பகுதி |
|---|---|---|---|
| 12 | **வேட்டி சேலை வழங்கும் திட்டம் – வேட்டிகள்** | நாகர்கோவில் | வடசேரி, குளச்சல், பள்ளியாடி |
| | | திருச்செங்கோடு | வெண்ணாந்தூர், மல்லசமுத்திரம் |
| | | சேலம் | அம்மாபேட்டை, ஆட்டையாம்பட்டி |
| | | காஞ்சிபுரம் | மானாம்பதி |
| 13 | **சீருடை வழங்கும் திட்டம் - டிரில் துணி** | ஈரோடு | சென்னிமலை |
| 14 | **சீருடை வழங்கும் திட்டம் - கேஸ்மண்ட் துணி** | விருதுநகர் | ஸ்ரீவில்லிப்புத்தூர், சுந்தரபாண்டியம், ராஜபாளையம் |
| | | சேலம் | ஆட்டையாம்பட்டி |
| 15 | **சீருடை வழங்கும் திட்டம் - கட்டமிட்ட சட்டைத் துணி** | கோயம்புத்தூர் | சூலூர், கருமத்தம்பட்டி, சோமனூர் |
| | | திருப்பூர் | பல்லடம் |
| | | ஈரோடு | ஈரோடு, பெருந்துறை |
| | | திருச்செங்கோடு | திருச்செங்கோடு, பள்ளிபாளையம், குமாரபாளையம் |
| | | சேலம் | சேலம் |

# துணிநூல் துறை

## 1. முன்னுரை

துணிநூல் மற்றும் ஆடைத் தொழிலானது உலகில் மிகப்பெரிய தொழில் பிரிவுகளில் ஒன்றாகும். மேலும், இது மனித குலத்தின் வாழ்வில் ஒருங்கிணைந்ததாகவும் உள்ளது. ஜவுளித் தொழிலானது, வடிவமைப்பு, உற்பத்தி, நூல் விநியோகம் மற்றும் ஆடைகள் ஆகியவற்றை முதன்மையாகக் கொண்டது.

மக்கள் தொகை அதிகரிப்பு, தொழில்நுட்பம் மற்றும் தொழில்துறையில் ஜவுளிப் பயன்பாடுகள் அதிகரிப்பு ஆகியவை ஜவுளித்தேவையின் வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றன.

இந்தியாவில் ஜவுளித் தொழில், விவசாயத்திற்கு அடுத்த படியாக இரண்டாவது பெரிய வேலைவாய்ப்பு வழங்கும் தொழிலாக, 45 மில்லியன் மக்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினை வழங்கி வருகிறது.

தமிழ்நாடு, துணிநூல் மற்றும் ஆடைத் தொழிலில் பாரம்பரியமாக உள்ளதோடு, நாட்டில் இரண்டாவது பெரிய பங்களிப்பாளராகவும், குறிப்பாக பருத்தியை அடிப்படையாகக் கொண்டதாகவும் உள்ளது.

தமிழ்நாடு துணிநூல் மற்றும் ஆடைத் தொழிலில் நாட்டின் முன்னோடி மாநிலமாக விளங்குவதோடு, பின்வரும் பிரிவுகளிலும் முன்னோடியாக உள்ளது.




துணிநூல் மற்றும் ஆடைத் தொழிலானது, தமிழ்நாட்டில் ஏறத்தாழ 3.1 மில்லியன் மக்களுக்கு நேரடி

வேலைவாய்ப்பு வழங்குவதோடு, ரூ.50,000 கோடிக்கும் அதிகமான மதிப்பிலான ஆடைகள் ஏற்றுமதி வணிகத்தைக் கொண்டுள்ளது.

## 2. துணிநூல் துறை

துணிநூல் மற்றும் ஆடைத் தொழிலின் பலதரப்பட்ட அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், தமிழ்நாடு அரசு இதுவரை இருந்த கைத்தறி மற்றும் துணிநூல் துறையினை இரண்டாகப் பிரித்து துணிநூல் மற்றும் ஆடைத்தொழில் பிரிவுக்கென தனியே "**துணிநூல் துறை**" எனும் புதிய துறையினை 2021 ஆம் ஆண்டில் உருவாக்கியது.

துணிநூல் துறையானது, ஜவுளிப் பிரிவுக்குத் தேவையான பொது உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடவும், ஜவுளித் துறையில் உள்ள இடையூறுகளை அகற்றிடவும் போதிய கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுத்து, தொழில்துறைக்குத் தேவையான ஆதரவை வழங்கும்.

இதன் மூலம் துணிநூல் மற்றும் ஆடைத்தொழிலானது மேலும் துடிப்பான மற்றும் ஒருங்கிணைந்த துறையாக உருவாகுவதோடு, "தமிழ்நாட்டை 2030 ஆம் ஆண்டில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும்" எனும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரின் தொலைநோக்குப் பார்வைக்குப் போதிய பங்களிப்பினையும் வழங்கும்.

## 2.1 துணிநூல் துறையின் நோக்கங்கள்

- மாநிலத்திற்குள் பருத்திச் சாகுபடி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்திட ஊக்குவித்தல்.
- தூய பருத்திஇழை உற்பத்தியினை அதிகரிக்க பருத்தி விதை நீக்கும் பிரிவிற்கு (Ginning) உறுதுணையாகச் செயல்படுதல்.
- இழை முதல் நாகரிக ஆடை உற்பத்தி வரையிலான (Fibre to Fashion) துணித்தொழில் மதிப்புச் சங்கிலியின் (Textile Value Chain) அனைத்து நிலைகளிலும், தொழில்நுட்ப ஜவுளிப் பிரிவிலும் (Technical Textiles) நிலையான

வளர்ச்சியினை எட்டும் வகையில் இத்துறையின் அனைத்துப் பிரிவுகளின் சமச்சீரான மேம்பாட்டில் கவனம் செலுத்துதல்.

- தொழில் துறையில் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தரநிலைகளுக்கு ஏதுவான, நவீன தொழில் நுட்பங்களைப் பின்பற்றவும் சிறந்த உற்பத்தி நடைமுறைகளைப் பின்பற்றவும் (Good Manufacturing Practices) நடவடிக்கை மேற்கொள்ளுதல்.
- பன்னாட்டு வணிகப்போட்டியினை எதிர்கொள்ளவும், புதிய முயற்சிகளை மேற்கொள்ளவும், மாற்று இரகங்களைக் கண்டறியவும், இரகங்களின் மதிப்பினைக் கூட்டவும் தொழில்துறையினை ஊக்குவித்தல்.
- மாநில துணிநூல் ஏற்றுமதியினைப் பன்மடங்காக்குதல்.
- தொழில்நுட்ப ஜவுளிகளின் உற்பத்திக்கான வசதிகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

- தேசிய மற்றும் பன்னாட்டுத் தொழில்நுட்ப ஜவுளி நிறுவனங்களுடன் தொழில்நுட்பக் கூட்டுமுயற்சியினை ஒருங்கிணைத்தல் மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகளைப் பயன்படுத்தும் ஒவ்வொரு தொழில் பிரிவிற்கும் தேவையின் அடிப்படையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்குத் தேவையான உதவிகளை வழங்குதல்.
- அனைத்துப் பிரிவுகளிலும் தொழில்துறைக்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல்.
- முழுமையான துணிநூல் மதிப்புச் சங்கிலியினை உள்ளடக்கிய பெரிய அளவிலான சந்தையை உருவாக்கும் வகையில் நேரடியாகவும், தகவல் தொழில் நுட்பத்தின் காணொளி உள்ளிட்ட மெய்நிகர் (Virtual) தொழில்நுட்பம் மூலமாகவும், ஜவுளிச் சந்தை தொடர்பு வசதி மற்றும் உட்கட்டமைப்புகளுக்கான இணைப்புகளை உருவாக்குதல்.

- மாறிவரும் நாகரிகப் போக்குகளை முன்கூட்டியே கணித்து, அதற்கேற்றவாறு தொழில்துறையினர் உற்பத்தித் திட்டம் வகுத்திட ஏதுவாக நவநாகரிக வடிவமைப்பாளர்கள், வடிவமைப்பு நிலையங்கள், உலகளாவிய வணிகச் சின்னங்கள் (Global brands) ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் வகையில் வடிவமைப்புக் கூடங்களை (Design Studios) ஏற்படுத்திட ஆதரவளித்தல்.
- துணிநூல் பதனிடும் பிரிவில் உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் செலவு குறைவான, சுற்றுச்சூழலுக்கு உகந்த, கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவு அகற்றும் வசதிகளை ஏற்படுத்துதல்.

## 2.2 நிர்வாகக் கட்டமைப்பு

தமிழ்நாடு அரசின் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி

வரும் துணிநூல் துறையில், துணிநூல் ஆணையர் துறைத் தலைவராகச் செயல்படுகிறார்.

சென்னையில் துணிநூல் ஆணையரகம் தலைமையகமாகவும், சேலம், கரூர், கோவை மற்றும் மதுரை ஆகியன நான்கு மண்டலங்களாகவும் உருவாக்கப்பட்டு ஆணையரகம் மற்றும் மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஆறு இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகள், தமிழ்நாடு பஞ்சாலைக்கழகம் லிட்., மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகள் இணையம் லிட்., (TANSPIN) சென்னை ஆகிய நிறுவனங்கள் துணிநூல் ஆணையரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.


துணிநூல் ஆணையர் "மாநில துணிநூல் அதிகார அமைப்பாக" செயல்படுவதன் மூலம், மாநிலத்தில் உள்ள நூற்பாலைகள், துணிநூல் ஆலைகள், பதனிடும் ஆலைகள்,

ஆடை மற்றும் பின்னலாடைப் பிரிவுகள் ஆகியவை நன்முறையில் செயல்பட உரிய வழிவகைகளை மேற்கொள்ளும் ஒட்டுமொத்த பொறுப்பும் துணிநூல் ஆணையருக்கு உள்ளது.

துணிநூல் மற்றும் ஆடைத் தொழிலின் நிலையான வளர்ச்சியை உறுதிசெய்யும் வகையில் ஒருங்கிணைந்த தமிழ்நாடு மாநில ஜவுளிக் கொள்கையினைச் செறிவூட்டுதல் மற்றும் செயல்படுத்துதல், மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் நலத்திட்டங்கள் மற்றும் ஊக்கத்திட்டங்கள் ஆகியன துணிநூல் ஆணையரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பின்வரும் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் இத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன.

1. தேனி, எட்டையபுரம், ஆரல்வாய்மொழி, ஊத்தங்கரை, அறந்தாங்கி மற்றும் அச்சங்குளம் ஆகிய இடங்களில் உள்ள ஆறு கூட்டுறவு நூற்பாலைகள்.
2. தமிழ்நாடு பஞ்சாலைக்கழகம், கோவை
3. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகள் இணையம் லிட்., (டான்ஸ்பின்) சென்னை.


துறை நிர்வாக அமைப்பு முறை
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்
அரசு முதன்மைச் செயலர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை
துணிநூல் ஆணையர்
இணை இயக்குநர் (நிர்வாகம் & நூற்பு)
இணை இயக்குநர் (தொழில்நுட்பம்)
துணை இயக்குநர் (நிர்வாகம் & நூற்பு)
துணை இயக்குநர் (தொழில்நுட்பம்)
உதவி இயக்குநர் (நூற்பு)
உதவி இயக்குநர் (தொழில்நுட்பம்)
மண்டல அலுவலகங்கள்
துணை இயக்குநர் (சேலம்)
துணை இயக்குநர் (கோயம்புத்தூர்)
துணை இயக்குநர் (கரூர்)
துணை இயக்குநர் (மதுரை)

## 3. உலகளாவிய துணித்தொழில் நிலவரம்




உலக அளவில் துணிநூல் மற்றும் ஆடைகளுக்கான சந்தையானது உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு (GDP) இன்றியமையாததாகும். உலகத் துணிநூல் மற்றும் ஆடைகள் சந்தை 2025-ஆம் ஆண்டில் 2 டிரில்லியன் அமெரிக்க டாலர் வர்த்தகத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கோவிட்-2019 பெருந்தொற்று தாக்கத்தின் விளைவாக, 2020-ஆம் ஆண்டில் உலகத் துணிநூல் மற்றும் ஆடைகள் ஏற்றுமதி மதிப்பானது, 2019-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 8% குறைவாக அதாவது 774 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது. இது 2019-ஆம் ஆண்டிலிருந்து 3% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகித (Compound Annual Growth Rate) வளர்ச்சியுடன் 2025-ஆம் ஆண்டில் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பினை எட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆடைகள் விற்பனை 54% பங்களிப்புடன் அதிக வர்த்தகம் செய்யும் பிரிவாகவும், இதனைத் தொடர்ந்து, துணிகள் (Fabrics) 16% பங்களிப்புடன் இரண்டாமிடத்தையும் வகிக்கிறது.

2020-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 38% உலக வர்த்தக பங்களிப்புடன் சீனா மிகப் பெரிய ஏற்றுமதியாளராக உள்ளது. துணிநூல் மற்றும் ஆடைகள் ஏற்றுமதியில் வியட்நாம் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. இந்தியா 29.6

பில்லியன் அமெரிக்க டாலர் ஏற்றுமதி மதிப்புடன் ஆறாவது மிகப்பெரிய ஏற்றுமதி நாடாக உள்ளது.

குறைந்த தொழிலாளர் கூலி, அதிக உற்பத்தித் திறன், சாதகமான வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் ஒருங்கிணைந்த ஜவுளி மதிப்புச் சங்கிலி ஆகிய காரணங்களால் சீனா, வியட்நாம் மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகள் உலக அளவில் முன்னணி பங்களிப்பாளர்களாக விளங்குகின்றன.





ஆதாரம் : வாசிர் அட்வைசர்ஸ் ஆண்டறிக்கை

# 4. தேசிய துணித்தொழில் நிலவரம்


இந்தியாவில் துணிநூல் தொழில் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்ததாகும். முற்காலத்தில் இந்தியத் துணிநூல் மற்றும் ஆடைகள் ஒட்டு மொத்த உலகச்சந்தையினை ஆதிக்கம் செலுத்தி வந்தது. ஒருபுறம் கையால் நூற்கப்பட்ட மற்றும் கைத்தறி நெசவு ஆடைகள்; மறுபுறம் அதிக முதலீடுகள் செறிந்த அதிநவீன ஆலைகள் என இத்தொழில் பல்வேறுபட்ட பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய பருத்தி மற்றும் சணல் உற்பத்தியாளர்களில் ஒன்றாக இந்தியா விளங்குகிறது. மேலும், இந்தியா பட்டு உற்பத்தியில் உலகில் 2வது மிகப் பெரிய நாடாக உள்ளது.

இந்தியாவில் துணிநூல் மற்றும் ஆடைத் தொழிலானது, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் (GDP) 2%, தொழில் துறை உற்பத்தி மதிப்பில் 7% மற்றும் தேசிய ஏற்றுமதி வருவாயில் 15% என்ற அளவில் பங்களிப்பினை வழங்குகிறது.




ஆதாரம் : வாசிர் அட்வைசர்ஸ் மற்றும் AEPC ஆண்டறிக்கை




ஆதாரம் : வாசிர் அட்வைசர்ஸ் மற்றும் AEPC ஆண்டறிக்கை

# 5. தமிழ்நாட்டில் துணிநூல் மதிப்புச் சங்கிலியின் பல்வேறு பிரிவுகள்

தமிழ்நாட்டில் துணிநூல் மதிப்புச் சங்கிலியின் பிரிவுகள் பின்வருமாறு



## 5.1 பருத்தி வேளாண் சாகுபடி

பண்டைய காலத்திலிருந்தே பருத்தி தமிழ்நாட்டின் முக்கியமான வணிகப் பயிர்களுள் ஒன்றாக உள்ளது. கோவை, பெரம்பலூர், விருதுநகர் மற்றும் தருமபுரி ஆகியன தமிழ்நாட்டில் பருத்தி வேளாண் சாகுபடி செய்யப்படும் முக்கிய மண்டலங்களாகும். தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகள் பருத்தியினைப் பெரிதும் பயன்படுத்தும் போதிலும், பருத்தி வேளாண் சாகுபடியானது, உள்ளூர் சந்தைத் தேவையினைப் பூர்த்தி செய்யுமளவு போதுமானதாக இல்லை. தமிழ்நாடு நூற்பாலைகளின் வருடாந்திர பருத்தித் தேவையான சுமார் 120 இலட்சம் பேல்களில், சுமார் 5 இலட்சம் பேல்கள் மட்டுமே தமிழ்நாட்டில் விளைவிக்கப்படுகிறது.

| ஆண்டு | உற்பத்தி (இலட்சம் பேல்களில்) | சாகுபடி பரப்பு (இலட்சம் ஹெக்டேரில்) |
|---|---|---|
| 2019-20 | 6.00 | 1.70 |
| 2020-21 | 2.43 | 1.12 |
| 2021-22 | 2.96 | 1.25 |

ஆதாரம்: இந்திய பருத்தி கழகம்

**சவால்கள்**

தமிழ்நாட்டில் பருத்தியின் தேவை மற்றும் விநியோக நிலைகளுக்கிடையே (Demand and supply) அதிக இடைவெளி காணப்படுகிறது. தமிழ்நாட்டின் பருத்தி சாகுபடி நிலப்பரப்பு மற்றும் ஒரு ஹெக்டேருக்கான மகசூல் இந்தியாவின் பிற பகுதிகளைக் காட்டிலும் குறைவாகவே உள்ளது. தேவை மற்றும் விநியோக நிலைகளுக்கிடையே சமநிலை இல்லாததால், இங்குள்ள நூற்பாலைகள் 95% பருத்தித் தேவையினை பிற மாநிலங்களிலிருந்து கிலோ ஒன்றுக்கு ரூ.3/- முதல் ரூ.6/- வரை கூடுதல் போக்குவரத்துச் செலவினத்துடன் கொள்முதல் செய்கின்றன.

**பருத்திச்சாகுபடி இலக்கு (Cotton Mission)**

பருத்தி வேளாண் சாகுபடியை அதிகரிக்கும் பொருட்டு துணிநூல் துறை மற்றும் விவசாயத் துறை இணைந்து "பருத்தி வேளாண் சாகுபடி இலக்கு" எனும் திட்டத்தை வரையறுத்து,

ஒரு குழுவினை அமைத்துள்ளது. மாநிலத்திற்குள் பருத்தி உற்பத்தி மற்றும் மகசூலினை அதிகரிக்க இலக்கு நோக்கிய அணுகுமுறை அவசியம். இதில் கூடுதல் இழை நீளம் கொண்ட பருத்தி (ELS), இயற்கை பருத்தி, நீடித்த தரமிக்க பருத்தி ஆகியவற்றின் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இதன் பொருட்டு வேளாண் துறையின் 2022-23 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.15.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பருத்தி சாகுபடியினை நவீனமயமாக்குதல் மற்றும் பருத்தி அறுவடையினை இயந்திரமயமாக்குதல்**

தற்போதுள்ள பருத்தி விளையும் பகுதிகளில் பருத்தி விதைத் தொழில்நுட்பத்தினை மேம்படுத்துவதன் மூலம் மகசூலை அதிகரிப்பதன் வாயிலாகவும், வேளாண் ஆய்வு, பருத்தி அறுவடையை இயந்திரமயமாக்குதல் மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்கள் வழங்குதல்

ஆகியவற்றின் வாயிலாகவும் மாநிலத்தில் பருத்தி உற்பத்தியினை அதிகரிக்க இயலும்.

தென்னிந்திய ஆலைகள் கூட்டமைப்பு-பருத்தி வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி கூட்டமைப்பு (SIMA-CDRA) கோவை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோவை மற்றும் வேளாண்மைத்துறை போன்றவற்றுடன் ஒருங்கிணைந்து உயர் விளைச்சலைத் தரும் பருத்தி விதை இரகங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பருத்தி சாகுபடியினை நவீனமயமாக்குதல், மிகச்செறிவான பருத்தி நடவு குறித்த சாத்தியக்கூறுகளை ஆராய்தல், பருத்தி அறுவடையை இயந்திரமயமாக்குதல் ஆகியவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த துணிநூல் துறை முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.



**பருத்தி சாகுபடி**



**கைமுறை அறுவடை**



**இயந்திரம் மூலமான அறுவடை**

### 5.2 பருத்தி விதை நீக்கும் பிரிவு (Ginning)

துணிநூல் மதிப்புச் சங்கிலியில் பருத்தி விதை நீக்கும் பிரிவானது, பருத்தி இழையிலிருந்து விதைகளைப் பிரித்தெடுத்து, பருத்தி விளை பொருளை, பஞ்சு (Lint) எனும் வணிகப் பொருளாக மாற்றிடும் மிக முக்கியப் பணியினை மேற்கொள்ளும் அடிப்படையான செயல்முறை ஆகும். பருத்தி

விதை நீக்கும் பிரிவானது பருத்தி விவசாயிக்கும் துணிநூல் தொழிலுக்குமிடையே ஒரு பாலமாகத் திகழ்கிறது.

பருத்தி இழையின் தரமானது மரபணு நிலை, சாகுபடி சூழ்நிலைகள், பறிக்கும் முறைகள், கிடங்கில் இருப்பு வைக்கப்படும் வழிமுறைகள், போக்குவரத்து நடைமுறைகள், பருத்தி விதை நீக்கும் வழி முறைகள், இயந்திரத்தின் தன்மைகள் மற்றும் சூழ்நிலைகள், பருத்தி விதை நீக்கும் இயந்திர அமைப்பு (Settings / Adjustment), பஞ்சு தூய்மைப்படுத்துதல் மற்றும் பஞ்சுப் பொதி கட்டுதல் ஆகிய காரணிகளால் நிர்ணயிக்கப்படுகின்றது. மேற்கண்ட அனைத்திலும் பருத்தி விதை நீக்கும் செய்முறையே பருத்தியின் தரத்தைப் பராமரிப்பதில் ஒரு முக்கியக் காரணியாக அமைகிறது.

இந்தியாவில் 4000 பருத்தி விதை நீக்கும் ஆலைகள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றுள் 280 பருத்தி விதை நீக்கும் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் இயங்கி

வருகின்றன. இந்தியாவின் பிற பகுதிகளோடு ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் பருத்திச் சாகுபடி குறைவாக உள்ளதால், தமிழ்நாட்டில் பருத்தி விதை நீக்கும் ஆலைகளும் குறைவாக உள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள பருத்தி விதை நீக்கும் ஆலைகளில் பழைய மற்றும் நவீன இயந்திரங்கள் ஆகிய இரண்டுமே பயன்படுத்தப்படுகின்றன. நவீன இயந்திரங்களின் உற்பத்தி திறனானது, பழைய இயந்திரங்களைக் காட்டிலும் 50 விழுக்காடு அதிகமாக உள்ளது. நவீன இயந்திரங்களில் மணிக்கு 90 கிலோகிராம் விதை நீக்கப்பட்ட பஞ்சு உற்பத்தி செய்யப்படுகிறது. நவீன இயந்திரங்களுடன் ஒப்பிடுகையில் பழைய இயந்திரங்கள் மணிக்கு 50 முதல் 60 கிலோகிராம் பஞ்சு (lint) உற்பத்தித் திறனை மட்டுமே கொண்டுள்ளன.

**சவால்கள்:**

- ஒன்றிய அரசின் கீழ் இயங்கும் துணிநூல் அமைச்சகத்தின் துணிநூல் ஆணையரால் அமைக்கப்பட்டுள்ள டெக்ஸ்டைல்ஸ் கமிட்டியானது

(Textiles Committee) பருத்தி விதை நீக்கும் தொழிற்சாலைகளுக்கு, அவற்றில் நிறுவப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளின் தரம், மேலாண்மை வழிமுறைகள் மற்றும் விதை நீக்கப்பட்ட பருத்தியின் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் நட்சத்திர தரவரிசை மதிப்பீட்டை வழங்கி வருகிறது. மேம்பட்ட பருத்தி விதை நீக்கும் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் தரவரிசை மதிப்பீடு, அவற்றின் செயல்பாட்டிற்கான குறியீடாக விளங்குகிறது.

- பருத்தியின் உற்பத்தி திறனை அதிகரிக்கவும், தரத்தினை மேம்படுத்தவும் பருத்தி விதைநீக்கும் ஆலைகளை நவீனமயமாக்குவது அவசியமாகிறது. பெரும்பாலான விதை நீக்கும் ஆலைகள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வகைப்பாட்டின் கீழ் வருவதால், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் (MSME) திட்டத்தின் கீழ் பருத்தி விதை நீக்கும் ஆலைகளில்

உள்ள இயந்திரங்களை நவீனமயமாக்க தமிழ்நாடு அரசு நிதியுதவி அளிக்கிறது. “பருத்தி வேளாண் சாகுபடி இலக்கின்” (Cotton Mission) கீழ் பருத்திச் சாகுபடி அதிகரிக்கப்படும்பட்சத்தில், தமிழ்நாட்டில் பருத்தி விதை நீக்கும் தொழில் வளர்ச்சிக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.



பருத்தி விதை நீக்கும் ஆலை (Ginning Mill)



பருத்தி விதை நீக்கும் இயந்திரம் (Ginning Machine)

## 5.3 நூற்புப் பிரிவு (Spinning)

பருத்தி நூற்பானது, பருத்தி இழைகளை முறுக்கேற்றுவதன் மூலமாக ஆடைகள் மற்றும் இதர துணிநூல் நுகர்வோர் பயன்பாட்டுக்கான தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருளான நூலினைத் தயாரிக்கும் செய்முறையாகும். இந்நூற்புப் பிரிவானது துணிநூல் தொழிலில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி ஆகும். பருத்தி நூற்பு தொழில்நுட்பத்தில் ரிங் நூற்பு, (Ring Spinning)

ரோட்டர் நூற்பு (Rotor Spinning), காம்பேக்ட் நூற்பு (Compact Spinning), ஏர் ஜெட் நூற்பு (Airjet Spinning) ஆகிய வகைகள் உள்ளன.

2019 ஆம் ஆண்டில் உலக அளவில் 223 மில்லியன் ரிங் நூற்புக் கதிர்களும், 7.4 மில்லியன் ரோட்டர் நூற்பு சுழலிகளும் நிறுவப்பட்டுள்ளன.

இந்திய நூற்புத் தொழில் 52.48 மில்லியன் நூற்புக் கதிர்களுடன், நூற்புத் தொழிலில் உலகின் மிகப்பெரிய நாடுகளுள் ஒன்றாக விளங்குகிறது. நாட்டில் நிறுவப்பட்டுள்ள (Rotors) ரோட்டர்களின் எண்ணிக்கை 8 இலட்சமாகும். நூற்புக்கதிர் திறனில், சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா அதிகத் திறன் கொண்ட இரண்டாவது நாடாக விளங்குவதோடு, உலகப் பருத்தி நூல் வணிகத்தில் 25% அளவிற்கு தனது பங்களிப்பினைக் கொண்டுள்ளது.

பருத்தி இழையானது, துணிநூல் தொழிலில் மிகவும் விரும்பப்படும் இழையாகத் தொடர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது. இந்திய துணித்தொழில் ஏற்றுமதியில் பருத்தி ஜவுளி 60% க்கும் அதிகமாக தனது பங்களிப்பினை அளிக்கிறது.

நூல் உற்பத்தி மற்றும் கதிர்களின் எண்ணிக்கை ஆகிய இரு இனங்களிலும் தமிழ்நாடு முதன்மை வகிக்கிறது. இந்தியாவில் உள்ள 3367 நூற்பாலைகளில், தமிழ்நாட்டில் ஆறு கூட்டுறவு நூற்பாலைகள் உட்பட 1861 நூற்பாலைகள் அமைந்துள்ளன. நாட்டின் ஒட்டு மொத்த நூற்புத் திறனில் 46% தமிழ்நாட்டில் உள்ளது.

இந்தியாவில் உள்ள 52.48 மில்லியன் கதிர்களில் 22.79 மில்லியன் கதிர்கள் தமிழ்நாட்டில் உள்ளன. அவற்றுள் 1.18 இலட்சம் கதிர்களுடன் இயங்கி வரும் ஆறு கூட்டுறவு நூற்பாலைகளும் அடங்கும். இதன் மூலம் 2.80 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. இருப்பினும், மாநிலத்தின் நூல் உற்பத்தித் திறன் இந்தியாவின்

இதர அனைத்து பகுதிகளைக் காட்டிலும், 18% முதல் 20% குறைவாக உள்ளது. பழமையான இயந்திரங்களே உற்பத்தி திறன் இழப்புக்குக் காரணமாக உள்ளன.

மாநிலத்தில் இயங்கிவரும் பெரும்பாலான நூற்பாலைகள் நவீன தொழில் நுட்பத்திற்கேற்ப தங்களை மாற்றிக் கொள்ளாமல், பழமையான தொழில்நுட்ப இயந்திரங்களுடன் இயங்கி வருகின்றன. இந்தியாவில் உள்ள 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான நூற்பு இயந்திரங்களில், உத்தேசமாக 68% இயந்திரங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. எனவே, நூற்புப் பிரிவில் நவீனமயமாக்குதல் மற்றும் அதிநவீன தொழில்நுட்ப இயந்திரங்களை நிறுவுதல் ஆகியவற்றை அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது.

இந்திய நூற்பு பிரிவில், தமிழ்நாட்டின் முதன்மை நிலையினை தக்கவைத்துக் கொள்ளவும், ஏற்றுமதியின் அடித்தளமாய் விளங்கும் தொடர் நிலைப் பிரிவுகளுக்கு தரம் வாய்ந்த நூலினை விநியோகம் செய்யவும், பழைய /

காலாவதியான தொழில்நுட்ப இயந்திரங்களுக்கு மாற்றாக நவீனமயமாக்குதலும், தொழில்நுட்ப மேம்பாடும் அவசியமாகிறது. அதற்கேற்ப, தமிழ்நாடு அரசு பழைய இயந்திரங்களை நவீனமயமாக்க நூற்பாலைகளுக்கு வட்டி மானியம் வழங்கி வருகிறது.

பழைய இயந்திரங்களை நவீன மயமாக்குதலின் மூலம் நூல் உற்பத்தித் திறன் மற்றும் நூலின் தரம் அதிகரிக்கும். இதன்மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள நூற்பாலைகளின் சந்தையில் போட்டியிடும் வல்லமை கணிசமாக அதிகரிக்கும். உற்பத்தித் திறன் மற்றும் நூல் விற்பனை அதிகரிப்பதன் மூலம் அரசுக்குச் சரக்கு மற்றும் சேவை வரி மூலம் வருவாய் அதிகரித்திடும்.



**Ring Spinning**



**Rotor Spinning**



**Compact Spinning**



**Airjet Spinning**

## 5.4 நெசவு மற்றும் பின்னலாடைகள்

நூலைத் துணியாக மாற்றும் நெசவு மற்றும் பின்னலாடைப் பிரிவுகள் துணிநூல் தொழிலின் முக்கியமான பிரிவுகளாகும். இந்தியாவில் உள்ள 24.86 இலட்சம் விசைத்தறிகளில் 5.63 இலட்சம் விசைத்தறிகள் தமிழ்நாட்டில் உள்ளன. இவை நாடெங்கும் உள்ள ஆயத்த ஆடை அலகுகளின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி தேவையினைப் பூர்த்தி செய்கின்றன.

### இந்தியா மற்றும் தமிழ்நாட்டின் பின்னலாடைப்பிரிவு

ஆடைகள் (Formal Wears), நெய்யப்பட்ட துணிகளால் தயாரிக்கப்பட்ட போதிலும், பின்னலாடைகளின் நெகிழ்வு மற்றும் அணிய ஏதுவான தன்மையின் காரணமாக அண்மைக் காலங்களில் விளையாட்டு உடைகள், கவச உடைகள், இலகுவான ஆடைகள், குழந்தைகள் ஆடைகள், மேற்கத்திய

ஆடைகள் போன்றவற்றிற்குப் பின்னலாடைகள் கணிசமான வணிக வாய்ப்புகளைப் பெற்றுள்ளன.

தமிழ்நாட்டில் பின்னலாடை தொழில் வேலைவாய்ப்பு வழங்குதல் மற்றும் அன்னியச் செலாவணியை ஈட்டுதல் ஆகியவற்றில் முக்கிய பங்கினை வகிக்கிறது. தமிழ்நாடு மற்றும் இந்தியாவில் பின்னலாடைத் தொழிலில் திருப்பூர் ஒரு முக்கியக் குழுமமாக விளங்குகிறது. பின்னலாடைத் தொழில் எப்பொழுதும் வேலைவாய்ப்பினை வழங்கும் தொழிலாக விளங்குகிறது. தமிழ்நாட்டின் பின்னலாடைத் தொழில் பிரிவு ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா, கனடா, ஜப்பான் உள்ளிட்ட நவநாகரிக உலகச் சந்தைகளிலிருந்து கொள்முதல் ஆணைகளைப் பெறும் திறன் வாய்ந்ததாக விளங்குகிறது. மாநிலத்தில் ஏறத்தாழ 13,000 பின்னலாடைகள் மற்றும் ஆடைகள் உற்பத்தி செய்யும் அலகுகள் (Units) உள்ளன. இவ்வலகுகள் அண்டை மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில்


உள்ள 6 இலட்சம் உள்ளூர் மற்றும் புலம் பெயர் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குகின்றன.

இந்தியாவில் 45% ஆடைகள் பின்னலாடைகள் வடிவில் உள்ளன, தமிழ்நாடு பின்னலாடைகள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முக்கிய பங்கினை வகிக்கிறது. இந்தியாவின் மொத்த பின்னலாடை ஏற்றுமதி மதிப்பில், தமிழ்நாடு மட்டுமே 53% பங்களிப்பினை வழங்குகிறது.

பின்னலாடை உற்பத்தியில் இந்திய அளவில், உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி வணிகத்தில் திருப்பூரின் பங்களிப்பு 60% ஆகும். எதிர்வருங்காலங்களில் இது குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கும்.



**சுழல் பின்னலாடை இயந்திரம் (Circular Knitting Machine)**




ஆதாரம் : திருப்பூர் எக்ஸ்போர்ட்டர்ஸ் அசோசியேசன்

**சவால்கள்**

- தமிழ்நாட்டில் பின்னலாடைத் தொழிலானது சுமார் 6 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது. இவர்களுள் கணிசமான தொழிலாளர்கள் புலம் பெயர் தொழிலாளர்கள் ஆவர். திறன் வாய்ந்த தொழிலாளர்களுக்கான கடும் பற்றாக்குறை பின்னலாடை தொழிலின் வளர்ச்சிக்கு அச்சுறுத்தலாக உள்ளது.
- தமிழ்நாடு அரசு பகுதியளவு பயிற்சி பெற்ற மற்றும் முழுவதும் பயிற்சியற்ற தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலமாக திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் குறுகிய காலப் பயிற்சித் திட்டங்களை வழங்குகிறது. போதுமான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலம் பயிற்சியற்ற மற்றும் பகுதியளவு பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்குரிய பயிற்சித் திட்டங்களில், துணிநூல் தொழில் நிறுவனங்களும், பயிற்சிப் பங்குதாரர்களாக (Training Partners) பங்கேற்க ஊக்குவிக்கப்படுகிறது.

## 5.5 பதனிடும் பிரிவு

துணிநூல் தயாரிப்புகளில் வண்ணங்களை பயன்படுத்துதல் மற்றும் மெருகூட்டுதல் ஆகிய பணிகளை உள்ளடக்கிய பதனிடும் தொழிலானது, துணிகளின் மதிப்பு மற்றும் தரத்தினை நிர்ணயம் செய்கிறது. பதனிடும் பணியானது துணிகளின் மீதான மதிப்பு மற்றும் தரத்தினைக் கட்டுப்படுத்தி புதிய வாய்ப்புகளை உருவாக்குகிறது. பதனிடும் முறைகள் பின்வருமாறு உள்ளன.



பதனிடுதலுக்கு உட்படுத்தப்படும் மூலப் பொருட்களின் அடிப்படையில் பதனிடும் செயல்பாட்டினைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

| வ. எண் | மூலப் பொருள் | வழிமுறை |
|---|---|---|
| 1 | இழை | பருத்தி இழைகள் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சாயமிடும் இயந்திரங்களில் சாயமிடப் படுகின்றன. மேலும், செயற்கை இழை உற்பத்தியின் போது சாயமூட்டும் நிறமிகள் இழையின் ஊடாக செலுத்தப்படுகிறது. |
| 2 | நூல் | நூலினைச் சாயமிடுவதன் மூலம் நெசவாளர்கள் மற்றும் பின்னலாடை உற்பத்தியாளர்கள் துணிகளில் கோடிட்ட (Woven Stripes), கட்டமிட்ட (Checked), கட்டு கட்டி சாயமிட்ட (Tie&dye Patterns) மற்றும் பின்னலாடைகளில் கோடிட்ட அல்லது கட்டமிட்ட (Knitted Stripes or |

| வ. எண் | மூலப் பொருள் | வழிமுறை |
|---|---|---|
| | | Checked) வண்ணமயமான வடிவங்களைத் துணிகளில் கட்டமைக்க இயலும். |
| 3 | துணி வகைகள் | ஒரு வண்ணத்தைப் பயன்படுத்தி துணிகளில் சாயமிட இயலும் அல்லது வெவ்வேறு அச்சிடும் நுட்பங்களைப் பயன்படுத்தி பல வண்ணக் கலவைகளாலான வடிவமைப்புகளை துணிகளில் அச்சிட இயலும். |
| 4 | ஆடைகள் | முழுவதுமாகத் தயார் செய்யப்பட்ட ஆடைகளில் சாயமிடவும் அச்சிடவும் இயலும். |



**துணிநூல் பதனிடுதலின் பல்வேறு நிலைகள்**

நெசவுக்கு முந்தைய மற்றும் நெசவுக்குப் பிந்தைய நிலைகளில் நூல் மற்றும் துணிகள் பதனிடும் செய்முறையானது, உற்பத்தி செய்யப்படும் பொருளின் அடிப்படையான பயன்பாடு மற்றும் கலைநயத்துடனான மதிப்புக் கூட்டலுக்கு முக்கியப் பங்களிக்கிறது. பதனிடுதல் என்பது சலவை செய்தல், சாயமிடுதல், அச்சிடுதல் மற்றும் மெருகூட்டுதல் ஆகிய வழிமுறைகளை உள்ளடக்கியதாகும். மாசுக் கட்டுப்பாட்டு வாரிய நடைமுறைகளின்படி, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, "பூஜ்ஜிய திரவக் கழிவு வெளியேற்றும் அமைப்பு" (Zero Liquid Discharge) போன்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்றும் வகையில் மாநில அரசு சாயமிடும் அலகுகளுக்கான நெறிமுறைகளை வகுத்துள்ளது. தமிழ்நாட்டில் 2614 கையால் இயக்கப்படும் பதனிடும் அலகுகளும் (Units), (இந்தியாவின் மொத்த அலகுகளில் 25 சதவீதம்) 985 இயந்திர பதனிடும் அலகுகளும் (Units) உள்ளன.

மாநிலத்தில் நூல் சாயமிடுதல் மற்றும் சலவை செய்தல் ஆகிய இரண்டும் பதனிடும் தொழிலின் முக்கிய செயல்முறைகளாகும். துணிகளை சாயமிடுதல் மற்றும் ரோட்டரி அச்சிடும் முறை உள்ளிட்ட அதிக அகலம் கொண்ட துணியில் அச்சிடுதலுக்கான திறன் மாநிலத்தின் தேவையினை முழுவதும் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. இதன் காரணமாக ஈரோடு மற்றும் அதன் சுற்று வட்டார குழுமங்களில் தயாரிக்கப்படும் கிரே துணிகள், இராஜஸ்தானிலுள்ள ஜெய்ப்பூர், மத்தியப் பிரதேசத்திலுள்ள உஜ்ஜையினி, உத்திரப் பிரதேசத்திலுள்ள மீரட், குஜராத்திலுள்ள அகமதாபாத் மற்றும் சூரத் உள்ளிட்ட பகுதிகளுக்கு அச்சிடும் பொருட்டு அனுப்பப்பட்டு, அதன் பின்னர் நமது மாநிலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. துணிநூல் பதனிடும் உட்கட்டமைப்பின் செயல்திறன் மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும்.

திருப்பூர், ஈரோடு, சேலம், கரூர் ஆகியவை முக்கிய துணிநூல் பதனிடும் குழுமங்களாகும். புதிய துணிநூல் பதனிடும் பூங்காக்களுடன் கூடிய பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் ஏற்கனவே உள்ள சாயச்சாலைகளை பொது சுத்திகரிப்பு நிலையங்களுடன் இணைத்தல் ஆகியவற்றின் மூலம் மாசினைக் கட்டுப்படுத்தவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், துணிநூல் குழுமங்களில் பூஜ்ஜியம் அளவில் திரவக் கழிவுகள் வெளியேற்றும் வசதியுடன் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்திடவும், அரசு முனைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அதற்கிணங்க, ஒன்றிய மற்றும் மாநில அரசின் ரூ.300.00 கோடி நிதியுதவியுடன் திருப்பூரில் 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் 6 இலட்சம் மக்களுக்குத் தொடர் வேலைவாய்ப்பினை உறுதி செய்வதோடு, திருப்பூரில் உள்ள ஆடைகள் மற்றும்

பின்னலாடைத் தொழிலுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினையும் வழங்குகிறது.

மேலும், ஒருங்கிணைந்த பதனிடுதல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பதினொரு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவுநீர் வெளியேற்றும் மேலாண்மை நிலையங்கள் ஈரோடு, நாமக்கல், விருதுநகர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சவால்கள்**

- தமிழ்நாடு துணிநூல் மதிப்புச் சங்கிலியில் தற்போது பதனிடும் பிரிவிற்குக் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. பதனிடும் பிரிவின் வளர்ச்சிக்கு ஒன்றிய அரசின் திட்டங்களுடன் மாநில அரசும் தொடர்ந்து ஆதரவளிக்கும்.
- தற்சமயம் பிற மாநிலங்களின் செயற்திறனையே சார்ந்திருக்கும் துணி அச்சிடும் தொழிலில் நம் மாநிலத்தின் தற்சார்புத் தன்மையினை அதிகரித்திடும்

பொருட்டு, செயற்திறன் கட்டமைப்பில் அதிகக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, மாநில அரசால் மூலதன மானிய நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

- சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், மாநிலத்தில் பதனிடும் தொழிலை மேலும் நிலைநிறுத்தவும், மாநில அரசு வகுத்துள்ள நெறிமுறைகளின்படி கழிவுநீர் சுத்திகரிப்பு கட்டாயமாகும். எனவே, பதனிடும் தொழிற்சாலைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவுதல் இன்றியமையாததாகும். பதனிடும் தொழிலுக்கு ஆதரவளித்திட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், பூஜ்ஜியம் திரவ வெளியேற்றத்தில் ஆபத்தான கழிவுத் தேக்கம் மற்றும் அழிக்கும் வசதிகளைக் கட்டமைத்தல் ஆகிய இனங்களுக்கு மாநில அரசு நிதியுதவி வழங்குகிறது.

- தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன், பூஜ்ஜியம் திரவ வெளியேற்றும் வசதியினைத்

திறம்பட செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு, இந்தியாவிலேயே மிக நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளதால், கடலோர பகுதிகளில் சுற்றுச்சூழலைப் பாதிக்காத வண்ணம், கடல்சார் வெளியேற்ற அமைப்புடன் (Marine Discharge System) கூடிய புதிய பதனிடும் தொழிற்சாலைகளை அமைப்பதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராயப்படும்.

- தமிழ்நாட்டில் உள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் ஏறத்தாழ 60,000 மெட்ரிக் டன் உப்புக்கழிவுகள் அகற்றப்படாமல் இருப்பாக உள்ளது. மேலும், உப்புக்கழிவுகள் நாள்தோறும் உருவாகின்றன. இந்த உப்புக் கழிவுகள் சுற்றுச்சூழலை பெரிதும் பாதிக்கும்.

## 5.6 ஆடைகள் மற்றும் பின்னலாடைகள் பிரிவு

துணிநூல் தொழிலில் ஆயத்த ஆடை பிரிவானது, துணிகளை, ஆடை போன்ற பயன்பாட்டுப் பொருட்களாக

மாற்றும் பிரிவாகும். ஆயத்த ஆடையானது பலதரப்பட்ட நூல்கள் மற்றும் துணிகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது.



ஆயத்த ஆடைப்பிரிவு உலக வர்த்தகத்தில் முக்கிய இடத்தை வகிப்பதோடு, துணிநூல் தொழிலில், வேகமாக வளர்ந்துவரும் பிரிவாக உள்ளது. வடஅமெரிக்கா, ஐரோப்பா, ஆசிய-பசிபிக் கண்டம், லத்தீன் அமெரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் ஆயத்த ஆடைகளின் முக்கியச் சந்தையாக விளங்குகின்றன. வளர்ந்து வரும் நாகரிகம், உலக ஆயத்த ஆடை தொழிலுக்கு உந்துசக்தியாக விளங்குகிறது. உலக ஆடைகள் சந்தை, 2019


ஆம் ஆண்டிலிருந்து 3% கூட்டு வருடாந்திர வளர்ச்சி (CAGR) விகிதத்துடன் வளர்ந்து, 2025 ஆம் ஆண்டில் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பினை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.


இந்திய துணிநூல் மற்றும் ஆடைகள் சந்தை 2021-22 ஆம் ஆண்டில் 99 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பு உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது 2020-21 ஆம் ஆண்டைக் காட்டிலும் 30% அதிகரிக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், இச்சந்தை 2019-20 ஆம் ஆண்டிலிருந்து 2025-26 ஆம் ஆண்டுக்குள் 10% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகித (CAGR) வளர்ச்சியுடன் 190 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பினை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இந்தியாவின் துணிநூல் மற்றும் அலங்கார ஆடைகள் ஏற்றுமதி**

**(பில்லியன் டாலர்கள்)**

| வ. எண் | இனம் | 2010-11 | 2019-20 | 2020-21 | 2021-22 (கணிப்பு) |
|---|---|---|---|---|---|
| 1 | இழை | 4 | 2 | 2.7 | 3.8 |
| 2 | நூல் | 4 | 4 | 4.4 | 7.4 |
| 3 | துணி | 4 | 5 | 4.1 | 5.2 |
| 4 | ஆடைகள் | 12 | 16 | 12.3 | 14.3 |
| 5 | வீட்டு உபயோக துணிகள் | 4 | 5 | 5.7 | 6.9 |
| 6 | இதர இனங்கள் | 1 | 2 | 1.7 | 2.1 |
| | மொத்தம் | 29 | 34 | 30.9 | 39.7 |




ஆதாரம்: வாசிர் அட்வைசர்ஸ் ஆண்டறிக்கை

**தமிழ்நாடு நிலவரம்**

தமிழ்நாட்டின் கணிசமான ஆடை நிறுவனங்கள் சென்னை சுற்று வட்டாரத்தினை அமைவிடமாகக் கொண்டும், குறிப்பாகப் பருத்தி மற்றும் செயற்கை இழை ஆயத்த ஆடைகள் உற்பத்தியில் தனித்துவத்துடனும் விளங்குகின்றன. பின்னலாடை நிறுவனங்கள் திருப்பூர் பகுதியில் அமைந்துள்ளன. மாநிலத்தில் சுமார் 13,000 பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை தயாரிப்பு நிறுவனங்கள் உள்ளன. இந்த நிறுவனங்கள் 6 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குகின்றன. திருப்பூரில் உள்ள பின்னலாடை நிறுவனங்கள் 2020-21 ஆம் ஆண்டில் ரூ.56,000 கோடி மதிப்பிலான பின்னலாடைகள் உற்பத்தி செய்துள்ளன.

ஆடைத் தயாரிப்பு தொழில் பெரிதும் தொழிலாளர் செறிவுமிக்கது மற்றும் பெரும்பாலும் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளாக அமைந்துள்ளன. இத்தொழில், பெரும்பான்மையாக தனியார் தொழில் முனைவோரின்

முன்னெடுப்பினை சார்ந்துள்ளதாகவும் குறைந்த தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் முதலீடுகளுக்கு உட்பட்டவையாகவும் உள்ளன.

**சவால்கள்**

- தமிழ்நாட்டில் திறன்மிக்க தொழிலாளர்களின் தட்டுப்பாடே துணித்தொழில் எதிர்கொள்ளும் முக்கிய சவாலாக உள்ளது.
- தமிழ்நாடு அரசு, பகுதியளவு பயிற்சி பெற்ற மற்றும் முழுவதும் பயிற்சியற்ற தொழிலாளர்களுக்குத் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலமாகத் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் குறுகிய காலப் பயிற்சித் திட்டங்களை வழங்குகிறது. போதுமான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலம், பகுதியளவு பயிற்சி பெற்ற மற்றும் முழுவதும் பயிற்சியற்ற தொழிலாளர்களுக்குரிய பயிற்சித் திட்டங்களில் துணிநூல் தொழில் நிறுவனங்கள் பயிற்சி

பங்குதாரர்களாகப் (Training Partners) பங்கேற்க ஊக்குவிக்கப்படுகிறது.

### 5.7 பாதுகாப்பு, வாகனம் மற்றும் மருத்துவ ஜவுளிகள் (தொழில்நுட்ப ஜவுளிகள்)

அழகியல் மற்றும் அலங்காரம் சார்ந்த பயன்பாட்டை விட, செயல்திறன் மற்றும் செயல் சார்ந்த பண்புகளை முன்னிறுத்தி தயாரிக்கப்படும் துணிநூல் தயாரிப்புகள் தொழில்நுட்ப ஜவுளிகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

தொழில்நுட்ப ஜவுளிகள் என்பவை வாகனம் சார்ந்த பயன்பாடுகள், மருத்துவ ஜவுளிகள் (எ.கா: உட்பொருத்தும் சாதனங்கள்-Implants) புவிசார் ஜவுளிகள் (எ.கா: தடுப்பணை வலுவூட்டுதல்), வேளாண் ஜவுளிகள் (எ.கா: பயிர் பாதுகாப்புக்கான துணி வகைகள்) மற்றும் பாதுகாப்பு உடைகள் (எ.கா: தீத்தடுப்பு மற்றும் வெப்பத்தடுப்பு, கதிரியக்க பாதுகாப்பு ஆடைகள், உருக்கிய உலோக பொறிகளிலிருந்து பாதுகாப்பு,

குண்டு துளைக்காத கவச உடைகள் மற்றும் விண்வெளி கவச உடைகள்) ஆகியவையாகும்.

பல்லாண்டுகளாகத் தொழில்நுட்ப ஜவுளிகள் உலகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை புவிசார் தொழில்நுட்பப் பொறியியல், கட்டுமானப் பொறியியல், உட்கட்டமைப்பு மற்றும் நீர் மேலாண்மை திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு பயன்பாடுகளில் புதுமையான பொறியியல் தீர்வுகளை வழங்கி வருகின்றன.

தொழில்நுட்ப ஜவுளியானது வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளில் விரிவான அளவில் பயன்படுத்தப்பட்டு வரும் போதிலும், இந்தியாவில் தொழில்நுட்ப ஜவுளிகள் மூலம் தொழில்நுட்பம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பயன்களை பெறுவதற்கு, அதிக அளவில் முதலீடு செய்ய வேண்டியுள்ளது.

தொழில்நுட்ப ஜவுளி உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூன்று வகையான மூலப்பொருட்களின் விவரம் பின்வருமாறு:




வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப ஜவுளிகள் துணைப்பிரிவானது, பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படுகிறது. இவை, உபயோகத்தின் அடிப்படையில், பின்வரும் 12 முக்கிய பிரிவுகளில் காணப்படுகின்றன.




தொழில்நுட்ப ஜவுளிகளின் முக்கிய பிரிவுகள்

**தொழில்நுட்ப ஜவுளித்தொழிலின் முக்கிய பிரிவுகளில் உள்ள வாய்ப்புகள்:**

**i) பாதுகாப்பு ஜவுளிகள் (Protective Textiles)**

**தொழிலியல் கையுறைகள் (Industrial gloves):** தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத்

தொழிலியல் கையுறைகள் பாதுகாப்பு உடைகளுள் ஒன்றாக பயன்படுகிறது.

**உயர்நிலை ஆடைகள் (High Altitude Clothing)**:

உயர்நிலை ஆடைகள் மிகக் குறைந்த தட்பவெப்பநிலை, பலத்த காற்று, பனிப்பொழிவு உள்ளிட்ட அதீத வானிலை சூழல்களிலிருந்து, குறிப்பாக சீயாச்சின் போன்ற போர்மேகம் சூழ்ந்த அபாயகரமான பகுதிகளில் பாதுகாப்பை அளிக்க பயன்படுத்தப்படுகின்றன.

**வேதிப்பொருள் பாதுகாப்பு ஆடைகள் (Chemical Protective Clothing)**: வேதிப்பொருட்கள் மற்றும் இதரவகை சார்ந்த அபாயங்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு வேதிப்பொருள் பாதுகாப்பு ஆடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**உயர் தெரி நிலை ஆடைகள் (High Visibility Clothing)**: பிரதிபலிக்கும் ஆடைகள் (Reflective-wear) என அழைக்கப்படும் உயர் தெரி நிலை ஆடைகள், சுரங்கங்கள், நெடுஞ்சாலைகள், விமானநிலைய ஓடுதளங்கள் மற்றும் மிதிவண்டி ஓட்டிகள் ஆகிய குறைவான வெளிச்சம் மட்டுமே

நிலவும் சூழ்நிலைகள் / பகுதிகளில் பணிபுரியும் மக்களின் பாதுகாப்புக்கு இன்றியமையாததாக உள்ளது.

**ஹஸ்மாட் கவச உடைகள் (Hazmat Suits):** வேதிப்பொருட்கள், கதிரியக்க பொருட்கள் உள்ளிட்ட தீங்கு விளைவிக்கும் கழிவுப்பொருட்களை கையாளுபவர்களை பாதுகாக்கும் பொருட்டு ஹஸ்மாட் கவச உடைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**தீ / சுவாலை தடுப்பு ஆடைகள் (Fire / Flame Retardant Apparel):** தீ / சுவாலை தடுப்பு ஆடைகள், தீ மற்றும் இதர வெப்பச்செறிவு பணிகளிலிருந்து பாதுகாப்பு வழங்கும் பொருட்டு தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படுகின்றன.

**குண்டு துளைக்காத கவச உடைகள் (Bullet Proof Jacket):** பல்வேறு வகையான வடிவங்கள், அளவுகள் மற்றும் வேகங்களில் வீசப்படும் எறி பொருட்கள், சிதறும் துண்டுகள் ஆகியவற்றிலிருந்து அணிபவர்களின் உடல் மற்றும் கண்களை பாதுகாக்கும் பொருட்டு, குண்டு துளைக்காத கவச உடைகள் பயன்படுத்தப்படுகின்றன.




**1. Industrial gloves 2. High altitude clothing 3. Hazmat suit 4. Fire retardant clothing 5. Chemical Protective Clothing 6. Bulletproof vest 7. High visibility clothing.**

**ii) வாகன ஜவுளிகள் (Mobil Tech)**


**நைலான் டயர் கார்டு (Nylon tyre cord)** : நைலான் டயர் கார்டு துணியானது, வாகன டயர்களுக்கு வலுவூட்டுகின்றன. மொத்த நைலான் டயர் கார்டு பயன்பாட்டில் 98% அளவிற்கு டயர் தொழிலில் உபயோகிக்கப்படுகிறது.

**இருக்கை பெல்ட்கள் (Seat Belt)**: இருக்கை பெல்ட்கள் விபத்து போன்ற எதிர்பாராத நிகழ்வுகளின்போது அபாயகரமான மோதல்கள் நிகழாவண்ணம், வாகனத்தில் பயணிக்கும் பயணிகளைக் காக்கும் பாதுகாப்பு கவசமாக பயன்படுகிறது. இருக்கை பெல்ட்கள் நைலான் இழைகள் அல்லது அதிக வலுவுடன் கூடிய பாலியஸ்டர் இழைகளால் நெய்யப்பட்ட குறுகிய துணிப் பட்டையாகும்.


**வாகன இருக்கை அமைப்புகள்/ இருக்கை உறைகள் (Car Upholstery/Seat covers)** : கார் இருக்கை உறைகள், வாகனம் சார்ந்த தொழில்நுட்ப ஜவுளிகளின் முக்கியமான ஒன்றாகும். வாகனங்களில் ஏற்பட்டுள்ள படிப்படியான

முன்னேற்றம் மற்றும் ஆடம்பர வசதிகளின் மீது அதிகரித்து வரும் விருப்பம் காரணமாக, வாகன இருக்கை உறைகளுக்கான சந்தை ஏறுமுகத்தில் உள்ளது.

**காற்றுப்பைகள் (Airbags):** விபத்தின் போது ஏற்படும் காயங்களின் தாக்கத்தினை குறைக்கும் பொருட்டு, பொருத்தப்படும் விரிவடையக்கூடிய பாதுகாப்பு சாதனங்களே காற்றுப்பைகளாகும். காற்றுப்பைகள் முக்கியமாக நைலான் 66 அல்லது பாலியமைடு 66 மற்றும் சிலிக்கான் பூச்சுடன் கூடிய நூல்/துணியைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன.









**1.Nylon tyre cord 2. Seat belt 3. Car upholstery/seat cover 4. Airbag.**

**iii) மருத்துவ ஜவுளிகள்**

**குழந்தைகள் அணையாடை (Baby diaper):** பிறந்த குழந்தைகளுக்கு 24 மாதங்கள் வரை உடற்கழிவுகளை உறிஞ்சி தேக்கி வைக்கும் பொருட்டு அணையாடைகள் பயன்படுத்தப் படுகின்றன. அணையாடைகள் துணியாலான அடுக்குகளுக்கு இடையில் உறிஞ்சும் திண்டுகளை அமைத்துத் தயாரிக்கப்படுகின்றன.

**ஒருமுறை பயன்படுத்தும் மருத்துவ ஜவுளி வகைகள் (Surgical Disposables):** மருத்துவ ஜவுளி வகைகளில் முகக்கவசம், தலைக்கவசம், திரை, நீள் அங்கிகள், உறைகள்,

காலணி உறைகள் மற்றும் களையக்கூடிய அறுவை சிகிச்சை பயன்பாட்டு துணிகள் ஆகியவை அடங்கும். இவை பாலிஎத்திலீன் படலத்துடன் கூடிய அல்லது பாலிஎத்திலீன் படலமற்ற பாலி புரப்பொலீன் பிணைப்பு (Spun bond) துணிகளால் (நெய்யப்படாதவை) தயாரிக்கப் படுவதாகும். இவை மருத்துவமனைகளிலும், மருந்தியல் நிறுவனங்களிலும் சுகாதாரத்தினைப் பேணும் பொருளாகவும், கிருமி தொற்று தடுப்பானாகவும் பயன்படுகின்றன.

**சிகிச்சைக்கான கட்டுப் பொருட்கள் (Surgical dress materials)**: இவை காயங்களைத் துரிதமாக குணப்படுத்திடவும், திறந்த நிலைக் காயங்களால் மேலும் தீங்கு நேராமல் தடுக்கவும் பயன்படுத்தப்படும் கட்டு பொருட்கள் ஆகும். இவற்றை பேண்டேஜ் மற்றும் காயப் பராமரிப்பு அடுக்குகள் (Wound care layer) என முக்கியமாக வகைப்படுத்தலாம்.

**உட்பொருத்தும் பொருட்கள் (Implantable Materials)**: இவை மூடுதல், பழுது பார்த்தல், மாற்றுதல் உள்ளிட்ட பல்வேறு

நோக்கங்களுக்காக மனித உடலின் உள்ளே பயன்படுத்தப்படும் துணிநூல் கட்டமைப்புகள் ஆகும். தையல்கள் (Sutures), தமனி ஒட்டிகள் (Vascular graft), செயற்கை தசை நார்கள் (Artificial ligaments), செயற்கை மூட்டுகள் (Artficial Joints), திசு வளர்ச்சிக்கான சாரக்கட்டுகள் (scoffolds for tissue growth) மற்றும் பல பொருட்கள் பயன்பாட்டில் உள்ளன. இவை ஒவ்வொன்றும் பொருத்தமான பலன்களை நோயாளிகளுக்கு வழங்குகின்றன.

**கூடுதலான உடல் சார்ந்த சாதனங்கள் (Extra-Corporial Devices)** : இவை நோயுற்ற ஒருவரின் உடல் உறுப்புகளை மாற்றிட உதவும் செயற்கை உறுப்புகளாகும். இவை செயற்கையான சிறுநீரகம் (Kidney), கல்லீரல் (Liver), நுரையீரல் (Lungs) ஆகியனவாகும். இச்சாதனங்களை உருவாக்கிட நுட்பமான வடிவமைப்பும் தயாரிப்பும் அவசியமாகின்றன.




**1. Baby Diapers 2. Surgical Disposables 3. Surgical Dressing Materials 4. Implantable Materials 5. Extra-Corporeal Devices.**

**iv) புவிசார் ஜவுளிகள் (Geo Tech)**

**சாலைகள் கட்டுமானம்**: திறன்வாய்ந்த புவிசார் ஜவுளிகள், சாலையின் அடித்தளத்தைப் பாதுகாத்திடவும், சாலையின் வடிவமைக்கப்பட்ட கட்டமைப்பு மற்றும் சுமை

தாங்கும் திறனைப் பராமரிக்கவும் பிரிப்பானாகச் செயல்படுகிறது.

**இரயில்வே**: கரடுமுரடான மண்ணைக் கொண்டு இருக்கும் இடத்தில் (எ.கா. மணல் மற்றும் சரளைகள்) புவிசார் ஜவுளிகளானது, துகள்கள் மற்றும் கற்களிடையே ஒரு பிரிப்பானாக செயல்படுகிறது.

**கால்வாய் மற்றும் கரையோர பணிகள்**: மண் அரிப்பு பாதுகாப்புக் கட்டமைப்புகள் அரிப்பை ஏற்படுத்தும் நீர் அழுத்த சக்தியை சிதறடிக்கின்றன, மேலும் அவை மண் அரிப்பைத் தடுத்து மண்ணைப் பாதுகாக்கின்றன.

**வடிகால்** : நிலம் சார்ந்த கட்டுமானப் பணிகளில் வடிகால்களுக்கு புவிசார் ஜவுளிகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. புவிசார் ஜவுளிகள் வடிகால் அமைப்பின் ஒரு பகுதியாக மட்டுமின்றி, அவையே முழுமையான வடிகால் அமைப்பாகவும் செயல்படுகிறது.




**1. Construction of roads 2. Railway 3. River Canal and Coastal Work 4. Drainage.**

### v) வேளாண் ஜவுளிகள் (Agro Tech)

விவசாயம் மற்றும் தோட்டக்கலை, இயற்கை தோட்டக்கலை மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் நெய்த, (Woven), நெய்யப்படாத (Non

Woven) மற்றும் பின்னப்பட்ட(Knitted) துணிகள் ஆகியவை வேளாண் ஜவுளிகள் என அழைக்கப்படுகின்றன. விவசாயம், தோட்டக்கலை மற்றும் மலர் வளர்ப்புப் பிரிவுகளில், நீர் ஆவியாகாமல் தடுக்கும் நிழல் வலைகள், தரைக்காப்பான் (Ground Cover), பயிர் காப்பு வலை (Crop cover) போன்ற பொருத்தமான விவசாய ஜவுளிப் பொருட்களுக்கு மகத்தான வாய்ப்புகள் உள்ளன.








1. **Shade nets 2. Ground cover 3. Crop cover**

**vi) தொழிலியல் ஜவுளிகள் (Indu Tech)**

தொழிற்சாலைகளுக்காக பிரத்தியேகமாக தயாரிக்கப்படும் ஜவுளிகள், மற்றும் குறிப்பிட்ட தொழிலுக்கெனவும், குறிப்பான நோக்கத்திற்காகவும்

வடிவமைக்கப்பட்ட ஜவுளிகள் தொழிலியல் ஜவுளிகள் என்று அழைக்கப்படுகின்றன.

**vii) கட்டுமான ஜவுளிகள் (Build Tech)**

கட்டடங்கள் மற்றும் கட்டுமானங்களில் பயன்படுத்தப்படும் ஜவுளிகள் கட்டுமான ஜவுளிகள் என அழைக்கப்படுகின்றன. கட்டுமானங்களின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும், வெளிப்படையான மற்றும் மறைக்கப்பட்ட பயன்பாடுகளுக்கு இத்துணிவகைகள் பயன்படுத்தப் படுகின்றன. ஒலி புகாத்தன்மை மற்றும் வெப்பக் காப்புக்காகவும், சூரிய ஒளி, காற்று, வெப்பம் மற்றும் நீர் ஆகியவற்றிலிருந்து கட்டடத்தினை பாதுகாப்பதற்காகவும் கட்டுமான ஜவுளிகள் பயன்படுத்தப்படுகின்றன.

**viii) ஆடை தொழில்நுட்ப ஜவுளிகள் (Cloth Tech)**

ஆடை தொழில்நுட்ப ஜவுளிகள் என்பது ஆடை மற்றும் காலணிகளில் அடிப்படையாகப் பயன்படுத்தப்படும் அனைத்து ஜவுளிக் கூறுகளையும் உள்ளடக்கிய தொழில்நுட்ப

ஜவுளிகளின் ஒரு பிரிவாகும். இது ஜிப்பர்கள்(Zippers), லேபிள்கள்(Lables), தையல் நூல்கள்(Sewing threads), எலாஸ்டிக்ஸ், இன்சுலேடிங் ஃபைபர் ஃபில்ஸ், வாடிங்ஸ்(Waddings), ஷூலேஸ்கள், டிராக்கார்ட்ஸ் வெல்க்ரோ(Velcro), இன்டர்லைனிங் துணிகள் உள்ளிட்ட வெளியில் தெரியாத செயல்பாட்டுப் பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

ix) **வீட்டு உபயோக ஜவுளிகள் (Home Tech)**

வீட்டு உபயோக ஜவுளிகள் என்பது, வீட்டின் உட்புற சூழலில் பயன்படுத்தப்படும் தலையணைகள் (Pillows), உள் அலங்கார வேலைப்பாடு, வீட்டு உபகரணங்கள், தரை விரிப்புகள், சூரியத் தடுப்புகள், மெத்தை இரகங்கள், தீத்தடுப்பு, தரை மற்றும் சுவர் உறைகள், வலுவூட்டப்பட்ட ஜவுளி கட்டமைப்புகள் (Reinforced structures), தூசி உறிஞ்சிகளுக்கான வடிப்பான்கள் (filters) போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

**x) கட்டுதல் சார் ஜவுளிகள் (Pack Tech)**

கட்டுதல் சார் ஜவுளிகள் என்பது தொழில்நுட்ப ஜவுளிப் பயன்பாடுகளில் மிக முக்கியமான பகுதிகளில் ஒன்றாகும். அதிக எடையிலான நெய்யப்பட்ட துணிகள், பைகள், சாக்குகள், ஜவுளி பேல்களுக்கான உறைகள் மற்றும் தரைவிரிப்புகளுக்கான உறைகள் ஆகியவை கட்டுதல் சார் ஜவுளிகளில் அடங்கும். மேலும் நீடித்த காகிதங்கள் (Durable Papers), தேநீர் பைகள் (Tea bags) மற்றும் பிற உணவு மற்றும் தொழில்துறை தயாரிப்பு உறைகளாகப் பயன்படுத்தப்படும் இலகுரக நெய்யப்படாத துணி வகைகளும் (Non-woven) இதில் அடங்கும்.

**xi) விளையாட்டு ஜவுளிகள் (Sports Tech)** விளையாட்டு ஜவுளிகள் என்பது தொழில்நுட்ப ஜவுளியின் பல்வேறு கிளைகளில் ஒன்றாகும். பல்வேறு விளையாட்டுகளில், வீரர்கள் அணியும் ஜெர்சி எனப்படும் டி-ஷர்ட்கள், கால்சட்டை, ஷார்ட்ஸ், தொப்பிகள், காலணிகள் போன்ற விளையாட்டு

**உடைகள் மற்றும் இதர அணிகலன்கள் விளையாட்டு ஜவுளிகள் என்று அழைக்கப்படுகின்றன.**




**1. Cloth Tech 2. Home Tech 3. Indu Tech**
**4. Sports Tech 5. PackTech 6. Build Tech.**


**தொழில்நுட்ப ஜவுளிகளின் உலக நிலவரம்**

தொழில்நுட்ப ஜவுளிகள், உலகத் துணித்தொழில் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. இது மொத்தத் துணிநூல் உற்பத்தியில் 31% ஆக உள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சியினை உணர்ந்து, தொழில்நுட்ப ஜவுளிகளுக்கு ஏற்றவகையில் நாடுகள் தங்கள் தொழில்களைச் சீரமைத்து வருகின்றன. இந்த மாற்றம், இந்திய ஜவுளித் துறையிலும் பாரம்பரியத் துணித்தொழிலிருந்து தொழில்நுட்ப ஜவுளிகளுக்கு மாற்றம் பெறுவதில் எதிரொலிக்கிறது.


பாதுகாப்பு (Protech), வாகனம் (Mobil-tech), தொழில்துறை (Indu-tech) மற்றும் விளையாட்டு (Sports-tech) ஆகியவை சார்ந்த தொழில்நுட்ப ஜவுளிப் பிரிவுகளுக்கான உலகச் சந்தை மதிப்பு 2018 ஆம் ஆண்டில் 165 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது. வாகனம் சார்ந்த தொழில்நுட்பம் (Mobiltech), தொழில்துறை சார்ந்த தொழில்நுட்பம் (Indutech) மற்றும் விளையாட்டு சார்ந்த

தொழில்நுட்பம் (Sports-tech) ஆகியன உலக தொழில்நுட்ப ஜவுளி தொழிலில் பெரும் பிரிவுகளாக 52% சந்தை மதிப்பைக் கொண்டுள்ளது. ஐரோப்பா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் சேர்ந்து உலகத் தொழில்நுட்ப ஜவுளிகள் சந்தையில் 50% உற்பத்தியையும் கொண்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப ஜவுளிகளின் பிரிவு வாரியான உலகச் சந்தை நிலவரம் பின்வருமாறு.




ஆதாரம் : வாசிர் அட்வைசர்ஸ் ஆண்டறிக்கை





ஆதாரம்: எக்சிம் வங்கி அறிக்கை

**தொழில்நுட்ப ஜவுளிகளின் இந்திய நிலவரம்**

உலக அளவில் பாரம்பரியம் மிக்க துணிநூல் மற்றும் இயற்கை இழை நெசவு நீண்ட காலமாக இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இந்தியா தொழில்நுட்ப ஜவுளி தொழிலிலும் முக்கியப் பங்கேற்பாளராக வளர்ந்து வருகிறது.

தொழில்நுட்ப ஜவுளிகள் இந்தியாவின் மொத்த ஜவுளி மற்றும் ஆடைச் சந்தையில் உத்தேசமாக 13 % மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.7% பங்களிப்பினை வழங்குகிறது. நவீனமயமாதல் மீதான இந்தியாவின் ஆர்வம் மற்றும் அதன் போட்டியிடும் தன்மை ஆகிய காரணிகள் இந்தப் பிரிவின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகிறது.

2018ஆம் ஆண்டில் தொழில்நுட்ப துணிநூல் சந்தையில் பிரிவு வாரியான விவரங்கள் பின்வருமாறு.





ஆதாரம் : வாசிர் அட்வைசர்ஸ் ஆண்டறிக்கை

இந்தியா உலக மக்கள் தொகையில் 2-வது பெரிய நாடாக உள்ளது. இருப்பினும், தொழில்நுட்ப ஜவுளிப் பிரிவில் இந்தியாவின் தனிநபர் பயன்பாடானது, ஒரு சில வளர்ந்த நாடுகளை ஒப்பிடுகையில் ஐந்தில் ஒரு பங்காக மட்டுமே உள்ளது. எனவே, உள்நாட்டுச் சந்தையில் தொழில்நுட்ப ஜவுளிகளின் வளர்ச்சிக்கு அதிக சாத்தியக்கூறுகள் உள்ளன. இந்தியாவில் தொழில்நுட்ப ஜவுளிகள் 12% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) வளரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் தொழில்நுட்ப ஜவுளிகள் ஏற்றுமதி 2020-21 ஆம் ஆண்டில் சுமார் 2,370 மில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது. இதன் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் 2015-16 ஆம் ஆண்டிலிருந்து 9% ஆக அதிகரித்துள்ளது. மேலும் இந்தியாவின் தொழில்நுட்ப ஜவுளிகள் இறக்குமதியின் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் 2015-16 ஆம்

ஆண்டிலிருந்து 2018-19 ஆம் ஆண்டுக்குள் 10 விழுக்காடு அதிகரித்துள்ளது.

2015-16 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் தொழில்நுட்ப ஜவுளிகளின் ஏற்றுமதி இறக்குமதி விபரங்கள் பின்வருமாறு:-





ஆதாரம் : வாசிர் அட்வைசர்ஸ் ஆண்டறிக்கை

## தமிழ்நாட்டில் தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான வாய்ப்புகள்

தமிழ்நாடு மிகப்பெரிய ஜவுளி மையமாக (Hub) விளங்குகிறது. கடந்த ஆண்டுகளில், தமிழ்நாடு, ஆடை தொழில்நுட்ப ஜவுளிகள் (Clothtech) மற்றும் வீட்டு உபயோக

ஜவுளிகளின் (Hometech) ஆகிய பிரிவுகள் மூலமாக தொழில்நுட்ப ஜவுளித் தொழிலில் வளர்ச்சி அடைந்துள்ளது. மாநிலத்தில் கொசுவலை உற்பத்தி நிறுவனங்கள் அதிக அளவில் கரூரில் அமைந்துள்ளன.

இந்தியாவின் பெரிய வாகன மற்றும் வாகன உதிரி பாகங்களுக்கான குழுமமாக (Cluster), தமிழ்நாடு உள்ளது. தமிழ்நாட்டில் அதிக மதிப்பிலான மற்றும் உயர் தொழில்நுட்பம் சார்ந்த வாகன தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான முதலீட்டினை ஈர்க்க ஏதுவான சூழல் நிலவி வருகிறது. இதே போன்று தமிழ்நாட்டின் 50% பாரம்பரிய துணிநூல் ஆலைகள், பின்னலாடை நிறுவனங்கள், நெசவுக் குழுமங்கள் ஆகியவையும் மற்றும் அதிக அளவிலான மருத்துவ உபகரணங்கள் தயாரிக்கும் நிறுவனங்களும் திருப்பூர், கோவை பகுதிகளில் உள்ள காரணத்தால், இப்பகுதிகள் மருத்துவ தொழில்நுட்ப ஜவுளி (Meditech) சார்ந்த முதலீடுகளுக்கான அளப்பரிய வாய்ப்புகளை வழங்குகின்றன.




2017-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு தொழில்நுட்ப ஜவுளிகள் சார்ந்த பயிற்சிகளை வழங்க கோவை சர்தார் வல்லபாய் படேல் பன்னாட்டுத் துணிநூல் மற்றும் மேலாண்மைப் பள்ளியினை நியமித்துள்ளது. இதற்கென தமிழ்நாடு அரசால் ரூ. 50.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 6. துணிநூல் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 6.1 ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் திட்டம் (SITP)

துணிநூல் தொழிலின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், அனைத்துவிதமான துணிநூல் உற்பத்தி நிறுவனங்களையும் உலகத்தரமான கட்டமைப்பு வசதிகளுடன் ஒரே இடத்தில் உருவாக்கும் விதமாகவும், ஒன்றிய அரசு "**ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் திட்டத்தினை (SITP)**" 2005-ஆம் ஆண்டில் தொடங்கியது.

இத்திட்டத்தின் நோக்கம், உலகத் தரத்திலான புதிய ஜவுளிப் பூங்காக்களை வளர்ச்சிக்கு சாத்தியமான இடங்களில் நிறுவுவதாகும். இத்திட்டமானது அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சி (PPP) என்ற முறையில் நிறைவேற்றப்படுகிறது. திட்ட மதிப்பீட்டில் ரூ.40 கோடி அல்லது 40% இவற்றில் எது குறைவோ, அத்தொகையை ஒன்றிய அரசு மானியமாக வழங்குகிறது. மேலும், திட்ட மதிப்பீட்டில், மாநில அரசு ரூ.9.00

கோடி அல்லது 9% இவற்றில் எது குறைவோ அத்தொகையை மானியமாக வழங்குகிறது.

மேற்காண் ஜவுளிப் பூங்காக்களில் நூற்பு, நெசவு (கைத்தறி மற்றும் விசைத்தறி), பதனிடுதல், பின்னலாடை, அலங்கார ஆடைகள், வீட்டு உபயோகத் துணிகள், மற்றும் பேக்கிங் செய்தல் உள்ளிட்ட ஜவுளித் தொழிலின் அனைத்து உற்பத்தி மற்றும் விற்பனை செயல்களும் ஒருங்கே அமையப் பெற்றுள்ளது.


ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 8 ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில் கீழ்க்காணும் நான்கு பூங்காக்கள் முழுவதுமாக நிறுவப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன.

1) உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, பல்லடம், திருப்பூர்.
2) ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, கரூர்.
3) மதுரை ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, வாடிப்பட்டி, மதுரை.

4) உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, குமாரபாளையம், நாமக்கல்.

எஞ்சியுள்ள கீழ்க்காணும் 4 ஜவுளி பூங்காக்கள் நிறுவுவதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

1) பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டுப் பூங்கா, காஞ்சிபுரம்
2) கில்ட் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, செங்கப்பள்ளி, திருப்பூர்.
3) SIMA பதனிடும் பூங்கா, கடலூர்.
4) பல்லவாடா தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, ஈரோடு.





பல்லடம் உயர் தொழிற்நுட்ப ப் பூங்காவிற்கு 29.06.2021 அன்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்கள் வருகை புரிந்து ஆய்வு




கரூர் ஜவுளிப்பூங்காவிற்கு 20.07.2021 அன்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்கள் வருகை புரிந்து ஆய்வு

### 6.2 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள்

மாநிலத்தில் சிறிய ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க முன்வரும் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் பொருட்டு, மாநில அரசால் ரூ.2.50 கோடி அல்லது திட்டத்தொகையில் 50% இவற்றில் எது குறைவோ அத்தொகை நிதியுதவியாக வழங்கப்படுகிறது. "சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள்" திட்டம் 2015 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற, சிறிய ஜவுளிப் பூங்காக்கள், 2 ஏக்கர் நிலத்தில், 3 தொழில் நிறுவனங்கள் கொண்டு நிறுவப்பட வேண்டும்.

### 6.3 திருப்பூரில் உள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

திருப்பூர் மாவட்டம், ஜவுளி பதனிடுதல் மற்றும் பின்னலாடை தொழிலின் மையமாக உள்ளது. நாட்டின் ஆயத்த ஆடை ஏற்றுமதியில் இம்மாவட்டம் முக்கியப் பங்கு வகிக்கிறது. இதன்மூலம், சுமார் 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட

நபர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி வருகிறது. ஜவுளி பதனிடும் ஆலைகளிலிருந்து வெளியேற்றப்படும் சாயக் கழிவு நீரினை சுத்திகரிக்க திருப்பூரில் 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதியுதவிகள் மற்றும் பல்வேறு வங்கிகளின் கடன் உதவிகள் மூலமாக இப்பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இந்த 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் மானியமாக ரூ.300.00 கோடியினை வழங்கி உள்ளன. இதில் ஒன்றிய அரசின் பங்கு ரூ.187.50 கோடியும், மாநில அரசின் பங்கு ரூ.112.50 கோடியும் ஆகும். 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், நானோ (Nano) அல்லது பிரைன் (Brine) மற்றும் மறுபயன்பாடு (Re-use) ஆகிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பூஜ்ஜிய நிலை கழிவுநீர் வெளியேற்றத்தை (Zero Liquid Discharge) உறுதி செய்வதற்கும், கூடுதல் இயந்திரங்களைக்

கொள்முதல் செய்து சுத்திகரிப்பு ஆலையில் நிறுவுவதற்கும், மாநில அரசு கூடுதலாக ரூ.203.29 கோடியினை வட்டியில்லாக் கடனாக ஒப்பளிப்பு செய்துள்ளது. ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.203.29 கோடியில் ரூ.202.87 கோடி பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சுத்திகரிப்பு நிலையங்கள் வங்கிகளிலிருந்து பெற்ற கடன் தொகையினை ஒரே தவணையில் செலுத்தி கடனை நேர்செய்யவும், நிறுவப்பட்ட இயந்திரங்களின் தரத்தினை உயர்த்தவும், ஒன்றிய அரசு ரூ.200 கோடியினை வட்டியில்லாக் கடனாக வழங்கியுள்ளது.

| வ. எண் | பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பெயர் | திறன் (மில்லியன் லிட்டர்கள்/ நாளொன்றுக்கு) |
|---|---|---|
| 1 | ஆண்டிப்பாளையம் | 4.50 |
| 2 | அங்கேரிபாளையம் | 10.00 |
| 3 | அருள்புரம் | 5.50 |
| 4 | சின்னக்கரை | 8.00 |
| 5 | ஈஸ்டர்ன் | 5.80 |

| வ. எண் | பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பெயர் | திறன் (மில்லியன் லிட்டர்கள்/ நாளொன்றுக்கு) |
|---|---|---|
| 6 | கள்ளிக்காடு | 3.00 |
| 7 | கரைப்புதூர் | 4.50 |
| 8 | காசிப்பாளையம் | 4.40 |
| 9 | குன்னங்கால்பாளையம் | 5.50 |
| 10 | மங்கலம் | 4.00 |
| 11 | மண்ணரை | 4.20 |
| 12 | முருகம்பாளையம் | 11.00 |
| 13 | பார்க் | 2.00 |
| 14 | ராயபுரம் | 5.50 |
| 15 | எஸ்.பெரியபாளையம் | 1.50 |
| 16 | சிறுபூலுவபட்டி | 5.00 |
| 17 | வீரபாண்டி | 12.00 |
| 18 | வேட்டுவபாளையம் | 1.50 |
| | **மொத்தம்** | **97.70** |



மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் 29.06.2021 அன்று அருள்புரம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வருகை புரிந்து ஆய்வு மேற்கொண்டார்

## 6.4 ஒருங்கிணைந்த பதனிடுதல் மேம்பாட்டுத் திட்டம் (Integrated Processing Development Scheme)

ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாடுத் திட்டமானது (IPDS) ஒன்றிய ஜவுளி அமைச்சகத்தால் 12-ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டது. ஜவுளித் தொழிலுக்குத் தேவையான சுற்றுச்சூழல் தரநிலைகளைப் (Environmental Standards) பூர்த்தி செய்ய உரிய வசதிவாய்ப்புகளை ஏற்படுத்தவும், புதிய பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (CETP) மற்றும் ஏற்கனவே உள்ள பதனிடும் குழுமங்களில் உள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்தவும், குறிப்பாகக் கடற்கரையோர மண்டலங்களில் புதிய பதனிடும் பூங்காக்கள் தொடங்கவும், அரசு ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டத்திற்கு (IPDS) அனுமதி அளித்துள்ளது.

**நோக்கம்:**

- சுற்றுச்சூழலுக்கு உகந்த பதனிடும் தரநிலைகள் (Processing Standards) மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்திய ஜவுளித் தொழில் உலக அளவில் போட்டியிட வசதி ஏற்படுத்தித் தருவதே ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

- ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டமானது (IPDS), நீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை தொடர்பாக, ஏற்கனவே உள்ள பதனிடும் குழுமங்களில், புதிய பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், மற்றும் புதிய பதனிடும் பூங்காக்கள் அமைக்க ஆதரவளிக்கும்.

**தகுதிக்கான நிபந்தனைகள்:**

இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுவதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு:

- குழு A - நீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் தொழில்நுட்பம் (கடல்சார், முகத்துவாரம், நதிக்கரை மற்றும் பூஜ்ஜிய திரவ வெளியேற்றும் அமைப்பு (ZLD) உட்பட).

- குழு B - புதுப்பிக்கத்தக்க மற்றும் பசுமை ஆற்றல் கொண்ட மின் உற்பத்தி ஆலைகள் போன்ற பொதுவான உட்கட்டமைப்புகளை அமைத்தல்.

- குழு C - பொதுவான வசதிகளான சோதனை ஆய்வகங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) மையங்கள்.

நாட்டிலேயே முதல் மாநிலமாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் பூஜ்ஜிய திரவ வெளியேற்றும் அமைப்பு (ZLD) நடைமுறையினை தமிழ்நாடு அரசு செயல்படுத்தியுள்ளது. ஜவுளி பதப்படுத்தும் ஆலைகள் பெரும்பாலும் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களாக இருப்பதால், பொதுகழிவு நீர்

சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கு தமிழ்நாடு அரசு நிதியுதவி அளித்து வருகிறது.

**நிதிப் பங்களிப்பு முறை:**

இத்திட்டத்திற்கு ஒன்றிய அரசு, மாநில அரசு, பயனாளிகள் மற்றும் வங்கிக்கடன்கள் மூலமாகப் பெறப்படும் நிதியானது முறையே 50 : 25 : 15 : 10 என்ற விகிதத்தில் இருத்தல் வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ், அரசுகள் திட்டங்களுக்கு அதிகபட்சமாக ரூ.150.00 கோடி வரை நிதி உதவி அளிக்கும்.

ஈரோடு, நாமக்கல், விருதுநகர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் 10 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை (CETP) அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை (DPR) தமிழ்நாடு அரசு இந்திய அரசிடம் அளித்துள்ளது. தென் மாவட்ட ஜவுளி பதப்படுத்துதல் குழுமம், விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டியில் ரூ.142.08 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு

பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவ ஏற்கனவே அனுமதி பெறப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் பரிசீலனையில் உள்ள திட்டங்கள் பின்வருமாறு.

| **வ. எண்** | **பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் / பொது கழிவுநீர் மேலாண்மை அமைப்பு** |
|---|---|
| **ஈரோடு மாவட்டம்** : | |
| 1. | கங்காபுரம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம். |
| 2. | பசுமை காளிங்கராயன் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் |
| 3. | வில்லரசம்பட்டி பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம். |
| 4. | சூரியம்பாளையம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம். |
| 5. | ஈரோடு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம். |
| 6. | காடையாம்பட்டி பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம். |
| 7. | காடையாம்பட்டி பொது கழிவுநீர் மேலாண்மை நிலையம். |

| வ. எண் | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் / பொது கழிவுநீர் மேலாண்மை அமைப்பு |
|---|---|
| **நாமக்கல் மாவட்டம்:** | |
| 8. | குமாரபாளையம் பசுமை காவேரி சாயமிடுதல் குழுமம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம். |
| 9. | பசுமை சுற்றுச்சூழல் கூட்டமைப்பு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம். |
| **காஞ்சிபுரம் மாவட்டம்:** | |
| 10. | அய்யம்பேட்டை முத்தியால்பேட்டை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம். |

கடந்த 06.09.2021 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டியில் ரூ.6.00 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய பொதுகழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் என அறிவித்தார்.

மேற்படி அறிவிப்பினைச் செயல்படுத்தும் பொருட்டு, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலூக்கா, அம்பாத்துரை ஊராட்சி, ஏ.இராமநாதபுரம் கிராமத்தில், பொது கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம் அமைக்க, 2 ஏக்கர் 29 சென்ட் நிலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 6.5 பிரதமரின் மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலங்கள் மற்றும் ஆடை பூங்கா (PM-MITRA)

பிரதம மந்திரியின் மெகா ஒருங்கிணைந்த ஜவுளிப் பகுதிகள் மற்றும் ஆடைப்பூங்காக்கள் திட்டம் (PM-MITRA) என்ற திட்டம், ஜவுளி நிறுவனங்களின் செயல்பாட்டின் அளவை அதிகப்படுத்துதல், மற்றும் ஜவுளித் தொழிலில் உள்ள அனைத்து நிறுவனங்களையும் ஒரே இடத்தில் அமைத்தலின் மூலம் போக்குவரத்துச் செலவினத்தை குறைத்தல், முதலீடுகளை ஈர்த்தல், வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் ஏற்றுமதியைப் பெருக்குதல் ஆகியவற்றின் மூலம்

இந்திய ஜவுளித் துறையை வலுப்படுத்தும் நோக்கில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டமானது 2027-28 ஆம் ஆண்டு வரை 7 ஆண்டுகளுக்கு, ரூ.4445 கோடி வரவு, செலவு திட்ட மதிப்பீட்டைக் கொண்டுள்ளது. இது நிர்வாகச் செலவினம் ரூ.30 கோடியை உள்ளடக்கியது.

PM-MITRA திட்ட விதிகளின்படி, வில்லங்கமற்ற, தொடர்ச்சியாக உள்ள குறைந்தபட்சம் 1000 ஏக்கர் நிலப்பரப்புடன் கூடிய பகுதிகளில், பூங்காவினை அமைத்திடல் வேண்டும்.

PM MITRA திட்டத்தைச் செயல்படுத்த மாநில அரசால் அமைக்கப்படும் சிறப்பு நோக்கம் கொண்ட முகமை (SPV) ஒரு சட்டப்பூர்வ நிறுவனமாக இருக்கும். (மாநில அரசின் 51% பங்கு மற்றும் மத்திய அரசின் 49% பங்குகளுடன்).

PM MITRA திட்டத்தின் கீழ் பெரிய அளவிலான ஜவுளிப் பூங்கா ஒன்று விருதுநகர் மாவட்டத்தில் நிறுவ மாநில அரசின் மூலம் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

## 6.6 மாநில ஜவுளி ஆலோசனைக் குழு

மாநில துணிநூல் தொழிலின் முன்னேற்றத்திற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கும் பொருட்டு தமிழ்நாடு அரசின் மூலம் 2016 ஆம் ஆண்டில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் "மாநில ஜவுளி ஆலோசனைக் குழு" அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில், கைத்தறி, விசைத்தறி, நூற்பு, பின்னலாடை மற்றும் ஆடைகள் உள்ளிட்ட துணிநூல் தொழிலின் அனைத்து பிரிவுகளின் பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை, கைத்தறி துறை மற்றும் துணிநூல் துறை என இரண்டாகப் பிரிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் துணிநூல் தொழிலுக்கு உந்துசக்தியினை வழங்கும் வகையில், மாநில ஜவுளி ஆலோசனைக் குழு மறுகட்டமைக்கப்பட்டு வருகிறது.

## 7. தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை

தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையின் கீழ் வழங்கப்படும் சலுகைகள்.

| வ. எண் | பிரிவு | வழங்கப்படும் ஊக்கத்தொகை |
|---|---|---|
| 1. | நூற்புப் பிரிவு | தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனமயமாக்கலுக்கு 2% வட்டிமானியம் வழங்கப்படுகிறது. |
| 2. | பதனிடும் பிரிவு | ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாடு திட்டத்தின் கீழ் பதனிடும் பூங்காக்கள் அமைத்திட அதிகபட்சமாக ரூ.37.50 கோடி அல்லது 25% இவற்றில் எது குறைவான தொகையோ, அது திட்டத் தொகையாக வழங்கப்படுகிறது. |
| | | அதிக அகலம் கொண்ட துணிகள் அச்சிடும் இயந்திரங்களை |

| வ. எண் | பிரிவு | வழங்கப்படும் ஊக்கத்தொகை |
|---|---|---|
| | | நிறுவிட அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் அல்லது 10% இதில் எது குறைவோ அத்தொகை முதலீட்டு மானியமாக வழங்கப்படுகிறது. |
| | | பூஜ்ஜிய திரவ வெளியேற்றத்துடன் கூடிய, சாயக் கழிவுகள் சுத்திகரிப்பு, சேமிப்பு மற்றும் வெளியேற்ற வசதி/ கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்திட, ரூ.5.00 கோடி உச்ச வரம்புக்குட்பட்டு 15% மூலதன மானியம் வழங்கப்படுகிறது. |
| 3. | பின்னலாடை, ஆயத்த ஆடை மற்றும் ஆடை வகைகள் பிரிவு | ஜவுளிப்பூங்கா அமைக்க ரூ.40 கோடி அல்லது 40% திட்டத்தொகை இதில் எது குறைவோ அத்தொகை வழங்கப்படுகிறது. |

| வ. எண் | பிரிவு | வழங்கப்படும் ஊக்கத்தொகை |
|---|---|---|
| 4. | தொழில் நுட்ப ஜவுளிகள் | ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா அமைக்க ரூ.9.00 கோடி உச்ச வரம்புக்குட்பட்டு 9% திட்டத்தொகை வழங்கப்படுகிறது. |
| | | தொழில்நுட்ப ஜவுளி சார்ந்த திட்டங்களுக்கு ஒன்றிய அரசு வழங்கும் மானியத்துடன் கூடுதலாக 6% வட்டி மானியம் வழங்கப்படுகிறது. |
| 5. | ஜவுளிப்பூங்கா | ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் திட்டத்தின் கீழ் ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க ரூ.9.00 கோடி உச்சவரம்புடன் 9% திட்டத் தொகை வழங்கப்படுகிறது. |





**மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் 19.07.2021 அன்று கிருஷ்ணகிரி கூட்டுறவு நூற்பாலையில் ஆய்வு செய்தார்**



**மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் 30.06.2021 அன்று தமிழ்நாடு பஞ்சாலை கழகத்தில் ஆய்வு செய்தார்**

## 8. நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்

தமிழ்நாடு துணிநூல் துறை, மாநிலத்தில் ஜவுளித் துறையின் அனைத்துப் பிரிவுகளிலும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடைவதற்கான கொள்கைகளை வகுத்து வருகிறது. இந்தக் கொள்கைகள் நிலையான வளர்ச்சி இலக்குகளைக் கொண்டுள்ளன.

தொடர்ச்சியான வேலைவாய்ப்பு மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடையும் நோக்கத்துடன் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு ஆகியவற்றை உருவாக்குவதற்குத் தேவையான உதவிகளை இத்துறை வழங்கி வருகிறது.

துணிநூல் மதிப்புச் சங்கிலித் தொடர் (Textile Value Chain) முழுவதிலும் உயரிய மற்றும் நிலையான (Sustainable) வளர்ச்சியை அடையும் நோக்கில் தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நிலையான வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துவதற்காகப் பல்வேறு குழுக்களுடன் கூடிய செயல்திறன் மிக்க உயர்மட்டக் குழுவை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. புதுமை முயற்சிகள், தொழில் மயமாக்கல் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றில் தமிழ்நாடு துணிநூல் துறை கவனம் செலுத்திவருகிறது.

துறையின் பணிகளுக்கு உறுதுணை புரியவும் வலுப்படுத்தவும், நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் முக்கியமானதாக அடையாளம் காணப்பட்ட திட்டங்களைக் கண்காணிக்கவும், ஒருங்கிணைப்பு அலுவலர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது (SDG).

துணிநூல் துறையுடன் தொடர்புடைய நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDG) குறிக்கோள்கள் பின்வருமாறு:-

- அனைத்து துணிநூல் நிறுவனங்களுக்கும் மலிவான மற்றும் சமமான வகையில், பொருளாதார மேம்பாடு மற்றும் மனித நல்வாழ்வை வலுப்படுத்தும் வகையில், தரமான உட்கட்டமைப்புகளை உருவாக்குதல்.
- 2030 ஆம் ஆண்டிற்குள், நிலையான வளர்ச்சியினை எய்திட தொழில்துறையின் உட்கட்டமைப்புகளைத் திறம்பட பயன்படுத்துதல், மற்றும் சுற்றுப்புற சூழலுக்கு

உகந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் ஆகிய இனங்களில் அனைத்து நாடுகளும் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

- உள்நாட்டுத் தொழில்நுட்ப மேம்பாடுகளுக்கு ஆதரவளித்தல், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள், தொழிற்பன்முகப்படுத்துதல் மற்றும் மதிப்பு கூட்டுதல் ஆகியவற்றுக்கு உகந்த சூழலை உறுதி செய்தல்.

ஜவுளித் துறையின் நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDG) குறிக்கோள்களை அடைய, பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன :

1. ஒருங்கிணைந்த ஜவுளி பதனிடுதல் மேம்பாட்டுத் திட்டம்.
2. சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் திட்டம்.

## 9. 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு

மாநிலஅரசு 2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் துணிநூல் துறைக்கு பின்வரும் விவரப்படி ரூ.2014.97 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2022-2023 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையின் கீழ், அதிக அகலமான துணி அச்சிடும் இயந்திரத்தை வாங்குவதற்கான மூலதன மானியம் | 100.00 |
| 2 | புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையின் கீழ் நூற்பாலைகளில் தற்போதுள்ள கதிர்களை நவீன | 500.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2022-2023 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | மயமாக்குவதற்கான வட்டி மானியங்கள் | |
| 3 | செயல்படாத கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழிவகை முன்பணம் | 100.00 |
| 4 | சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | 1314.86 |
| 5 | இதர செலவினங்கள் | 0.11 |
| **மொத்தம்** | | **2014.97** |

**ஆர். காந்தி**

**கைத்தறி மற்றும் துணிநூல்**

**துறை அமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.